தமிழக மக்களின்
விடியலுக்கு வழி...

# தமிழ்நிலம்

இதழ் : 14

**உள்ளே...**

சாதியத்தை
பார்ப்பனியத்தை
வேரறுப்போம்!

•

கலப்புத் திருமணங்களை
ஊக்கப்படுத்த வேண்டும்

•

தோள்சீலைப் போராட்டம்!

•

சாதி ஒழிப்பு அரசியல்
விடுதலையை
வென்றெடுப்போம்!

•

தியாகி இமானுவேல்
பேரவையின் நிறுவனத் தலைவர்
தோழர் பூ.சந்திரபோசு
அவர்களுடன்...

•

வேதங்கள் மிகை மதிப்பீட்டு
மயக்கம்!

தொடர்புக்கு...
**தமிழ் நிலம்**
1, வடக்குபட்டுச் சாலை,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
மேடவாக்கம், சென்னை 600 100
பேசி : 8608068002, 9443307681,
9677481149

# சாதியத்தை பார்ப்பனியத்தை வேரறுப்போம்!

**நீ**லச் சட்டை அணிந்துகொண்டு சாதி ஒழிப்பு நோக்கத்தை ஓங்கி ஒலித்தபடி தமிழக வரலாற்றில் முதன் முறையாக நூற்றுக்கும் மேற்பட்ட அமைப்புகள் இணைந்து பேரணி நடத்துகின்றன.

நூற்றுக்கும் மேற்பட்ட அமைப்புகள் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் உறுப்பியக்கங்களாக இணைந்துள்ளன. அத்தனை இயக்கங்களையும் சாதி ஒழிப்பு நோக்கி அணிதிரட்டுகின்ற பெருமுயற்சியே பேரணியும் மாநாடும்.

பேரணியின் மாநாட்டின் இலக்கும் சாதி ஒழிப்பே.

சாதி ஒழிப்பை எப்படி முன்னெடுத்துச் செயல்படுத்துவது என்பதில் கடந்த கால முயற்சிகளும் படிப்பினைகளும் மிக அதிக மானவை. சாதியால் அடக்கப்பட்ட மக்களின் செயற்பாடுகள் மட்டுமல்லாது, பொதுவுடைமைக் கட்சிகளும், திராவிடர் கழகமும், தமிழ்த்தேச இயக்கங்களும் பல வகையில் போராட்டங்களை நடத்தியிருக்கின்றன. மார்க்சிய இலெனினிய இயக்கங்கள் சாதிவெறிக்கெதிராகத் தாக்குதல் களையும், சாதி ஒழிப்புக்கென பல்வகைக் கருத்தரங்குகளையும் நடத்தியிருக்கின்றன. இவையெல்லாம் முழுமையாகக் கணக்கில் எடுக்கப்பட்டு அவற்றின் தொடர்ச்சியாகவே மாநாடு அடி எடுத்து வைக்கிறது.

சாதி ஒழிப்புக்கான முயற்சிகளில் கடந்த காலப் படிப்பினைகளோடு சாதியால் புறந்தள்ளப்பட்ட, அடக்கப்பட்ட மக்களை அதிகாரப் படுத்துவதற்கான திசைவழி முயற்சியாகவே மாநாட்டின் நோக்கங்கள் முன்னோக்கி நகர்ந்திருக்கின்றன.

மக்களை நசுக்கிக் கொண்டிருக்கிற முதலாளியத்தையும் அதனோடு பின்னிப்பிணைந்து அதிகார வெறியோடு மக்களைக் கூறு பிரித்து ஆட்சி செய்து கொண்டிருக்கிற - பார்ப்பனிய சாதிய வெறி அதிகாரங்களையும் அடியோடு வெட்டிச் சாய்க்கிற முயற்சிகளிலேயே சாதி ஒழிப்பின் இலக்கு முயற்சிகள் இணைந்திருக்க முடியும்..

இன்றைய அரசு பன்னாட்டு முதலாளிகளின் நலன்களுக்கான அரசாகவும் அவற்றின் சுரண்டல்களுக்கும், சூறையாடல்களுக்குமான அரசாகவே இருக்கிறது.

இந்திய அரசின் அதிகார வடிவங்களாகவே பார்ப்பனியமும், பன்னாட்டு முதலாளியமும் இருந்து வருகின்றன என்பதை நமக்கு முன்னோடிகளாகச் செயல்பட்ட அறிஞர்கள், புரட்சி நோக்கச் செயற் பாட்டாளர்கள் அனைவரும் அடையாளம் காட்டியிருக்கின்றனர்.

பன்னாட்டு முதலாளிகளுக்கான இந்திய அரசைத் தாங்கிப்பிடித்து நிலைப்படுத்துகிற தூண்களாகவே பார்ப்பனியமும் சாதியமும் செயலாற்றி வருகின்றன.

எனவே, இந்திய அரசதிகாரம் என்றாலே அதற்குள் பார்ப்பனியமும் சாதியமும் உள்ளடங்கியுள்ளதை நாம் உணரவேண்டும்

பல்வேறுபட்ட மொழித் தேசங்களின் மொழி அடையாளங்கள், இன அடையாளங்கள், பண்பாட்டு அரசியல் பொருளியல் உரிமைகளையெல்லாம் நசுக்கி, இல்லாமல் ஆக்குகின்ற பணிகளையே,. இந்திய அரசியல் அதிகாரம் செய்து கொண்டிருக்கிறது.

பார்ப்பனியச் சார்புடைய சமசுக்கிருதமும், சமசுக்கிருதச் சார்புடைய இந்திய அடையாளமும்,அவற்றுக்கானவையாகக் கட்டமைக்கப்படும் வரலாற்று, பண்பாட்டு அரசியல் பொருளியலுமாக உருவாக்கிக் காட்டி நிலைப்படுத்தி உறுதிப்படுத்துகிற வேலைகளையே இந்திய அரசு செய்து வருகிறது.

அவ்வகையில் பார்ப்பனியம் படிப்படியாகத் தன் ஆளுமையை இந்திய அரசதிகார அளவில் விரிவுபடுத்தி, வலுப்படுத்தி வந்திருக்கிறது

இன்றைக்கு இருக்கின்ற அதிகார வடிவிலேயே தொடக்கத்தில் பார்ப்பனியம் இருந்திடவில்லை.

தொடக்கக் காலங்களில் பார்ப்பனியம் மொழி அளவிலும் பண்பாட்டு அளவிலும் மட்டுமே தன் அதிகாரத்தைச் செலுத்தியிருந்த நிலை இருந்தது.

பின்னர், படிப்படியாகப் பேரரசர்கள், சிற்றரசர்கள் உள்ளிட்ட நிலவுடைமை ஆட்சியாளர்களைத் தன்வயப்படுத்தி அரசியல் அளவிலும் பொருளியல் அளவிலும்,வரலாற்று அடிப்படையிலும், பண்பாட்டு அடிப்படையிலும் தன் ஆளுமையை விரிவுபடுத்தி வலுப்படுத்திக் கொண்டது. ஆங்கிலேயர் வரவுக்குப் பின்னர் அவர்களை எதிர்ப்பதுபோல் நடவடிக்கைகளை ஒருபுறம் செய்து கொண்டே, மறுபுறும் அவர்களோடு இணங்கி உறவாடி அவர்களின் அதிகாரங்க ளோடு பங்குபெற்றுக்கொண்ட அதிகாரம் கொண்டதாக வளர்ந்த பின்னர் வல்லரசியங்களோடு ஒட்டி உறவாடி அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தியாவைப் பார்ப்பனிய உள்ளீடு கொண்டது என்பதாக அடையாளப்படுத்தி நிலைப்படுத்திக் கொண்டது.

இந்தியாவில் உள்ள மொழிகள் மட்டுமன்று ஐரோப்பிய மொழிகள் பலவற்றுக்கும் மூலம் சமசுக்கிருதமே என்று வல்லரசியங்கள் அனைத்தையும் நம்ப வைத்து இணக்கப்படுத்திக்கொண்டது பார்ப்பனியம். பார்ப்பனியம் என்னென்ன வகையிலெல்லாம் தன் ஆளுமையைக் கொண்டிருக்கிறது என்பதை அறிய வேண்டும்.

- வருண(வருணாச்சிரம) அடிப்படையில் குமுகத்தைக் கூறு படுத்தி அதில் பிராமண வருணத்தை அனைத்துக்கும் மேலானதாகக் காட்டிக்கொள்வதும், பிற்படுத்தப்பட்டோரைச் சூத்திரர்கள் இழிவான வர்கள் எனக் காட்டுவதும், தாழ்த்தப்பட்டவர்களை வருணங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் எனப் புறந்தள்ளுவதுமாக நிலைப்படுத்தி வைத்திருப்பது -
- சமசுக்கிருதத்தையே அனைத்து மொழிகளுக்கும் மூலமொழி, கடவுளின் படைப்பு மொழி என்பதாகவும் அதிலிருந்தே பிறமொழிகள் தோன்றின என்பதாகவும் அனைவரையும் நம்ப வைத்திருப்பதோடு, சமசுக்கிருதத்தையும் அதனுடன்முழுத் தொடர்புடைய இந்தி மொழியை மட்டுமே உயர்த்தி நிறுத்தி இருப்பதோடு, பிற மொழிகள் யாவும் இழி மொழிகள் என அரசியல் அதிகார வழியிலும் புறந்தள்ளி அவற்றின் பயன்பாடுகளை மறுப்பதும்,சமசுக்கிருத மொழி வளர்ச்சிக்காகவும், பாதுகாப்புக்காகவும் பல ஆயிரம் கோடி உருவா தொகையை வாரிவழங்குவதும், அதேபோது, பிறமொழிகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல் புறக்கணிப்பதுமான வகையில் செயல்பட்டு வரும் வகையிலேயே அனைத்து நிலைகளையும் அமைத்துக் காட்டி வருவது...
- வைதிகப் பார்ப்பனிய மத உருவாக்கமே இந்துமதத்தின் உள்ளீடு என்பதாக அமைத்து, இந்துமத வாழ்க்கை, பண்பாடு, வரலாறு

என்பனவற்றோடு உருவான அடையாளத்திலேயே அரசியலை அமைத்து ஒரே நாடு ஒரேமொழி ஒரே வாழ்வியல் முறை என அதிகாரத்தைத் தங்கள் கையில் வைத்துக் கொண்டு அடக்கி ஆண்டு வருவது...

- வேதங்கள், புராணங்கள், மனுதர்மம், அர்த்தசாஸ்திரம், பகவத் கீதை போன்ற சமசுக்கிருதக் குப்பைக் கூளங்களை வரலாறாகவும் புனிதத் தன்மை வாய்ந்தனவாகவும் காட்டி - அதிகாரத்தைக் கொண்டு கட்டாயப்படுத்திப் பரப்பி மக்களை மூளைச்சலவை செய்து முழுக்க அடிமைப்படுத்தி வைத்திருப்பது- கல்வியை முழுக்க முழுக்க மேற்சுட்டப்பட்ட பார்ப்பனியக் கருத்துப் பரப்புகிற தன்மைகளுக்குள் ஆக்கியிருப்பது...
- அப்படியான வகையிலேயே கல்வி நிறுவனங்களை அமைப்பது அதற்குத்தகவானவர்களையே கல்வித் தொடர்புடைய அமைச்சர்களாக, நிறுவனப் பொறுப்பாளர்களாக ஆக்குவது...
- மொழித் தேசங்களின் அனைத்து அடையாளங்களையும் சிதைத்து அழித்து அனைவரையும் `இந்தியர்' எனக் கட்டாயப்படுத்துவது, மொழித் தேசங்களின் சமயங்கள் சிறுதெய்வக் கருத்தாடல்கள் என அனைத்தையும் இந்துமதம் எனப் பிணைத்துக் காட்டி இந்தியர்கள் அனைவரும் இந்துக்கள் என்றும், தங்களை இந்து இல்லை எனக் கருதுவதும் பரப்புவதும் தேச விரோதப் பகைமைக் கருத்தாக அடையாளப்படுத்தி அடக்கி வருவதும்...
- பிள்ளையார் ஊர்வலம், கிருட்டிண செயந்தி, துர்கா பூசை என நூற்றுக்கணக்கில் விழாக்கள் எனும் பெயரில் மக்களை முழுக்க முழுக்க ஆரியக் கருத்தாடல்களுக்கு ஆளாக்கி மூடநம்பிக்கைகளைப் பரப்புவது - அவற்றிற்கு மாறாய்ப் பரப்பல் செய்கிறவர்களையும், பிற மதத்தினரையும் பகைவர்களாக்கி மத மோதல்களை, கலவரங்களை உருவாக்கி, மாற்றுக் கருத்து அறிஞர்களை, வெகு மக்களைக் கொலை செய்வதும்...
- பார்ப்பனியத்தை அதன் சூழ்ச்சிகளை அடையாளப்படுத்தி அவற்றுக்கு எதிராகப் பரப்பல் செய்கிறவர்கள் யாராக இருந்தாலும், ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு அடக்குமுறைச் சட்டங்களால் அடக்குவது அவ்வகையிலானவர்களான காந்தி தொடங்கி கல்புர்கி, கௌரி லங்கேசு உள்ளிட்ட நூற்றுக்கணக்கான குமுகத் தலைவர்களைத் திட்டமிட்டுக் கொலை செய்தது, செய்துவருவது...

- பார்ப்பன மாணவர்கள் தவிர பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட பிற சமய மாணவர்களை இந்திய அரசின் நடுவண் கல்விக்கூடங்களில் படிக்க விடாமல் செய்திட அவர்களே தற்கொலை செய்து கொண்டதுபோல் புனைந்து பல நூற்றுக்கணக்கான மாணவர்களைக் கொலை செய்து வருவது-
- ஒரு பக்கம் அறிவியலை வளர்ப்பதாகக் காட்டிக் கொண்டு மறுபுறம் நிலவுக்கு ஏவுகணை அனுப்புவது என்றாலும், அரசின் திட்டங்களைப் புதிதாகத் தொடங்கப்படுவது என்றாலும், அரை அம்மண ஆரியப் பார்ப்பனர்களைக் கொண்டு யாகங்கள் நடத்தி அனுப்புவதும், பிறப்பு முதல் இறப்பு வரையான நிகழ்வுகள் அனைத்திலும் சடங்குகள் என்கிற பெயரில் ஆரியப் பார்ப்பனர்களைக் கொண்டு சமசுக்கிருத மந்திரங்கள் ஓதி நடத்துவதும் -
- சங்கராச்சாரி, சாய்பாபா, ஜக்கிவாசுதேவ், ராம்தேவ் என்கிற பலர் பன்னாட்டுப் பங்குதாரர்களாகக் கொள்ளை அடித்துச் சூறையாடி வருபவர்களாகவும், ஆரியச் சார்பு இந்து மதப் பரப்புநர்களாகவும் இருக்கிற ஒரே காரணத்தினால் அவர்களை உயர்ந்தவர்களாகக் காட்டுவதும் அவர்களின் கால்களைத் தொட்டு இந்திய அரசின் தலைமைப் பொறுப்புள்ளவர்கள் கும்பிட்டு மக்களை அவ்வாறு செய்யத் தூண்டுவதும்...
- இராம லீலா என்கிற பெயரில் இராவணன இந்திய ஆட்சியாளர்களே தீயிட்டு அழித்திடுவதும், அதன்வழி ஆரியப் பார்ப்பனியத்திமிரை அரங்கேற்றுவதும், கங்கையைத் தாங்களே முழுமையாய்ப் பாழாக்குவதும், பின்னர் தாங்களே தூய்மைப்படுத்துவதாகக் கூறுவதும்....
- ஊரெல்லாம் தெருவெல்லாம் கோயில் கட்டுவது தொடங்கி இராமர் கோயில் கட்டுவதாகப் பல்லாயிரம் கோடிப் பணங்களைப் பாழாக்குவதுமான நடைமுறைகளும்....

- போன்று எண்ணற்ற பல நடைமுறைகள் பார்ப்பனியத்தை வளர்க்கிற அடிப்படையான நடைமுறைகள் ஆகும்.

அத்தகைய பார்ப்பனிய அரசியல் அதிகார உறுப்பினர்கள் யாவரும் பன்னாட்டு முதலாளிகளையும் அம் முதலாளிகளின் மூலதனக் குவியல் களையும் சுரண்டல்களையும், சூறையாடல்களையும் மறுப்பதோ எதிர்ப்பதோ இல்லை. முதலாளிகளுடன் கூட்டுச்சேர்ந்து அதிகார மற்றும் சுரண்டல்களில் பங்கு பெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலேயே அதிகார வகுப்பினர்

மக்களைப் பொருளியல் அளவிலும் அடிமைப்படுத்தி அடக்கி வைத்திருக்கின்றனர்

இதே தன்மையில்தான் சாதிய வல்லதிகாரக் கொடுமைகளும் பல ஆயிரம் ஆண்டுகளாய் நீடித்துக் கொண்டுள்ளது.

பிறப்பு வழிச் சாதிக் கூறுபாடுகள் இருப்பது மட்டுமன்றி வாழ்க்கை வழியும் கூறு படுத்தப்பட்டிருக்கிறது

வாழ்விடங்கள் வழிப் புறந்தள்ளி வைத்திருப்பதும்,

தீண்டாமை எனும் பெயரில் புறக்கணிப்பதும். இழிவுபடுத்துவதும்,

சாதிகளுக்குள்ளாக மட்டுமே திருமணங்கள் செய்யக் கட்டாயப்படுத்துவதும்,

சாதி மாறித் திருமணம் செய்து கொள்வோரைச் சாதி ஆணவப் படுகொலைச் செய்வதும்,

சுடுகாட்டிலும் சாதிவெறிப் பாகுபாடு செய்வதும்,

பொது வழியில் தாழ்த்தப்பட்ட மக்களின் இறப்பு ஊர்வலங்களைச் செல்ல விடாமல் தடுப்பதும்,

வாழ்விடங்களில் சுடுகாடுகளில் தீண்டாமைச் சுவர் எழுப்பிப் பிரித்து வைப்பதும்,

தாழ்த்தப்பட்டோர் வாழ்விடங்களைச் சேரிகள் என்றும் காலனிகள் என்றும் புறந்தள்ளி அமைத்து அடையாளப்படுத்துவதும்,

அங்கு எவ்வகை அடிப்படைத் தேவைகளையும் செய்து தர மறுப்பதும், தாழ்த்தப்பட்டவர்களை, பிற்படுத்தப்பட்டவர்களைக் கோயில் பூசாரிகளாக ஆகவிடாமல் மறுப்பதும்,

அப்படி அவர்கள் பூசை செய்வதால் கோயில் தூய்மை கெட்டுவிடும் என இழிவுபடுத்துவதும்,

சமசுக்கிருதம் கலக்காத தமிழ் மொழியில் குடமுழுக்கு உள்ளிட்ட பூசைகளைச் செய்ய மறுப்பதும்,

தமிழில் பூசை செய்தால் கோயில் தீட்டுப்பட்டுவிடும் எனக் கூறித் தமிழையும் தமிழ் பேசும் மக்களையும் இழிவு படுத்துவதும் நடைபெற்று வருகின்றன...

வருண அமைப்பு முறையைப் பார்ப்பனியம் எப்படிக் கையாண்டு மக்களைப் பிளவுபடுத்தி ஆளுமை செய்ததோ, செய்து வருகிறதோ அப்படியேதான் சாதியும் வருண மாதிரியிலேயே குமுகத்தைப் பிளவுபடுத்தி அடிமைப்படுத்தி வருகிறது

எனவே தமிழ் நாட்டிலும் சரி இந்திய அரசுக்கு உள்ளடக்கப்பட்டுள்ள மொழித் தேசங்களிலும் சரி அங்குள்ள மக்களிடையே பொருளியல் அளவில் சமநிலையை உருவாக்குகிற தேவை போலவே குமுக அளவிலும் சமன்மையை உருவாக்குவதும் தேவையாகின்றது

இரண்டின் சமநிலையையும் எப்படி உருவாக்குவது என்பதில்தான் குமுக மாற்றத்தை நோக்கமாகக் கொண்ட அமைப்புகளிடையே மாறுபட்ட கருத்துகளும் நடைமுறைகளும் உள்ளன.

பொதுவுடைமைக் கட்சியினர் பொருளியல் சமன்மை வந்து விட்டால் அனைத்தும் மாறிவிடும் என்று கூறி வகுப்பு (வர்க்க)ப் போராட்டமே அடிப்படைத் தேவை என்கிற நிலையிலிருந்து செயல்பட்டு வந்தனர், இப்போதும் அவ்வாறே செயல்படுகின்றனர்

சாதியைக் குமுகத்தின் மேற்கட்டுமானம் என்றும், குமுகத்தின் அடிக்கட்டுமானமாகிய, பொருளியல் கட்டுமான அமைப்பைச் சரி செய்கிறபோது மேற் கட்டுமானங்கள் எல்லாம் சரியாகிவிடும் என்றும் கருத்து கொண்டிருந்தனர், இன்றும் கருத்து கொண்டிருக்கின்றனர்

இன்னும் சொன்னால், அவர்களுள் பலர் தங்களின் சாதி அடையாளங்களிலிருந்தே கூட வெளியேறிடவில்லை

அவர்களுள் பலர் பார்ப்பனியத்தின் பல வடிவங்களில் உள்ள கொடுமைகளையும் எதிர்க்க மாட்டாமல் அமைந்து இருக்கின்றனர். அதாவது பார்ப்பனியம் காட்டிய வரலாற்றுப் பார்வையை அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளனர். பார்ப்பனியச் சடங்குகளையோ சமசுக்கிருதப் பண்பாட்டுக் கூறுகளையோ அவர்கள் விட்டொழித்திடவில்லை..

அதே நிலையில்தான் தமிழ் உணர்வாளர்கள் பலரும் தமிழ் மீட்பை மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ளனர். தமிழ் உணர்வு பெருகிவரும்போது, தமிழன் என்கிற உணர்வு மேலோங்கும்போது சாதி அழிந்துவிடும் எனக் கருதுகின்றனர்.

அப்படியான அவர்களுக்குள்ளும் அவர்கள் தங்கள் வாழ்வியலில், நடைமுறைகளில் சாதியை எதிர்த்திடுவதோ, மறுத்திடுவதோ இல்லை, பார்ப்பனிய வழக்குகளையும் மறுத்திடுவதில்லை.

எனவே, இத்தகைய சூழல்களில் சாதி ஒழிப்பு முயற்சிகள் எவ்வாறு நிறைவேறும் என்பதை அறிய வேண்டியுள்ளது.

பார்ப்பனியமும் சாதியமும் ஒரு காசின் இரண்டு பக்கங்கள் போன்று ஒன்றோடு ஒன்று உறவு கொண்டவை.

ஒன்றின் இணைவில் மற்றதை வளர்த்துக் கொள்ளும் தன்மை கொண்டவை.

ஒன்றை ஒன்று மறுப்பது போல் ஒரு புறத்தோற்றத்தைக் காட்டிக்கொண்டு மற்றதோடு இணைபிரியா உறவு கொண்டிருப்பவை.

சாதியை மறுப்பது போன்று பார்ப்பனியம் புற அளவில் சொன்னாலும் சாதியை நிலைப்படுத்தி வைத்திருக்கிற அளவில் அனைத்து முயற்சிகளிலும் அது செயல்படக்கூடியது.

அதேபோல்தான் பார்ப்பனியத்தை எதிர்ப்பதாகச் சாதிய தன்மையுடைய சிலர் பேசினாலும், உள்ளடக்கத்தில் பார்ப்பனிய அதிகாரங்களை ஏற்றுக்கொண்டு இயங்குபவர்களாகவே இருக்கின்றனர்.

சாதி தன் அதிகாரத்திலிருந்து மெலிவுபடுகிற சூழல் ஏற்படும்போது, அது அரசு அதிகாரச் சார்பிலும் அரசை அதிகாரப் படுத்தியிருக்கும் பார்ப்பனியச் சார்பிலும் தன் மெலிவை வலிவுப்படுத்தி நிலைப்படுத்திக் கொள்கிறது.

அதேபோல்தான் பார்ப்பனியமும் தன் அதிகாரப்பிடிகளுக்கு நெருக்கடி ஏற்படும்போது சாதிய உணர்வைக் கிளறிவிட்டு ஆதிக்கச் சாதியத்தைத் தன்வயப்படுத்திக் கொண்டு நிலைப்படுத்திக் கொள்கிறது.

இரண்டின் நிலைப்பாட்டிற்கும் அவற்றுக்குக் கிடைத்த மிகப்பெரும் அதிகாரக் கருவியாக அரசே இருக்கிறது.

இன்றைய அரசமைப்பு பார்ப்பனியத்தின் முழு ஆளுமை அதிகாரத்திற்கான அரசாக இருப்பதுபோலவே சாதியைக் காப்பாற்றுகிற, அதன் அதிகாரத்திற்குத் தகவான அரசாகவும் இருக்கிறது.

சாதி என்பது பெயர்களில் மட்டுமல்லாமல், வாழ்நிலையில் மட்டுமல்லாமல், வருணப் பாகுபாடு கொண்ட இந்து மத அமைப்பு முறைகளுக்குள்ளாக மட்டுமல்லாமல், அதிகார நலன்களுக்கான பொருளியல் உருவாக்க முறைகளைக் காப்பாற்றுகிற அரசதிகாரத்தோடும் இணைந்துள்ளது.

மொழி, வாழ்க்கைமுறை உள்ளிட்ட அனைத்து முறைகளிலும் உள்ள பார்ப்பனியம் சமன்மையற்ற வருணாச்சிரம அதிகாரத்தோடு இணைந்துள்ளது.

எனவே, சாதி ஒழிப்பு என்பது தீண்டாமை ஒழிப்பு என்கிற அளவோடுமட்டும் சிந்திக்கவும், செயல்படுவதுமான அளவீடு கொண்டது மட்டுமன்று.

காணாமை, தீண்டாமை என்கிற புறநிலைத் தாக்கங்களில் இன்றைய அளவில் சில நிலைகளில் தளர்வுகள் ஏற்பட்டிருந்தாலும் சாதி என்கிற குமுகப் பகுப்பு முறையை, அதன் அதிகாரக் கொடுமைகளை முற்றாக ஒழிக்க வேண்டுமானால் பார்ப்பனிய அதிகாரக் கொடுமைகளை ஒழிக்கும் செயல் திட்டங்களோடு இணைந்தே செயல்படுவதால்தான்முடியும்.

பார்ப்பனியம், சாதியம் ஆகிய இரண்டையும் அவை இணைந்து அதிகாரப்பூர்வ வெறியோடு இயங்கிக் கொண்டிருக்கிற அரசதிகாரத்தை வீழ்த்திப் புதிய மக்களாட்சி அரசமைப்பு முறையைக் கொண்டுவருவதன் வழியாகத்தான் செய்ய முடியும்.

இன்றைக்கு இருக்கிற பார்ப்பனிய - சாதிய அரசதிகார அமைப்பு முறையை வீழ்த்துவது என்பது அவ்வளவு எளிதான செயல்பாடுகளைக் கொண்டதன்று.

கருத்தளவில் மொழி, குமுக, பண்பாட்டு, வரலாற்று, அரசியல், பொருளியல் என அனைத்து நிலைகளிலும் உள்ள அதிகாரப் போக்குகளுக்கு எதிராக மிகப் பெரும் வீச்சான பரப்பல் முயற்சிகள் தேவை.

வெகு மக்களிடையே மேற்குறிப்பிட்ட எல்லாவகையிலும் விளக்கப்படுத்துகிற வகையில் அனைத்து வகை ஊடக வலுவிலும் பார்ப்பனிய - சாதிய அதிகார வெறித்தனங்களுக்கு எதிரான பரப்பல்களோடு இயங்கியாகவேண்டும்..

அவை ஒவ்வொன்றிலும் உள்ள பார்ப்பனிய - சாதிய அதிகார வெறிகளுக்கு எதிரான செயல்பாடுகளைப் படிப்படியாக வலுப்படுத்தி வீழ்த்துகிற முயற்சிகளை மேற் கொண்டாக வேண்டும்.

அனைத்து நிலைகளிலுமான அடிநிலை முயற்சிகளை வலுவாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் நிலையிலேயே, அரசதிகார நடுவங்களாக இருக்கிற ஆளுகை(நிர்வாக)த்துறைகளுக்குள்ளும், நயன்மை( நீதி)த்துறைகளுக்குள்ளும் சட்டமன்ற, நாடாளுமன்றத் துறைகளுக்குள்ளும் உட்சென்று அவற்றைப் பீடித்துள்ள முதலாளிய பார்ப்பனிய -சாதிய அதிகாரங்களை வீழ்த்தி, சமன்மை நோக்கம் கொண்ட அதிகார வடிவங்களை

நிறுவுகிற, அதற்காகப் போராடுகிற அணிகளை வலுப்படுத்தினால் மட்டுமே முடியும்..

இப்படியான, முறையான நீண்டகாலச் செயல்திட்டங்களோடான செயல்பாடுகளின் மூலமாகவே சாதியற்ற - பார்ப்பனிய அதிகார வெறிப் போக்கற்ற - முதலாளியக் கொடு நெறியற்ற ஒருபுதிய குமுக அரசமைப்பை - வாழ்க்கை முறையைக் கட்டியெழுப்ப முடியும்.

மொழி தேசங்களின் அதாவது தமிழ்நாட்டைச் சார்ந்த நாம் தமிழ்நாட்டளவில் அத்தகைய முயற்சிகளை வலுவாக முன்னெடுத்துச் செய்திடல் வேண்டும்.

அதேபோல் பிற தேசங்களில், அதாவது, கேரளத்தில், கருநாடகத்தில், ஆந்திரத்தில், வங்காளத்தில், மராட்டியத்தில் என்று அனைத்து நிலைகளிலும் அத்தகைய முயற்சிகளை செய்கிற அணிகளை ஊக்கப்படுத்திடவும், அவற்றோடு தோழமை உறவுகொண்டு அங்கெல்லாமும் செயல்பாடுகளை முடுக்கப்படுத்தி மாற்று அரசுகளை நிறுவுகிற முயற்சிகளுக்குத் துணை நிற்கவும் அவர்களிடமிருந்து துணை பெறவும் வேண்டும்..

அப்படியான விரிந்த முயற்சிகளாலேயே பார்ப்பனியத்தை - சாதியத்தை வீழ்த்த முடியும்..

அத்தகைய அணிதிரட்சிக்குக் கருப்புச்சட்டையின் அடையாளத்தோடு பெரியாரியக் கருத்தாளர்கள் மட்டுமல்லாமல்,

நீலச் சட்டையின் அடையாளங்களோடு உள்ள அம்பேத்கரிய உணர்வாளர்களும்,

செஞ்சட்டையோடு புரட்சி இலக்கு நோக்கியப் பொதுவுடைமைச் சிந்தனை செயல்பாட்டாளர்களும்

ஒருங்கிணைந்த பேரெழுச்சியை உருவாக்க வேண்டியுள்ளது.

பார்ப்பனியத்திற்குப் பாடை கட்ட,
சாதியத்திற்குக் குழி தோண்ட,

முதலாளியத்தை முடித்துக்கட்ட காலம் அறிந்து இடத்தால் செய்யப் பெறவேண்டிய முயற்சிகளுக்கு நம் கைகளைக்கோத்துப் பெரும் வீச்சோடு அணி சேர்ந்து கிளம்புவோம் வாருங்கள்...

- *பொழிலன்*



# கலப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்த வேண்டும்

• மு. அழகேசன்
கலப்புத் திருமணத் தம்பதிகள் சங்கம்

**க**லப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்த வேண்டும். அதுவே சாதி ஒழிப்பிற்குச் சரியான நடவடிக்கை என்ற தந்தை பெரியாரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த பெரியாரின் தொண்டரான அறிஞர் அண்ணா அவர்களால் 1967-ஆம் ஆண்டு சூன் மாதம் அரசின் நிதிநிலை அறிக்கைத் தொடரில் கலப்புத் திருமணங்களை ஊக்கப்படுத்தும் திட்டம் தமிழகச் சட்டசபையில் அறிவிக்கப்பட்டது. கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு 24 கேரட் கொண்ட 1 பவுன் தங்கப் பதக்கமும் தமிழக அரசின் பாராட்டுபத்திரமும் வழங்கப்படும் என்று அன்றைய தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார். அதுமட்டுமின்றி இந்தியாவிலேயே முதல்முறையாக இந்து திருமணச் சட்டம் திருத்தப்பட்டு சடங்குகள் இல்லாமல் நடத்தும் சீர்திருத்தத் திருமணங்களும் சட்டப்படி செல்லுபடியாகும் என்று சுயமரியாதைத் திருமணச் சட்டத்தையும் அறிஞர் அண்ணா அவர்கள் சட்டம் இயற்றி இந்திய ஒப்புதலையும் பெற்றார். மேற்கண்ட திருமணத் திட்டத்திற்காக முதன்முதலாக ஒவ்வொருவருக்கும் உருவா.1000/- வழங்க மாநில நிதிநிலை அறிக்கையில் தொகை (பட்ஜெட்டில்) ஒதுக்கினார். மேற்கண்ட திருமண உதவித்தொகை பெற தாழ்த்தப்பட்டச் சாதியினர் அல்லது தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கும் மற்றும் முற்பட்ட/பிற்பட்ட/ மிகவும் பிற்பட்ட வகுப்பினரிடையே நடக்கும் திருமணங்கள் மட்டுமே தகுதியுடையவை ஆகும் என அறிவிக்கப்பட்டது.

1970-ஆம் ஆண்டுமேற்கண்டதிட்டம் மாற்றியமைக்கப்பட்டு தங்கப்பதக்கம் அல்லது உருவா 200/- திருமண உதவித்தொகை பெறலாம் என அறிவிக்கப்பட்டது. 1973-ஆம் ஆண்டு மீண்டும்

மாற்றியமைக்கப்பட்டு 1½ பவுன் தங்கப்பதக்கத்துடன் உருவா. 200/- திருமண உதவித்தொகை மற்றும் சிறுதொழில் தொடங்க வட்டியில்லா கடன் தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கும் இலவச வீட்டுமனைகளில் ஒரு மனை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட சலுகைகள் சிறுதொழில் கடன் உதவி இலவசவீட்டு மனை போன்றசலுகைகள் கலப்புத் திருமண இணையர்களுக்கான சிறப்பான சலுகைகள் எதுவும் இல்லை. மாறாகத் தம்பதிகள் ஒருவர் தாழ்த்தப்பட்டவரோஅல்லது தாழ்த்தப்பட்ட பழங்குடியினராக இருந்தால் அவர்கள் பெயரில் மேற்கண்ட சலுகைகள் வழங்கலாம் என்று அறிவிக்கப்பட்டது.

1979ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தின் முதல்வராக ஆனதும் கலப்புத் திருமண இணையர்களுக்கான சலுகைகள் புதிய வேகமும், சிறப்புத் தன்மைகளும் பெற தொடங்கியது. உரு. 200/-க்கான திருமண உதவித்தொகையை உரு. 1000/-மாக உயர்த்தியும் கூடுதலாக ரூ.4000/-க்கான தொகை இணையர்களின் பெயரில் தேசிய சேமிப்புப் பத்திரமாக அளிக்கப்பட்டு 6 ஆண்டுகள் கழித்து அதன் முதிர்வுற்ற தொகை சுமார் ரூ.8000/-த்தை பெறும் வகையில் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆணையிட்டார்.

இந்நிலையில் சேலத்தில் கலப்புத் திருமண இணையர்களுக்காகத் தனியாக எங்களால் சங்கம் தொடங்கப்பட்டு இந்தியாவிலேயே முதன்முறையாக 1984-ஆம் ஆண்டு மே-21ஆம் நாள் கலப்புத் திருமண இணையர்களின் முதல் மாநில மாநாடு சேலத்தில் நடத்தப்பட்டது. மேற்கண்ட மாநாட்டில் கலப்புத் திருமண இணையர்களின் கோரிக்கைகள் அரசுக்குத் தீர்மானமாக அளிக்கப்பட்டது.

கோரிக்கை நிறைவேறாததால் தமிழகத்தின் மாவட்டத் தலைநகரங் களில் உண்ணாவிரதப் போராட்டங்கள் எனது சங்கத்தால் நடத்தப்பட் டுக் கோரிக்கைகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அதனையடுத்து அரசு அதிகாரிகளிடம் தொடர்ந்து அணுகியதில் கலப்புத் திருமண இணையர்கள் சலுகைகளில் ஒரு புதியவரலாறு படைக்கப்பட்டது. அதாவது 1986-இல் அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பணி அளிப்பதில் கலப்புத் திருமண இணையர்களுக்கு முன்னுரிமை அளித்து ஆணைபிறப்பித்தார். சமூகத்தாலும், குடும்பத்தாலும் வெறுக்கப்பட்டும், விலக்கி வைக்கப்பட்டும், அவமானப்படுத்தப்பட்டும் வாழ்ந்த கலப்புத் திருமண இணையர்கள் மேற்கண்ட அரசாணையின்படி அரசு வேலைபெறத் தொடங்கினர். அது இன்றைய நாள்வரை தொடர்கிறது.

*கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் 1988-ஆம் ஆண்டு முதல்வராக இருந்த பெரியாரின் தொண்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த முதல் முன்னுரிமையை நீக்கி 2-வது இடத்திற்குத் தள்ளிவைத்தார். அதன்விளைவாகக் கலப்புத் திருமணத் தம்பதிகள் வேலைவாய்ப்பினைப் பெறுவதில் ஒரு பின்னடைவைச் சந்தித்து வருகிறது.*

*1987-ஆம் ஆண்டு அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர்.-அவர்களிடம் கலப்புத் திருமணத் தம்பதிகளின் மகன், மகள்களுக்கு எம்.பி.பி.எஸ்., பி.இ. போன்ற தொழிற்படிப்புகளில் சிறப்பு ஒதுக்கீடு வழங்கவேண்டும் என்று எமது சங்கத்தின் சார்பில் கோரிக்கை அளிக்கப்பட்டது. கோரிக்கையை உடனே ஏற்று 6 மருத்துவ இடங்களையும், 5 பொறியியல் இடங்களையும், 2- சித்தமருத்துவ இடங்களையும் எம்.ஜி.ஆர். அவர்கள் கலப்புத் திருமணத் தம்பதிகளின் மகன், மகள்களுக்கு வழங்கி ஆணை பிறப்பித்தார். எம்.பி.பி.எஸ். இடங்களை அதிகரிக்குமாறு அளித்த கோரிக்கையை ஏற்று 12 இடங்கள் அளித்து ஆணை பிறப்பித்தார். மேற்கண்டச் சிறப்புச் சலுகையின் அடிப்படையில் கலப்புத் திருமணத் தம்பதிகளின் மகன், மகள்களுக்கு ஆண்டுதோரும் 12 இடங்களைச் சிறப்பு இடஒதுக்கீட்டின் கீழ் பெற்றனர். தன் தகப்பன் அல்லது தாயின் சாதியின் அடிப்படையில் சலுகை பெறாமல் சிறப்புச் சலுகையில் எம்.பி.பி.எஸ். இடங்களைப் பெற்றனர்.*

*2000-ஆம் ஆண்டு நடந்த மருத்துவப் படிப்பு ஒதுக்கீடு செய்வதில், மருத்துவக் கல்வித் துறையால் மேற்கண்ட சிறப்பு ஒதுக்கீட்டை அளிப்பதில் குளறுபடி ஏற்பட்டது. அதாவது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் முற்பட்ட வகுப்பினருக்கும் இடையே திருமண உறவின்மூலம் பிறந்தவர்களுக்கு முதலில் எம்.பி.பி.எஸ். அளித்து மீதி இருக்கும் இடங்கள் மட்டும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் இடையே திருமண உறவின் மூலம் பிறந்தவர்களுக்கு அளித்து குழப்பத்திற்குதீர்வு வேண்டி மேற்கண்ட 12- இடங்களுக்கும் மதிப்பெண் அடிப்படையில் தரவரிசையில் வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்றத் தில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கின் முடிவில் குரங்கு அப்பத்தைப் பங்கிட்டதைபோல வழக்கிற்குச் சம்மந்தமில்லாத வகை யில் சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த ஒதுக்கீடு 69% இடஒதுக்கீட் டிற்கு அப்பால் உள்ளதால், அதுசட்டப்படி செல்லுபடியாகது என்று 12 இடங்களையும் நீக்கம் செய்தது. மேற்கண்ட தீர்ப்பினை எதிர்த்துத் தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில்*

*மேல்முறையீடு செய்துள்ளது. வழக்கு இன்றுவரை நிலுவையில் உள்ளது.*

*அடுத்து, எமது கோரிக்கைகளில் ஒன்றான முற்பட்டவருக்கும், பிற்பட்ட/மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கும் நடக்கும் திருமணங்களையும் கலப்புத் திருமணத் தம்பதிகள் என அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று மேற்கண்ட வகைத் திருமணமும் கலப்புத் திருமணம் எனத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப் பிரிவினருக்குத் திருமண உதவித்தொகை மட்டுமே வழங்கப்படும். வேலைவாய்ப்புச் சலுகைகள் பெற இன்னும் ஆணைகள் பிறப்பிக்கப்படவில்லை.*

*இடைநிலை ஆசிரியப் பயிற்சியில் சேர வயது வரம்பு தளர்ச்சி, கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு அளிக்கவேண்டும் என எங்கள் சங்கம் கோரிக்கை விடுத்ததையடுத்து அரசு ஏற்று கீழ்க்காணுமாறு ஆணை பிறப்பித்துள்ளது.*

1. *தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினரின் வயதுவரம்பில் இருந்து கலப்புத் திருமணம் செய்து தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு ஆண்கள் பெண்களுக்கு 2 ஆண்டுகள் வயதுவரம்பு தளர்ச்சி.*
2. *பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு உள்ள பொதுவான வயதுவரம்பில் இருந்து கலப்புத் திருமணம் செய்துகொண்ட பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு 2 ஆண்டுகள் வயதுவரம்பு தளர்ச்சி.*
3. *முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு உள்ள பொதுவான வயதுவரம்பில் இருந்து கலப்புத் திருமணம் செய்துகொண்ட முற்பட்ட வகுப்பைச் சேர்ந்த வகுப்பினருக்கு 2 ஆண்டுகள் வயதுவரம்புத் தளர்ச்சியை அரசு அளித்துள்ளது.*

*விவசாய நிலங்களுக்கு வழங்கப்படும் இலவச மின்இணைப்பில் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்க அரசு அறிவித்துள்ளது.*

*நாடெங்கும் பரவலாக நடந்துவரும் ஆணவக் கொலைகளைத் தடுக்கும் முயற்சியாக உயர்நீதிமன்றத்தின் ஆணைப்படி ஒவ்வொரு மாவட்டத்தின் தலைமை இடத்திலும், மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் மாவட்ட சமூகநலஅலுவலர், மாவட்ட காவல் துறைக்கண்காணிப்பாளர் ஆகியோர் அடங்கிய தனிப்பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக்கோரிய கலப்புத் திருமணத்*

தம்பதிகள் மேற்கண்ட அலுவலர்களையோ அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாளரையோ அணுகி பாதுகாப்பினைப் பெறலாம்.

ராசசுதான் மாநில அரசு, கலப்புத் திருமண இணையர்களுக்கு உரு.5,00,000/- வழங்கிவருகிறது. மேலும் இந்தியாவில் பல மாநிலங்களும் கலப்புத் திருமண இணையர்களுக்கு குறைந்தது உரு.1,00,000/-இற்குமேல் வழங்கிவருகின்றன. ஆனால், தமிழக அரசு கலப்புத் திருமண இணையர்களுக்கெனத் தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யாமல் பெண்களுக்கென பொதுவாக அளிக்கப்படும் திருமண உதவியினைக் கலப்புத் திருமண இணையர்களுக்கும் அளித்து பட்டம் பெற்ற பெண் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் உரு.50,000/-மும் ஒரு பவுனும், பட்டம் பெறாமல் உள்ளபெண் கலப்புத்திருமணம் செய்துகொண்டால் ரூ.25,000/-மும் ஒரு பவுனும் வழங்கிவருகிறது. கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களில்கூட பட்டம் பெற்ற பெண்கள், பட்டம்பெறாத பெண்கள் என 2 வகையாகப் பிரித்து இந்தியாவிலேயே மிகக் குறைவான திருமண நிதி உதவிகள் வழங்குவது தமிழ்நாடு மட்டுமே என்பது மிகவும் வேதனையான ஒன்றாகும். ஆனால், எம்.ஜி.ஆர்., கலைஞர் ஆகியோரின் ஆதரவு பெற்றக் கலப்புத் திருமணம் இப்போது எல்லாவகையிலும் ஓரங்கட்டப்படுவது நாம் அனைவரும் வருத்தப்படவேண்டிய ஒன்றாகும்.

இந்திய அரசு சமூகநீதி மற்றும் ஆற்றல் மேம்பாட்டுத் துறையின்கீழ் செயல்படும் அப்பேத்கர் நிறுவனம் இந்தியா முழுவதும் உள்ள மொத்தமாக 500 பேர்களுக்கு மட்டும் உரு.2,50,000/-ம் 2013-ம் ஆண்டுமுதல் வழங்கிவருகிறது. தமிழ்நாட்டில் மக்கள் தொகைக்கேற்ப 36 பேருக்கு மட்டும் வழங்குகிறது. மேற்கண்ட நிதி வழங்குவதிலும் தமிழ்நாடு அரசுப் பதிவுத்துறை வழங்கும் இந்துத் திருமணப் பதிவுச்சான்று 1955-ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டத்தின்படி உள்ளதா எனத் தமிழக அரசிடம் விளக்கம் கேட்டுள்ளது, இதனால், கடந்த 2 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் மேற்கண்ட நிதிஉதவி யாருக்கும் வழங்கப்படவில்லை என்பது நாம் கவனிக்கவேண்டியதாகும்.

மேலும் கூடுதல் தகவல்களுக்கு,

மு. அழகேசன்,
தலைவர், கலப்புத் திருமணத் தம்பதிகள் சங்கம்,
தலைமை அலுவலகம், சேலம் - 636008
பேசி: 9442927157



# தோள்சீலைப் போராட்டம்!

• கண. குறிஞ்சி

**ம**னித குல வரலாற்றில் ஆடைக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. குகைகளில் வாழ்ந்த மனிதர்கள்கூடி ஏதோ ஒரு முறையில் அவர்களுக்கு வாய்ப்பான வகையில் உடலைப் போர்த்தி வாழ்ந்திருக்கிறார்கள். ஆடை என்ற தமிழ்ச் சொல், இலை எனும் பொருள் கொண்ட 'அடை' என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது.

சமுதாயம் முன்னேற, முன்னேற ஆடை வடிவத்திலும் பெரும் மாற்றங்கள் உருவாயின. "ஆள் பாதி, ஆடை பாதி" எனும் சொலவடை, இந்த நூற்றாண்டிலும்கூட, ஆடையின் முக்கியத்துவத்தை வெளிப் படுத்துவதாக உள்ளது.

"குற்றவாளிகளை அவர்களின் உடையிலிருந்தே அறிந்து கொள்ளலாம்" என ஒரு நாட்டின் தலைமை அமைச்சரே கூறும் அளவுக்கு ஆடையின் முக்கியத்துவம் இருக்கிறது.

அது மட்டுமல்ல, "ஜீன்ஸ் பேன்டு அணிந்து கொண்டு கீழ்ச்சாதி இளைஞர்கள் "நாடகக் காதல்" செய்து, உயர்சாதிப் பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்து கொள்கின்றனர்" என ஓர் அரசியல் கட்சித் தலைவரே கூறுகின்ற அளவுக்கு உடை என்பது சாதியோடு இணைத்துப் பார்க்கப்படுகிறது. அதுவும் "பெண்களின் உடைகள்தாம் பாலியல் குற்றங்களுக்குக் காரணம்" என்ற குற்றச்சாட்டு இந்த நூற்றாண்டிலும் எழுப்பப்படுவதைக் காண்கிறோம். எனவே, பெண்களின் உடை மீதான கண்காணிப்பு என்பது எப்பொழுதும் சாதியோடும், ஆணாதிக்கத்தோடும் பிரிக்க இயலாதபடி தொடர்ந்து வருகிறது.

அதன் ஒரு வெளிப்பாடுதான் தங்களின் மார்பகத்தை மறைத்து ï£èKèñ£è à¬ì à´ˆ¶õî Ÿè£ù "**தோள் சீலைப் போராட்டம்**." 19 ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் இருந்து இடைப்பகுதி வரை, ஏறக்குறைய 40 ஆண்டுகள் இதற்கான போராட்டம் நடைபெற்றது என்றால், சாதி மற்றும் ஆதிக்கத்தின் இறுக்கத்தை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

கேரளத்தின் பெரும் பகுதியையும், இன்றைய கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் சில பகுதிகளையும் உள்ளடக்கியது தான் இந்தியாவில் முன்பு இருந்த 550 சிற்றரசுகளில் ஒன்று திருவிதாங்கூர் பகுதி ஆகும். (சமசுதானம்) இப் பகுதியில் நம்பூதிரிப் பார்ப்பனர்கள்தாம் அனைத்து அதிகாரங்களையும் பெற்றவர்களாக இருந்தனர்.

"**ஒரு நம்பூதிரி** இருக்கும் இடத்திலிருந்து நாடார்கள் மற்றும் ஈழவர்கள் 36 அடி தொலைவிலும், புலையர்கள் 96 அடி தூரத்திலும், **நாயரிடமிருந்து** நாடர்கள் மற்றும் ஈழவர்கள் 12 அடி தூரத்திலும், புலையர்கள் 60 அடி தூரத்திலும் நிற்க வேண்டும்" எனும் அளவுக்குச் சாதிவெறி மேலோங்கி இருந்தது. அரசர் - நம்பூதிரிப் பார்ப்பனர் - நாயர் - வேளாளர் ஆகியோரைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் தீண்டப்படாதோர் என்றே கருதப்பட்டனர். அதனால் உயர்சாதி நம்பூதிரி - நாயர் - வேளாளர் தவிர பிற சாதியினர் குடை பிடிக்கக் கூடாது; செருப்பு அணியக் கூடாது; கிணறு, குளம், சாலை, சந்தை ஆகியவற்றைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டது. மேலும் ஆண்கள் யாரும் மீசை / தாடி வைத்துக் கொள்ளக்கூடாது. அப்படி வைத்தால் அதற்குத் தனி வரி கட்ட வேண்டும் என்ற கொடிய நிலை நிலவியது. தீண்டாமை / காணாமை / நடவாமை / கல்லாமை போற்ற தடைகள் அடுக்கடுக்காக விதிக்கப்பட்டிருந்தன. அதனால்தான், "சாதிப் பைத்தியங்கள் வாழும் பைத்தியக்கார விடுதி, கேரளம்" என விவேகானந்தர் குறிப்பிட்டார்.

ஆண்களுக்கே இவ்வளவு கட்டுப்பாடு என்றால் பெண்களைப் பற்றிப் பேசவும் கூடுமோ? பெண்கள்மீது அனைத்துக் கட்டுப்பாடு களும் திணிக்கப்பட்டன. உயர்சாதிப் பெண்கள் வீட்டை விட்டு அதிகம் வெளியே வரக்கூடாது. கோயில் போன்ற இடங்களுக்கு வரும் பொழுது முகத்தைப் பனைக்குடையால் மறைத்துக் கொண்டு வர வேண்டும். கணவன் மற்றும் நெருங்கிய உறவினர்களைத் தவிர யாரிடமும் பேசக்கூடாது. வெளியே செல்லும்பொழுது மேலாடை அணிந்து கொள்ளலாம். ஆனால் நம்பூதிரிப் பார்ப்பனர்கள் முன்னால் வரும்பொழுது, திறந்த மார்போடுதான் வரவேண்டும் என்பன போன்ற கடுமையான தடைகள் விதிக்கப்பட்டன.

உடைகள் அணிவதில் மிகக் கடுமையான விதிகளைக் கடைப்பிடிக்கு மாறு பெண்கள் வற்புறுத்தப்பட்டுள்ளனர். பார்ப்பனரல்லாத, கீழ் சாதிப் பெண்கள் தங்களின் மார்பகத்தை மறைக்குமாறு ஆடை எதுவும் அணியக் கூடாது எனவும், அப்படி ஆடை அணிந்தால் அதற்கு

"முலை வரி" கட்டவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. முலை வரி கட்டினால், அப் பெண்கள் பார்ப்பனர் அல்லாதோர் முன்னிலையில் மேலாடை அணிந்து கொள்ளலாம். ஆனால் வரி கட்டி இருந்தாலும், நம்பூதிரிப் பார்ப்பனர்கள்முன் வரும்பொழுது திறந்த மார்போடுதான் வரவேண்டும் என்ற முறை நிலவி வந்தது. அதன் அடிப்படையில் இதுகுறித்து உயர்வு நவிற்சியாக நிறையப் புனைவுகள் வரலாற்றில் பதிவாகி உள்ளன.

அவற்றில் ஒன்று, கேரளத்தில் உள்ள சேர்தலா எனும் கிராமத்தில் நடைபெற்றதாக ஒரு நிகழ்வு சுட்டிக் காட்டப்படுகிறது. அந்தக் கிராமத்தில் நான்கேலி எனும் ஈழவப் பெண், மார்பகத்தை மறைத்து மேலாடை அணிந்ததால், அரசு அதிகாரிகள் அவரிடம் வரி கேட்டதாகவும், சுயமரியாதை மிக்க அந்த ஏழைப் பெண் தன் மார்பகங்களை வாளால் அறுத்து, வாழை இலையில் வைத்துக் கொடுத்துத் தன் எதிர்ப்பைத் தெரிவித்ததாகவும், அதிக இரத்தப் போக்கால் அவர் மரணம் அடைந்ததாகவும், அவர் இருந்த இடம் "முலைச்சி பறம்பு" என வழிபாட்டிடமாக மாறியது எனவும், தன் அன்பிற்குரிய மனைவி மாண்டது கண்டு அவளின் கணவன் சிறுகண்டன் தீயில் பாய்ந்து உயிர் துறந்தான் எனவும்,

செய்திகள் பதிவாகி உள்ளன. ஆனால் இவற்றின் நம்பகத்தன்மை கேள்விக்கு உரியதாக இருந்ததால், இச் செய்திகள் அரசு அங்கீகரித்த வரலாறாக ஏற்கப்படவில்லை என அறிய வருகிறோம்.

இருப்பினும், ஈழவர் சமூகப் பெண்களில் நூறு விழுக்காட்டினரும், முக்குவர் சமூகப் பெண்களில் பெரும்பாலானோரும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இடுப்புக்கு மேலும் மூட்டுக்குக்கீழும் உடை ஏதும் உடுத்தக் கூடாது என வலியுறுத்தப்பட்டனர். பெண்கள் மேலாடை அணிவது மேல் சாதியினராகிய நாயர் சமுதாயத்தவரை அவமதிக்கும் செயலாகக் கருதப்பட்டது. எனவே ஈழவர் மற்றும் 18 கீழ்சாதிப் பெண்கள் மேலாடையின்றி திறந்த மார்பகத்தோடு இருந்துள்ளனர் என்பதற்கு நிழற்பட ஆதாரங்கள் உள்ளன.

ஆனால், நாடார் குலப் பெண்கள் தங்கள் மார்பை மறைத்துத் தோள் சீலை உடுத்தி வந்துள்ளனர் என்பதை 1846 ஆம் ஆண்டில் "ரெக்லண்டு" எனும் கிறித்துவப் பாதிரியார் எழுதிய கடிதம் மூலம் அறியலாம் - எனத் தென்னிந்தியச் சமூகவரலாற்று ஆய்வு நிறுவனம் பதிப்பித்த, எஸ்.இராமச்சந்திரன் மற்றும் அ.கணேசன் ஆகியோர் எழுதிய, "தோள் சீலைக் கலகம் - தெரிந்த பொய்கள் / தெரியாத உண்மைகள்" எனும் நூல் குறிப்பிடுகிறது.

மேலும் சான்றோர் எனப்பட்டோரே "சாணார்" என அழைக்கப் படுகின்றனர் எனவும், முதன்முதலில் புராடெஸ்டெண்டு கோயில் கட்டுவதற்குச் சான்றோர் குலத்தவர் நிலம் அளித்தனர் எனவும், சான்றோர் குலத்து நாடன்மார் பலர், நில உடைமையாளர் களாகவும், ஆண்ட பரம்பரையினராகவும் இருந்துள்ளனர் எனவும், சாணார் குலப் பெண்டிர் திறந்த மார்போடு இருக்கவில்லை எனவும், உயர்சாதி நாயர் சமுதாய மகளிர்போல தோள்சேலை அணியும் உரிமை மட்டுமே அவர்களுக்கு மறுக்கப்பட்டது எனவும் மேற்காண் நூலாசிரியர்கள் பதிவு செய்கின்றனர். இவர்களின் பல்வேறு கருத்துகளை மார்ஷல் நேசமணி மறுத்து, மாற்றுக் கருத்துகளைப் பதிவு செய்துள்ளார் என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

"தோள் சீலை" என்பது ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் மட்டுமே அணிவதற்கு உரிமை உடைய ஆடையாகும். பெண்களின் கச்சின் மீது அணியும். மேல்முண்டு என்பதையே தோள்சீலை எனக் குறிப்பிடுகின்றனர். அதைப் பிற சாதிப்பெண்கள் அணிவது, சாதிக் கட்டுமானத்தை மீறிய செயலாகக் கருதப்பட்டது. எனவேதான் 1819-ஆம் ஆண்டிலேயே மூலம் திருநாள் இராம வர்மா எனும் அரசர் கீழ்ச் சாதி மற்றும் நாடார் சமூகப் பெண்கள் மேலாடை அணியக் கூடாது என அறிவிக்கை செய்தார். இதை எதிர்த்துத் தோள் சீலைக் கலவரம் மூன்று கட்டங்களாக நடைபெற்றதாக வரலாறு பதிவு செய்கிறது.

1822முதல் 1823வரை முதல் கட்டமாகவும், 1827முதல் 1829வரை இரண்டாம் கட்டமாகவும், 1858முதல் 1859வரை மூன்றாம் கட்டமாகவும் இப் போராட்டங்கள் நடைபெற்று உள்ளன.

'கிருத்துவ மதத்திற்கு மாறினால், பெண்கள் குப்பாயம் போன்ற நீண்ட மேலாடை அணிந்து கொள்ளலாம்' என ஆங்கில அதிகாரி ஜான் மன்றோ காலத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன் காரணமாக ஒடுக்கப்பட்ட சாதியைச் சார்ந்த பெண்கள் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள பெருவாரியாகக் கிருத்துவ மதத்தில் சேர்ந்தனர்.

இதனால் எரிச்சலுற்ற நாயர் - வேளாளர் போன்ற உயர்சாதியினர் 1822 மார்ச் திங்களில் பெருங் கலவரத்தைத் தொடங்கினர். கொத்தனாவிளை என்ற பகுதியில் தொடங்கிய கலவரம் ஒவ்வோர் ஊராகப் பரவத் தொடங்கியது. கிருத்துவ நாடார் பெண்களின் ரவிக்கைகள் கிழிக்கப்பட்டு, மரங்களில் தொங்கவிடப்பட்டன.

மீண்டும் 1829 ஆம் ஆண்டில் திருவிதாங்கூர் அரசு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. சாணார் மற்றும் ஈழவர் சமூகத்துப் பெண்கள்

நாயர் பெண்டிர் அணிவதைப் போன்று மார்பை மறைக்கும்படி துப்பட்டா (சால்வை) போன்ற உடையணிய அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும், அதே நேரத்தில் கிருத்துவ மதத்துக்கு மாறிய சாணார் பெண்டிர் அணிந்து வருகிற குப்பாயம் போன்ற உடையை, இந்து மதத்திலுள்ள சாணார் பெண்டிர் அணிவது அனுமதிக்கப் படுகிறது எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப் பட்டிருந்தது. இந்த ஆணையின் பொருள், தோளுக்கு மேல் துண்டு அணிவது போலச் சல்லாத் துணியோ அல்லது வேறு எவ்வகைத் துணியோ அணியக்கூடாது என்பதுதான்.

இந்தக் காலக்கட்டத்தில் குமரி மாவட்டத்தில். சாமித்தோப்பு எனும் இடத்தில் நாடார் சமுதாயத்தில் தோன்றிய ‘முடிசூடும் பெருமாள்’ எனவும், ‘முத்துக் குட்டி சுவாமிகள்’ எனவும் அழைக்கப்படும் **வைகுண்டர்** எனும் சமூகச் சீர்திருத்தவாதி ( 1809 -- 1851 ) சாதி பேதமின்றி ஊர்ப் பொதுக் கிணறுகளில் குளிப்பதற்கும், சேர்ந்து உணவருந்தவும் ஏற்பாடு செய்தார். மேலும் சாணார் சமூகப் பெண்கள் எக்காரணம் கொண்டும் திறந்த மார்போடு இருக்கக் கூடாது எனத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இவரின் மார்க்கம், நாடார் சமூகத்தினரிடையே பெரும் தாக்கத்தை உருவாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், சந்தை போன்ற பொது இடங்களில் ரவிக்கை அணிந்து, அதன் மேல் மெல்லிய துணியும் அணிந்து வந்த கிருத்துவ நாடார் பெண்களின் ரவிக்கையைக் கிழித்தும் , தாலியை அறுத்தும், நாயர் சமூகத்தினர் அவமானப்படுத்தத் தொடங்கினர். அப்படித் தாலி அறுக்கப்பட்ட அகத்தீசுவரத்திற்கு அருகிலுள்ள சந்தை, “தாலியறுத்தான் சந்தை” என்றே வழங்கப்படுகிறது.

இதன் பிறகு 1857-ஆம் ஆண்டில் வட இந்தியாவில் .நடைபெற்ற “சிப்பாய்க் கலகம்” காரணமாக, இந்தியாவின் ஆட்சி, ஆங்கிலேயக் கிழக்கிந்திய நிறுவனத்திலிருந்து இலண்டனில் உள்ள விக்டோரியா பேரரசியிடம் சென்று சேர்ந்தது. சிப்பாய்க் கலகம், மத உணர்வுகள் தொடர்பாகவே வெடித்தது என்பதைப் புரிந்து கொண்ட ஆங்கிலேய அரசு இந்தியக் குடிமக்களின் மத உணர்வுகளிலும், வழிபாட்டு முறைகளிலும், பண்பாட்டு மரபுகளிலும் தலையிடாது என்ற உறுதிமொழியை விக்டோரியா பேரரசி மூலம் அறிவித்தது. இது நாடெங்கும் மக்களிடையே பரவலாக விளம்பரப் படுத்தப் பட்டது. இதனால் நாயர் - வேளாளர் சமூகத்தினர் ஊக்கம் பெற்றனர். பிரித்தானிய அரசியின் அறிவிப்புத் தங்களுக்கு ஆதரவாக இருப்பதாக அவர்கள் கருதினர்.

*1859 டிசம்பர் 30ஆம் நாள் நாகர்கோயில் அருகே கிருத்துவ நாடார் சமூகப் பெண்டிர் தாக்குதலுக்கு ஆளாகி அவமானப்படுத்தப் பட்டனர்.நாயர் - வேளாளர்கள் கூட்டுச் சேர்ந்து வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். காவல்துறை ஆய்வாளரும்,அரசு ஊழியரும் இணைந்து நெய்யாற்றங்கரை அருகில் கிருத்துவ நாடார் குலப் பெண்களின் ஜாக்கெட்டைக் கிழித்து அகற்றி, மரத்தில் தொங்க விட்டனர்.*

*ஊர் ஊராகக் கலவரம் பரவியது. இதற்கு முன்னர் நிகழ்ந்தது போலன்றி இந்து / கிருத்துவ நாடாரின மக்கள், மதம் கடந்து ஒரணியில் திரண்டு வந்து, நாயர் -- வேளாளர் கூட்டணியினருக்குச் சரியான பதிலடி கொடுத்தனர். இதனால் நாயர் - வேளாளர் சமூகத்தினருக்கு அச்சம் ஏற்பட்டுப் பின் வாங்கினர்.*

*தோள்சீலைச் சிக்கலில் தொடக்க நிலையிலேயே நாடார் சமூகத்தின் உயர் அடுக்குகளில் இருந்தவர்கள் ஈடுபாடு காட்டியிருந்தால், வெற்றி அப்பொழுதே கிட்டியிருக்கும். ஆனால் அப்படி நடக்காமல் போனது பேரிழப்பானது. இப்பொழுது நாடார் உயர் அடுக்கு / கடை அடுக்குகளில் இருந்தவர்களும், இந்து / கிருத்துவ நாடார் மக்களும் ஒற்றுமையோடு போராடியதால், அவர்களுக்கு வெற்றி கிட்டியது கருதத் தக்கதாகும்.*

*26/07/ 1859 அன்று திருவிதாங்கூரைச் சார்ந்த உத்தரம் திருநாள் அரசர், சாணார் சமூகப்பெண்கள் தோள்சீலை அணிவதை ஏற்றுக் கொண்டு, அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். தோள்சீலை குறித்த சிக்கல் அத்துடன் முடிவடைந்தது.*

*1865-ஆம் ஆண்டில் ஈழவர் போன்ற பிற சாதியினரைச் சேர்ந்த பெண்டிரும் இத்தகைய உடை உடுத்தும் முறையைப் பின்பற்றலாம் என இறுதியாகத் திருவிதாங்கூர் அரசர் ஆயில்யம் திருநாள் அறிவித்தார்.*

*தோள்சீலைப் போராட்டம், வேளாளர் - நாயர் குலத்தவர்களுக்கும், நாடார் குல மக்களுக்கும் இடையே நடைபெற்ற போராட்டம். இது உயர் சாதியினருக்கு எதிரான போராட்டம் மட்டுமல்ல, ஈழவர், புலையர் போன்ற ஒடுக்கப்பட்ட சாதியைச் சார்ந்த பெண்களின் மானங்காத்த போராட்டமும் ஆகும்.*


*எனவே தோள்சீலைப் போராட்டம், வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமுனைப் போராட்டம் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.*

●

## வாங்கிவிட்டீர்களா?...

### திருக்குறள் 2050 ஆண்டுகள்... அடைவுகள்...


வெளியீடு : **பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு**
விலை : உரு. 900
தொடர்புக்கு : பொழிலன்,
மே/ பா பாவலரேறு தமிழ்க் களம்,
1 வடக்குப்பட்டுச் சாலை
மேடவாக்கம் கூட்டுச் சாலை
சென்னை 600100
பேசி : 8608068002




### தமிழோசை, தமிழாரம் நூல் தொகுப்புகள்

(**திருக்குறள் மணி புலவர் இறைக்குருவனார்** அவர்களின் படைப்புகள் முழுமையான தொகுப்பு)


வெளியீடு : இறையகம்
8/700 இரண்டாவது முதன்மைச் சாலை,
சிபிஐ குடியிருப்பு, மேடவாக்கம்,
சென்னை 600100
9884014445, 9962101000




### களப் போராளி இமானுவேல் சேகரனார்


**சி. பசுமலை**

விலை : உரு 150
வெளியீடு : தமிழியம்
3/6 2/535 பகத்சிங் சாலை
கோவிந்தபுரம் பரமக்குடி 623 707
முகவை மாவட்டம்
9942130598




### மண்ணுக்குள் எவ்வுயிரும் - *சி பசுமலை*

விலை : உரு 120
வெளியீடு : தமிழியம்
3/6 2/535 பகத்சிங் சாலை
கோவிந்தபுரம் பரமக்குடி 623 707
முகவை மாவட்டம்
9942130598



# சொற்குவையின் தோற்றமும் தேவையும்

• முனைவர் மா. பூங்குன்றன்

**சொ**ற்கள் மொழியின் முதன்மையான உறுப்பு. தமிழ்மொழியின் தோற்றம் அது இயங்கும் முறைகளைப் பற்றித் தொல்காப்பியம் முதல் இன்றைய மொழியியல் நூல்கள் வரை விளக்கங்கள் கூறப்படுகின்றன.

ஒவ்வொரு சொல்லும் ஒரு பொருளைக் குறிப்பதோடு மட்டுமல்லாது அச்சொல்லை மேலும் பகுத்துப்பார்க்கும்போது, பல செய்திகளைத் தெரிவிக்கின்றன என்று ஒரு கல்லை உவமை காட்டி, மொழியறிஞர் மார்க்சுமுல்லர் கூறுவார்.

பல்வேறு காரணங்களுக்காக நிலம் தோண்டப்படும்போது சிதறும் ஒரு கல்லைப் பள்ளி செல்லும் சிறுவன் எத்திக் கொண்டு செல்வான். அதே கல் ஒரு மண்ணியல் (geologist) அறிஞரிடம் கிடைத்தால் அக்கல்லை உடைத்துப் பார்த்து அதிலுள்ள மாழைகள்; கனிமப் பொருள்கள் மட்டுமல்லாது அது எங்கிருந்து வந்திருக்க வேண்டும் என்பதுடன் அதனுடைய காலம் ஆகியவற்றை அவர் கூறி விடுவார்.

அதேபோல் ஒரு சொல்லைப் பகுத்துப் பார்த்தால் அது தோன்றிய காலம், அக்காலச் சூழ்நிலை அக்கால மாந்தரின் வாழ்முறைகளையும் அறிந்து கொள்ள முடியும் என்று அவர் கூறினார்.

அதை அவ்வாறே உள்வாங்கிக்கொண்டு மொழியாய்வை மாந்தவியலோடு சேர்த்து ஆராய்ந்தவர் மொழிஞாயிறு பாவாணர். வேர்ச் சொல்லின் மூல ஆய்வின்வழி அவரின் சொற்பிறப்பியல் ஆய்விற்குப் பல கோணங்கள் கிடைத்தன. இன ஆய்விற்கு அவரின் மொழியாய்வு அழைத்துச் சென்றது. பிற மொழிகளில் உருவாக்கப்பட்ட சொற்பிறப்பியல் நெறிமுறைகளைக் கடந்து தமிழ்மொழியின் சொற்பிறப்பியல் பல தரவுகளைக் கொடுத்தது.

தமிழ் மொழியும் தமிழினமும் அந்த அளவுக்கு ஆய்வு செய்யத்தக்க வளங்களையும் தொன்மையையும் பெற்றிருந்தன என்பதும் ஒரு காரணம்.

சொற்களை உடைத்துப் பார்க்கும்போதே அதில் அமைந்துள்ள சொல்லாக்க நெறிகள் வெளிப்படும். அவை மொழிக்குமொழி மாறக்கூடியவை.

மார்க்சுமுல்லர் கூறுவதுபோல், எந்த மொழியிலும் சொற்கள் தனித்துத் தோன்றுவது இல்லை. ஒரு சிறு சொல்லிலிருந்தோ

தோன்றுவதற்குமுன் கருத்து ஒன்றை அடிப்படையாகக் கொண்ட வேர்மூலத்தினின்றோ சொற்கள் தோன்ற முடியும்.

அவ்வாறு தமிழ்மொழியின் வேர்மூலங்களை வகைப்படுத்தினார். சொற்பிறப்பியல் நெறிமுறைகளுக்கும் அவர் தம் ஆய்வில் வழிகாட்டி இருந்தார்.

தமிழ்மொழி ஒட்டுநிலை மொழியாக இருந்ததால், கலைச் சொற்களை எந்த நிலையிலும் உருவாக்கிக் கொள்ளக்கூடிய வளமும் பெற்று இருந்தது.

இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக் காலத்தில் உலகில் ஏராளமான கலைச்சொற்கள் உருவாக்கப்படுகின்றன. உலகிலுள்ள ஒவ்வொரு சிறுநாடுகளிலும்கூட அவர்கள் கண்டுபிடிக்கும் ஆய்வு களைப் பதிவு செய்ய ஏராளமான கலைச்சொற்கள் புதிதுபுதிதாக உருவாக்கப்படுகின்றன. அவற்றை உலகம் முழுவதும் பரப்புவதற்கு அவர்களே ஆங்கிலத்தில் பதிவு செய்ய வேண்டியுள்ளது. எனவே ஆங்கிலத்தில் அவர்களே கலைச்சொற்களை உருவாக்குகின்றனர். அவ்வாறு உருவாக்கப் பெறும் கலைச்சொற்கள் அறிவியல் உலகிற்கு அவர்களின் நல்கையாகச் சேர்க்கப்படுகின்றன. அதேநேரத்தில் ஆங்கில மொழிக்கும் அவர்களின் கலைச்சொல்லாக்கம் நல்கையாகச் சேர்கிறது.

இன்றைய உலகில் பல துறைகளிலும் பல்வேறு ஆய்வுக் கண்டு பிடிப்புகளுக்கு நிகராகக் கலைச்சொல் உருவாக்கத்திற்கான கண்டு பிடிப்புகளும் நிறைந்து வருகின்றன.

அவ்வாறு ஆங்கிலமொழி, பலமொழிக்காரர்களாலேயே வளர்ச்சி பெற்று மிதமிஞ்சி நிற்கிறது. ஆங்கில மொழிக்காரர்கள் ஒப்பீட்டளவில் அந்த அளவிற்கு எந்த உழைப்பையும் செலுத்துவதே இல்லை.

ஏற்கனவேகூட அவர்கள் பழைய வழக்கிழந்த கிரேக்கம், லத்தீனத்தி லிருந்தும், வழக்கில் உள்ள பிற மொழிகளில் இருந்தும் கைப்பற்றிக் கொண்டதும், களவாடிக் கொண்டதும்தான் அதிகம். இப்போது அவர்களே ஆங்கிலமொழி செல்வத்தில் கொண்டுவந்து சேர்க்கின்ற நிலையாகப் போய்விட்டது.

அவ்வாறு ஆங்கிலமொழிவளர்ச்சிக்கு உலக மக்களே ஆக்கம் செய்துதருவதுபோல், தமிழுக்கு யாரும் உழைக்க முடியாது. ஆனால் உலகச்செய்திகள் தமிழ் மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்றால் அன்றாடம் பல்துறை அறிஞர்களும் இதற்காக உழைக்கவேண்டும்.

சொல்லாக்க நிலைகளில் மட்டுமல்லாமல், ஆங்கிலேயர்கள் திரட்டித் தொகுத்த செல்வங்களைக் காத்துக்கொள்ள முறைப்படுத்தி

வைத்துக் கொண்டார்கள். உலக மொழிகள் அனைத்தும் அதைச் செய்ய முன்வந்துள்ளன.

தமிழ்மொழியின் சொற்கள் காப்பாற்றப்பட்டன என்றால் அதற்குத் தமிழிலக்கியங்கள் பெரிதும் துணை நின்றன. தமிழ்மொழியில் மொழிப் பதிவு வரலாறு மிகத் தொன்மையானது. அதேநேரத்தில் அழிந்ததும் அழிக்கப்பட்டதும் பெருமளவு ஆகும்.

தமிழ் மொழியில் பல பதிவுகள் அழிக்கப்பட்டதற்கு ஆரியர்களின் பங்கு அதிகம் என்று பாவாணர் குறிப்பிடுவார். சமசுக்கிருத வளர்ச்சிக்கும் தமிழ்மொழி அழிப்பிற்கும் ஒரு நேர்த்தகவு உண்டு.

தமிழர்கள், ஆக்கும் திறனுள்ள அளவிற்குக் காக்குந் திறன் குறைந்தவர்களா? அல்லது அவர்கள் அதிகாரத்தைப் பறிகொடுத்தவர் களா? என்றால் இரண்டுமே அதிகம் என்று கூறலாம்.

ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னும் ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாற்றை மொழிமாற்றம் செய்துவிடுவதால் அவ் வரலாறு அடுத்த மொழிக்கு மாறி விடுவதில்லை. எனவே ஒரு சொல்லை மொழிமாற்றம் செய்துவிட்டு மூலத்தை அழித்துவிட்டால் அந்த மூல மொழியின் சொல்வரலாறு மீளப் போவதில்லை.

ஒவ்வொரு மொழியின் சொற்களையும் முழுவதுமாகப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அகரமுதலிகள் (Dictionary, Lexieon), அகரவரிசை (Glossory) போன்றவை ஒரு மொழியின் அனைத்துச் சொற்களையும் காத்துவிட முடியாது. இவற்றைக் காத்து வைப்பதற்கு ஒரு சொற்களஞ்சியம் தேவை. அதைத்தான் ஆங்கிலத்தில் (Word Corpus) வேர்டு கார்ப்பஸ் என்று அழைக்கிறார்கள். ஆங்கிலத்தில் முதலில் அது உருவாக்கப்பட்டது. உலகின் ஒவ்வொரு மூலையிலும் உருவாக்கப்பெறும் சொற்களைக் காத்து வைக்க வேண்டிய தேவை அவர்களுக்கு உருவானது.

அதேபோல் தமிழ் வளர்க்கும் அறிஞர்கள் இருக்கும் தமிழுலகில் மொழிப் பதிவு செய்யவும், அதைக் காத்து வைக்கவுமான ஒரு செயற் பாடு தேவையாகிறது தமிழுக்கு இவ்விரண்டு செயற்பாடுகளும் தேவை.

> "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்லது அரசு"

என்று வள்ளுவர் கூறிய பொருள் இயற்றலையும் காத்தலையும் மட்டும் செய்யாமல் மொழி இயற்றலையும் காத்தலையும் செய்தது தமிழ் அரசுகள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

## சொற்குவை தோன்றிய வரலாறு

"சொற்குவை" என்ற சொல் தோன்றிய வகை என்பதைக் காணுமுன் இக் கருத்தின் வளர்ச்சி வரலாற்றுக்கு வருவோம்.

ஆங்கிலத்தில் "Word Corpus" (வேர்டு கார்பஸ்) என்ற கருத்து தோன்றி, ஆங்கிலச் சொற்கள் அனைத்தையும் தொகுத்துவைக்கும்முறை உருவாக்கப்பட்டது. அதை மொழியியல் கண்ணோட்டத்தில் கண்ட தமிழ் நாட்டு மொழியியல் அறிஞர்கள் இதைத் தமிழ்மொழியிலும் கொண்டு வரவேண்டும். அதுதான் மொழி வளர்ச்சியும் காப்பும் என்று கருதினர்.

இதை முதலாகவும் முன்னோடியாகவும் தமிழில் கொண்டுவர வேண்டுமென்று முனைந்தவர் நம் மதிப்பிற்குரிய மொழியறிஞர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள்.

சொற்பிறப்பியல் வகையில் தமிழுக்குக் கிடைத்த மிகப்பெரிய முது செம்மொழிஞாயிறு பாவாணர் என்று கூறினால் மொழியறிஞராக இருந்து நிறுவனப்படுத்திச் செயற்படுத்தும் ஆற்றல் படைத்தவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் என்று கூறலாம். அவர்களை அடையாளம் கண்டுத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நிறுவவும் அதை, தொடங்கவும் வ.அய்.சுப்பிரமணியத்தைத் தேர்ந்தெடுத்த அன்றைய தமிழக முதல்வர் ம.கோ.இரா அவர்கள். அவர்களையும் பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழ் வளர்ச்சிக்கு முதன்மையாக உதவக்கூடியது "சொற்பிறப்பியல் அகரமுதலி" என்ற வகையில் பணியாற்றிக்கொண்டிருந்த நாம் தமிழ்பல்கலைக்கழகம் தொடங்கியிருந்த களஞ்சிய நடுவத்தின் ஒரு பிரிவான அறிவியல் களஞ்சியத்தில் பணியாற்ற விரும்பி விண்ணப்பம் அனுப்பி இருந்தோம்.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்றிருந்த வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் நம்மை இயற்பியல் பிரிவில் பணியாற்றத் தேர்ந்தெடுத்தார்கள். அதில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது ஒரு களஞ்சியம் (Encyclopedia) பற்றிய கருத்தரங்கு ஒன்றை நிகழ்த்தினார்கள். அதில்தான் (Word Corpus) பற்றிய விளக்கத்தையும் அதன் பயன்பாட்டையும் தெரிவித்தார்கள். அது நடந்த காலம் 1983 சூன் - ஆகத்து மாதங்களில்... அதற்காகத் தமிழக அரசுக்கும் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் அலைந்தார்கள். அப்போது அக் கருத்து மிகுதியாக நம் மனதில் பதியவில்லை. ஒருவேளை அப்போது அது அமைந்திருந்தாலும் அது சிறப்பாக அமைந்திருக்காது. ஏனெனில் இன்றைய கணிப்பொறி, இணைய வளர்ச்சி அன்றைக்கு இல்லை. அதிகமான மாந்த உழைப்பையே அது உள்வாங்கி இருக்கும் என்பதே நம் கருத்து. ஆனால் அச்சொல் "வேர்டு கார்பஸ்" என்பதும் அதன் பயன்பாட்டில் சிறிதே மனத்தில் பதிவாகி இருந்தது. அன்றைய நாளில் அது 'சொல்தரவகம்' - என்ற மொழிபெயர்ப்பில் அறிமுகமாகி இருந்தது.

2011-இல் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் தொகுதிகள் முழுவதுமாக முடிந்த நிலையில் அதன் திருந்திய பதிப்பும் பிற தமிழ் அகரமுதலிகள்

செய்ய முனைந்து இருக்கும்போது அரசியல் வானில் நாளொரு திடீர் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. திரு பாண்டியராசன் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். தான் பொறுப் பேற்ற துறைகளைக் காணும் முகத்தான் தமிழ் வளர்ச்சித் துறைக்குக் கீழ் இருந்த துறைகளைப் பார்வையிட, பொறுப்பேற்ற அந்த நாளின் பிற்பகுதியிலேயே வந்திருந்தார்.

தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழ்ச் சங்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் இயக்ககம் என அனைத்துத் துறைத் தலைவர்களையும் பொறுப்பாளர் களையும் ஒருங்கே சந்தித்தார்.

அவர் கூறியது இதுதான். "தமிழ் வளர்ச்சித்துறையில் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது நான் பொறுப்பில் இருப்பேன். அதற்குள் தமிழ் வளர்ச்சிக்கான ஆக்கப் பணியாகப் பெயர் சொல்லும்படியான திட்டங்களைக் கூறுங்கள். நான் செயல்படுத்துவேன்" என்றார்.

ஒவ்வொரு துறையினரும் அவரவர்களுக்குத் தங்கள் துறைக்குத் தேவையானதை உள்ளடக்கிய திட்டங்களைக் கூறினர். அத் துறைகளில் மிகவும் சிறிய துறை "அகரமுதலி" துறைதான். நமக்கு ஒரே திட்டமாக நம் காதில் ஒலித்துக் கொண்டிருந்த வ.அய்.சுப்பிரமணியம் ஐயாவின் குரலில் (Word Corpus) ஒன்றைத்தான், நமக்கு வந்த வாய்ப்பில் அதைப்பற்றி வலுவாகக் கூறினோம்.

அது அவரை மிகவும் கவர்ந்தது; புதிய கோணத்திலும் இருந்தது. அதைச் செயற்பாட்டுக்கு அரசு எடுத்துக் கொண்ட வகையில் தமிழக முதல்வர் அதற்கு ஆண்டுதோறும் தொடர் செலவுத் தொகை உருவா "ஒரு கோடி" ஒதுக்கினார்கள்.

அது செயல்பாட்டிற்கு வந்தது. அதன் பெயரைத் தரவகம் என்ற சொல்பற்றி பலவாறு கலந்து கொண்டு அன்றைய அகரமுதலித் துறை இயக்குநர் திரு. செழியன் சொற்கள் என்ற பொருளில் உள்ள "சொற்குவை" என்ற பெயரைச் சூட்டினார்.

அனைவருக்கும் அது பொருத்தமாகப்பட்டது. அந்தச் சொற்குவையின் இயங்குதல், பயன்படல் பற்றி இனிக் காண்போம்.

'சொற்குவை' என்பதற்கு முந்தையப் பெயர்கள் 'சொல் தரவகம்' 'சொற்களஞ்சியம்' என்பனவாகும். ஒரு மொழியிலுள்ள அத்தனைச் சொற்களையும் ஒருங்கு திரட்டி வைத்த ஓர் வைப்பகமாகும்.

தமிழ்மொழி தோன்றிய காலத்திலிருந்து இலக்கிய வழக்கு, தொழில்நுட்பச் சொற்கள், அனைத்து நிலைகளிலும் வழக்கிலிருக்கும் மற்றும் வழக்கிழந்த சொற்கள் முதல் இன்றைய அளவில் அன்றாடம் பயன்பாட்டில் உள்ள சொற்கள்வரை மேலுயர்த்தம் செய்யும் செயற்பாட்டு வைப்பகமே சொற்குவை.

உலகம் முழுவதும் பரந்துபட்ட தமிழர்கள் எந்தத் துறையினராக இருந்தாலும் அவர்கள் இந்தச் சொற்களைத் தங்கள் ஏந்திற்கேற்பக் கையாளலாம். தங்களுக்குத் தகுந்தாற்போல் புதுக்கிக் கொள்ளலாம். புதிய சொற்களை உருவாக்கிக் கொள்ளலாம். அவற்றையும் இந்தத் தொகுப்பில் சேர்க்கலாம். ஆனால் யாரும் இதிலிருந்து அழித்துவிட முடியாது. சேர்க்க மட்டுமே முடியும். தவறான பொருளுடைய சொற்களையும் சேர்த்துவிட முடியாது. இது நெறியாளுகைக்குட்பட்டது.

இந்தச் சொற்குவையை இப்போது செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககம் கையாளுகிறது. இதுவரை வந்த அகரமுதலிகளின் சொற்கள் அனைத்தும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. அவ்வாறு 2 இலக்கம் சொற்கள் அகரமுதலிகளிலிருந்து இதில் தொகுக்கப்பட்டுள்ளன. இணையக் கல்விக் கழகம், மற்றும் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழி சொல்லாய்வு அறிஞர் அருளி அவர்கள் தொகுத்த அருங்கலைச் சொற்கள் இரண்டரை இலக்கம் என நான்கரை இலக்கம் சொற்களில் கிட்டத்தட்ட 4 இலக்கம் சொற்கள் இணையதளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

உலகில் யாரும் SORKUVAI.COM என்று இணையதளத்தைத் திறந்தால் 4 இலக்கம் கலைச் சொற்களைப் பயன்பாட்டுக்குப் பார்க்கலாம். பயன்படுத்திக் கொள்ளலாம். ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களும், தமிழ்க்கலைச் சொற்களுக்கு நிகரான ஆங்கிலச் சொற்களும் நொடியில் கிடைக்கும். ஒருவேளை தளத்தில் உருவாக்கப்படாத சொற்களாக இருந்தால் இதில் காணப்படாது.

அவைமட்டுமல்லாமல் தமிழ்ச் சொற்களுக்கு அகரமுதலிப் பொருள் எடுத்துக்காட்டுகள், வேர் மூலங்கள், இனச்சொற்கள் இவையனைத்தும் நொடியில் பெறலாம்.

சொற்பிறப்பியல் அகரமுதலிப் பணியாளர்களால் திங்கள்தோறும் புதிய 1000 கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

உலகில் எங்கிருந்தாலும் பயன்பாட்டாளர் பயன்படுத்தும் வண்ணம் இது செயற்படுகிறது. இணையதளத்தைப் பயன்படுத்தத் தெரியாதவர்களோ, தாங்கள் பார்க்கப் புகும் சொல் அதில் இடம்பெறவில்லையென்றாலோ எந்தத் தொலைபேசி வழியாகவும் '14469' எண்ணுக்குத் தொலைபேசி செய்தும் சொற்களுக்கு விளக்கம் கேட்கலாம். அதற்கு இந்தியாவின் எந்த மூலையிலிருந்தும் எந்தத் தொலைபேசியிலும் கேட்பதற்குக் கட்டணம் இல்லை.

இந்த 'அழைநடுவம்' அலுவல் நேரத்தில் மட்டும் பதியாற்றுகிறது. 24 மணி நேரமும் கேட்குமளவிற்கும், உலகத்தில் எந்த மூலையிலிருந்

தும் இலவயமாகக் கேட்டுக்கொள்வதற்குமான ஏந்துகள் விரைவில் விரிவுபடுத்தவிருக்கின்றன.

14.4.1969ஆம் நாள்தான் தமிழ்நாட்டிற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டிய ஆணை வந்த நாள். அந்த எண்ணே அந்த நடுவத்திற்கு அழைப்பு எண்ணாகப் பயன்படுத்தப்படுகிறது.

இதன்வழி தமிழ்மொழிச் சொற்களை என்றும் அழியாமல் காத்துக் கொள்ளமுடியும். சொற்கள் என்பவை வெறும் ஒலிக்குறிப்புகள் அல்ல. அது வரலாற்று, தொழில்நுட்பப் பதிவு. ஒவ்வொரு சொல்லுக்குப் பின்னும் ஒரு வரலாறு உண்டு.

தமிழர்கள் தொழில்கள் பலவற்றையும் வாழ்முறையில் பயன்படுத்தி வந்தனர். தொழில்நுட்பங்கள் அவர்கள் வாழ்வில் இடம்பெற்றிருந்தன. மருத்துவம், உழவு, கப்பல் கட்டுதல், கடற்செலவு, கடல் தொழில்கள், கால்நடை வளர்த்தல், பேணுதல் எனப் பல்தொழில்கள் இருந்ததாக இலக்கியமும் கூறுகிறது. சொற்களிலும் பதிவாகியுள்ளன. அவற்றின் கலைச் சொற்களே மொழியில் பணிவாகியுள்ளன.

நிலத்தைத் தோண்டுவதும், பண்படுத்துவதும், உழுவதும், விதைப்ப தும், பயிர் வளர்ப்பதும், விளைவிப்பதும், அவர்களின் பரவலான அடிப்படைத் தொழில்கள் உழவு செய்யும் குமுகாயம்.

'தொல்லுதல்' என்றாலே தோண்டுதல்;

| | | |
|---|---|---|
| தொல்லு | x | தோண்டு |
| தொல்லில் | x | தொழில் |
| பள்ளுதல் | x | பள்ளம் தோண்டுதல் |
| செய்நிலம் | | |
| செய்தல் | | |

உழு > உழை > உழைப்பு (Hardwork)

விளைதல் > விளைவி (effect)

வளர் > வளர்ச்சு (Development)

இந்தச் சொற்கள் அனைத்தும் உழவு சார்ந்தவை. உழவுக் குமுகாயம் என்பதைத்தான் காட்டுகிறது. ஒவ்வொரு சொல்லுக்கும் பின் வரலாறு உண்டு என்பதை விளக்குகிறது.

இவற்றை மீட்டெடுப்பது மட்டுமல்லாமல் காப்பாக பதிவும் செய்து விட்டால் உலகமுள்ளவரை இவ்வினத்தின் வரலாறு பதிவாகியிருக்கும். இது ஒரு கோணத்தில் உண்மையான மொழிப் பாதுகாப்பும், மொழி வளர்ச்சியும் ஆகும்.

தளம் அந்நிலையில் 'சொற்குவை' - எனும் உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் தளம், தமிழ் வாழ உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் தளமும் ஆகும்.



# சாதி ஒழிப்பு அரசியல் விடுதலையை வென்றெடுப்போம்!

• **நிலவழகன்**
தமிழக ஒடுக்கப்பட்டோர்
விடுதலை இயக்கம்

**த**மிழ்ச் சமூகம் ஒரு சாதிய சமூகம். சமூகத்தில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் அவர்களுக்குத் தெரியாமலேயே ஏதோ ஒரு சாதியின் உறுப்பினராகவே பிறக்கின்றன. அவர்கள் பிறப்பதற்கு முன்பே அவர்களின் கல்வி, வேலை, சமூகக் கடமை போன்றவற்றோடு அவர்கள் தமது வாழ்விடத்தை எங்கே அமைத்துக் கொள்ள வேண்டும்? யாரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்? - என்பவையெல்லாம் 'சமூக ஒழுங்கு' எனும் பெயரில் ஏற்கெனவே தீர்மானிக்கப்படுகின்றன.

இங்குப் பிறக்கின்ற எவரும் சுதந்திரமான மனிதர் இல்லை. பார்ப்பனிய மதத்தின் பெயரால் நிறுவப்பட்டிருக்கும் இந்து சமூக ஒழுங்கை கேள்விக்குள்ளாக்குவதும், மீறுவதும் சமூக விரோதச் செயல் என்று அனைத்து சாதியினராலும் நம்பவைக்கப்பட்டிருக்கிறது. இந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே பார்ப்பனியம் ஏனைய சாதி இந்துக்கள் என்றழைக்கப்படும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தமது ஆதிக்கத்தைக் கட்டமைத்து வருகிறது.

சமூக ஒழுங்கு என்கிற பெயரில் பார்ப்பனிய இந்து மதம் பரந்து பட்ட மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளை உருவாக்கியும், அவ்வகையான ஏற்றத்தாழ்வுகளுக்குத் தங்களது வேத, புராண, இதிகாசப் புனைகதைகளின் மூலம் அங்கீகாரத்தை வழங்கியும், உயர்வு தாழ்வுக் கோட்பாட்டை உயர்த்திப் பிடித்தும் வருகிறது.

பார்ப்பனியத்தின் உயர்வு, தாழ்வு கருத்துகளைப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே திருவள்ளுவர் தொடங்கி சித்தர்களும் புலவர்களும் தங்களின் பாடல்களின் வழியாகக் கடிந்து பாடியிருக் கின்றனர். ஔவையார் போன்ற பெண் புலவர்கள் சாதிய ஏற்றத்தாழ்வு களைக் கண்டித்ததோடு ஆண், பெண் சமத்துவத்தை வலியுறுத்திப் பாடியுள்ளனர்.

சித்தர்களின் தொடர்ச்சியாக வள்ளலார், அயோத்திதாசப் பண்டிதர் போன்ற பல்வேறு தமிழ்ப் பெருமக்களும் அடிப்படையில் சாதியின் பெயரால் ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கப்பட்டுக் கடைபிடிக்கப்பட்டு வந்த முறைக்கு எதிராக எழுதவும், பேசவும் தலைப்பட்டனர்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் தனது நெடிய பட்டறிவின் மூலம் சாதியத்துக்கு உரிய தீர்வாகக் கடவுள் மறுப்பை முன் வைத்ததோடு மட்டுமல்லாமல், சாதிய ஏற்றத்தாழ்வுகளை நிறுவிடும் நோக்கில் எழுதப்பட்ட வேத, புராணங்களை, புரட்டுகளைத் தமிழக மக்களிடையே அம்பலப்படுத்தினார்.

புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் சாதியத்தை நீட்டிக்கச் செய்து வருகின்ற பார்ப்பனிய இந்து மதத்தின் சாதிகளைப் பற்றி விரிவாக ஆய்வு செய்தார். சாதியம் குறித்த அவரது நீண்ட ஆய்வுகள் 'சாதி ஒழிப்பு' எனும் ஆய்வுப் பகுதி சாதியத்தின் இருப்பை அறிந்து கொள்வதற்கான சிறப்பான பகுதியாகும்.

இவ்வாறு நீண்ட காலமாகச் சாதியத்திற்கெதிரான, மானுட விடுதலைக் குரல்கள் எழுப்பப்பட்டு வந்தாலும்கூட அவை அந்தந்தக் காலகட்டங்களில் பார்ப்பனியத்தின் அத்துமீறலுக்கு எதிரான குரல்களாக இருந்தனவே தவிர சாதியை ஒழிப்பதற்கான முழுமையான புரிதலை அனைத்து மக்களுக்கும் வழங்கி அதைப் பேராற்றல் வாய்ந்த பெரும் குரலாக மாற்றுவதில் போதிய முன்னேற்றம் ஏதும் இல்லாத நிலையே தொடர்ந்தது.

1990-களில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் நூற்றாண்டைத் தொடர்ந்து சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களிடையே பரவலாக விழிப்புணர்வு ஏற்பட்டு அம்பேத்கரின் பெயரில் சங்கங்கள், மன்றங்கள், அமைப்புகள் எனக் கட்டப்பட்டன என்றாலும் அவை எல்லாம் ஒடுக்கப்பட்ட மக்களிடையே கல்வி கற்ற அரசு அலுவலகங்களில் பணியாற்றிய அறிஞர்களின் வழிகாட்டலிலேயே கட்டப்பட்டன.

அத்தகைய அறிஞர்களோ இரட்டை வாக்குரிமை, தாழ்த்தப்பட் டோருக்கான தனித்தேசம், தலித் அரசியல் என மக்களை வழிநடத்திய தோடு, இந்திய அரசியலில் நாட்டம் கொண்டவர்களாகவும் தமிழ்த் தேசிய அரசியலோடு உடன்பாடில்லாதவர்களாகவுமே இருந்தனர்.

அன்றைய பொதுவுடைமைக் கட்சிகளோ (சிபிஐ, சிபிஎம்) சாதி ஒழிப்பு குறித்தும், மொழித் தேச உரிமைகள் குறித்தும் போதிய கவனம் செலுத்தத் தவறி இருந்தன.

வகுப்புப் போராட்டத்தை முன்னெடுப்பதைக் காட்டிலும் இந்திய ஒற்றுமையை முகாமையாகக் கருதின. பாட்டாளி வகுப்புக்கு மொழி இல்லை, இனம் இல்லை என்றனர். இன்னொரு பக்கம் பொதுவுடை மைக் கட்சியினர் பலரும்கூடத் தங்கள் சாதி அடையாளங்களை விட்டொழிக்காமல் இருந்தனர்.

கேரளாவின் நம்பூதிரி, நாயனார் என்கிற பெயர்ப் பதிவு மட்டுமல் லாது, அங்கிருந்த கட்சிகளுக்குள் சாதிகளை அடையாளப்படுத்திக் கொண்டன.

தமிழகத்தில் அந்த வகையில் தங்கள் பெயர்களுடன் சாதிப் பெயர்களை ஒட்ட வைத்துக் கொள்ளவில்லை என்றாலும் தங்கள் வாழ்வியலோடு சில தோழர்கள் சாதியை ஒட்டவைத்திருந்தனர்.

வர்க்கப் போராட்டம் நடந்து விட்டால் சாதி ஒழிந்து விடும் என்றும், எல்லாவற்றுக்கும் வகுப்பு எதிர்ப்புப் போராட்டமே ஒரே மருந்து என்பதாகவும் சொல்லிக் கொண்டிருந்தனர்.

ஆனால், உழைக்கும் மக்களைத் திரட்டுவதற்கான திட்டமில்லாமல் தோல்வியடைந்து வந்தனர். இனவியல் கூறு கடந்து இந்தியாவிலுள்ள பாட்டாளிகள் ஏன் ஒன்றுதிரள முடியவில்லை என்று அவர்கள் அக்கறை கொள்ளவில்லை.

ஆக, இப்படியான நிலையில்தான் தமிழ்நாட்டுச் சிக்கலுக்கும் சரி, ஈழச் சிக்கலுக்கும் சரி அவர்களால் முகம் கொடுக்க முடியவில்லை.

இத்தகைய மூன்று நிலைப்பட்ட அரசியல் வழித்தடங்கள் ஒவ்வொன்றும் ஒரு புள்ளியை நோக்கி நெருங்காமல் திசை விலகிப் போய்க் கொண்டிருந்த அன்றைய சூழலில்தான் இம்மூன்று திசைகளும் ஒன்றிணைய வேண்டிய தேவையையும் கட்டாயத்தையும் முன்னிறுத்தி இயக்கச் செயல்பாடுகள் தேவைப்பட்டன.

இம்மூன்று அரசியல் திசை வழிகள் ஏன் ஒன்று சேர வேண்டும் என்றும் எவ்வாறு ஒன்று சேர வேண்டும் என்றும் அழுத்தம் கொடுக்க வேண்டிய தேவையின் அடிப்படையில் ஆய்வுகள் நடந்தன.

தோழர் தமிழரசன், புலவர் கலியபெருமாள் உள்ளிட்ட தோழர்கள் த. பொ. க. (ம. இலெ.) வழி முன்வைத்த அறிக்கைகள், குறிப்பாகத் தோழர் தமிழரசன் அவர்களால் 1985 ஆம் ஆண்டு மீன்சுருட்டி சாதி ஒழிப்புக் கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட '**சாதி ஒழிப்பும் தமிழக விடுதலையும்**' எனும் அறிக்கையை அடிப்படையாக வைத்து வெகுமக்கள் அரசியல் செயல்பட வேண்டிய தேவை அமைந்தது.

அத் தேவையை நிறைவு செய்யும் இயக்கமாகவே **தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்** தொடங்கப்பட்டது.

ஓர் இயக்கத்தை அதாவது த.ஒ.வி.இ.-யைத் தொடங்கியது என்பது ஏதோ விருப்பத்தின் பாற்பட்டது அல்லது ஆசையின் பாற்பட்டதும் அன்று. முழுக்க முழுக்கத் தேவையின் பாற்பட்டே தொடங்கப்பட்டது.

சாதி ஒழிப்பு வகுப்பு வர்க்க ஒழிப்பு இலக்குடன் கூடிய தமிழ்த் தேசிய அரசியல் புரட்சிக்கான நோக்கம் கொண்ட நிலையிலேயே த.ஒ.வி.க. தனது அரசியலை அடையாளப்படுத்திக் காட்டியது.

ஒடுக்கப்பட்டோர் என்பது சமூக, அரசியல், பொருளியலால் ஒடுக்கப்பட்டோர் என்று விளக்கப்படுத்தியது.

தேச விடுதலை என்பது ஏதோ மொழி விடுதலை மட்டுமன்று, இனவிடுதலையும் மட்டுமன்று, அது தமிழக மக்கள் குமுக விடுதலை அரசியல் பொருளியல் விடுதலை தேவையுடையது. ஆக, மக்கள் குமுக விடுதலை அரசியலை முன் நிறுத்தாமல் தமிழ்மொழி தமிழ் இனம் விடுதலை அடைய வேண்டுமென்றால் அது எப்படி என்று கேள்வி எழுப்பியது.

கூண்டுப் பறவையைத் திறந்து விடுவது போன்றதன்று விடுதலை; அது நிலத்தை உழவுக்குப் பயன்படுத்துவது போன்ற செயலாழம் கொண்டது.

பன்னாட்டு முதலாளிகளிடமும் இந்திய வல்லரசியத்திடமும் சிக்குண்டு கிடக்கிற தமிழகத்தை மீட்டு ஒரு மக்கள் அரசை உருவாக்கும் திறன் கொண்டது. பொருளியலை மக்கள் பொருளியலாக மாற்றும் வலிமை கொண்டது. மக்களைக் கூறு பிரித்திருக்கும் சாதியம் உள்ளிட்ட சமூகக் கொடுமைகளை வேரறுப்பது.

*அத்தகைய வலிமை கொண்ட அரசியலையும் அதற்குகந்த செயல் திட்டத்தையும் கொண்டதாகவே த.ஒ.வி.இ. தன்னை அணியப்படுத்திக் கொண்டது.*

*தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் எந்த ஓர் தனிமனிதத் தலைவருக்காகவும் எந்த ஒரு தனிச் சாதி அமைப்பிற்காகவும் எந்த ஓர் அரசியல் சாயம் இல்லாமலும் முழுக்க முழுக்கப் புரட்சி இலக்கு கொண்ட, சாதி ஒழிப்பு நோக்கம் கொண்ட, இந்தியப் பார்ப்பனிய எதிர்ப்பு கொண்ட, வல்லரசு எதிர்ப்பு நோக்கம் கொண்ட தமிழ்த் தேசிய அரசியலை முன்னிறுத்திக் கொண்ட ஓர் இயக்கமாகவே தொடங்கியது வளர்ந்தது, வளர்ந்து வருகிறது.*

*தொடக்கம் முதலே அது எதிர்கொண்ட நெருக்கடிகள் பல.*

*தமிழ்த்தேசிய அரசியலாளர்களால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சாதி அமைப்பு என்று முத்திரை குத்தப்பட்ட போதும் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களால் இது ஒரு தமிழ்த் தேசிய அமைப்பு என்று பரப்புரை செய்யப்பட்ட போதும் சாதிய ஒடுக்கு முறைகளின் போது ஒடுக்கப்பட்ட மக்களோடு களத்தில் நின்று போராடியும், தமிழர்களின் உரிமைப் போராட்டங்களுக்காகவும் தொடர்ந்தது செயல்பாடுகளை முன்னெடுத்தியிருக்கிறது. முன்னணி அமைத்து சாதி ஒழிப்பு நிலையில் தொடர்ந்து நடையிடவும் செய்கிறது.*

*உலகத் தமிழ் இன சிக்கல்களில் பாரிய பங்காற்றி, தமிழ்த் தேசிய அரசியலில் மார்க்சிய - லெனினிய வழிபட்ட அமைப்பு எனும் தனிச்சிறப்போடு பயணிக்கிறது.*

*அதேபோது, தமிழகத் தாழ்த்தப்பட்டோர் விடுதலை முன்னணி, தமிழ்த்தேசிய முன்னணி, தமிழக மக்கள் முன்னணி எனும் முன்னணி முயற்சிகளோடும் அண்மை ஆண்டுகளாய்ப் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பிலும் இணைந்து இயங்குகின்றது.*

*அவ்வகையில் அக் கூட்டமைப்பு முன்னெடுத்திடும் அனைத்து முயற்சிகளிலும் தோளொடு தோள் நின்றிருக்கிறது.*

*அவ்வகையில், நீலச் சட்டைப் பேரணியுடன் சாதி ஒழிப்பு அரசியலை அதன் வழிபட்ட விடுதலையை வென்றெடுப்பதற்கு இது போன்ற சாதி ஒழிப்பு மாநாடுகள் வழி ஊக்கத்தையும் உறுதியையும் பெறுவோம்!*

●



# தியாகி இமானுவேல் பேரவையின் நிறுவனத் தலைவர் தோழர் பூ.சந்திரபோசு அவர்களுடன்...

- **என்னைப்பற்றி...**

**அ**ன்றைய பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டம், இன்றைய சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஒன்றியம், வாணி ஊராட்சி, மொச்சியனேந்தல், கிராமத்தில் நினைவில் வாழும் திரு.பூலான், நினைவில் வாழும் திருமதி. மீனாட்சி அம்மாள் ஆகிய இணையர் களுக்கு நான்காவது மகனாக 1955ஆம் ஆண்டு பிறந்ததாகவும், ஆனால் பள்ளிச்சான்றிதழில் 1956-ஆம் ஆண்டு என்றும், பதிவுச் செய்யப்பட்டுள்ளது.

என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் ஆறு சகோதரர்கள், எங்களது குடும்பம் சிறிய விவசாயக் குடும்பம். நான் எனது கிராமத்தில் இருந்து தென்மேற்கில் உள்ள பரமக்குடி நகரத்தின் வைகை ஆற்றிற்கும் வடகரையில் உள்ள எமனேசுவரத்தில் முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரை நகர்மன்றப் பள்ளியில் படித்தேன்.

9ஆம் வகுப்புமுதல் 11ஆம் வகுப்புவரை பரமக்குடி நகரத்தில் உள்ள அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் படித்தேன். 6ஆம் வகுப்புமுதல் 11ஆம் வகுப்புவரை அரசு ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் தங்கிப் படித்தேன்.

இரு ஆண்டு இடைவேளைக்குப் பின்பு மதுரையில் உள்ள மதுரைக் கல்லூரியில் புகுமுக (PUC) வகுப்புவரை படித்துள்ளேன்.

2. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தற்காலிக மின் கணக்கீட்டாள ராகப் பணிபுரிந்து பணி நிரந்தர உத்தரவு வழங்கப்பட்ட பின்பு அப் பணியை விட்டுவிட்டேன். 1948-ஆம் ஆண்டு கிராம நிர்வாக அலுவலர் பணிக்குத் தேர்ச்சி பெற்று அரசுப் பணி உத்தரவு கிடைத்தவுடன் அப் பணியையும் விட்டுவிட்டேன். இடைப்பட்ட காலங்களில் விவசாய வேலைகள் பார்த்ததோடு, தமிழ்நாடு

*மின்சார வாரியத்தின் சார்பாக மின்கம்பங்கள் செய்யும் ஒப்பந்தப் பணியிலும் பணியாற்றினேன்.*

*பெற்றோர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். என் அண்ணன் தொலைத்தொடர்புத் துறையில் இந்திய அரசில் பணிபுரிந்தார். மற்ற எவரும் அரசுப்பணிக்குச் செல்லவில்லை. மாறாக விவசாய வேலை களைச் செய்து வந்தனர். பெற்றோர்கள் இருவரும் ஒரு தம்பி உட்பட அண்ணன் இருவரும் இயற்கை எய்திவிட்டனர். என்னுடைய அண்ணன் ஒருவரும், தம்பி ஒருவரும் தனிக் குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர். தற்போது யாரும் கிராமத்தில் குடியிருக்கவில்லை. பரமக்குடி நகரத்தில் ஒரு பகுதியான எமனேசுவரம் பகுதியில் குடியிருந்து வருகிறார்கள்.*

- **அரசியலுக்குள் வந்ததற்கான சூழல்...**

*எங்களின் கிராமத்தில் நான் படிக்கின்ற பொழுது நாற்பது குடும்பத் தினர் மட்டுமே வாழ்ந்து வந்தனர். அனைவரும் அட்டவணைப் பிரிவில் ஒன்றான பள்ளர் சமூகத்தைச் சார்ந்தவர்களே. ஒரு குடும்பம் மட்டும் வண்ணார் சமூகத்தைச் சார்ந்ததாகும். கிராமச் சூழல் காரணமாகச் சாதியப் பாகுபாடுகள் பார்ப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.*

*எங்கள் கிராமத்தின் தென்பகுதியில் மறவர், கோனார், பள்ளர், அருந்ததியர், வேளாளர், வெள்ளாளர் போன்ற சமூகத்தினர் சுமார் 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வாழ்ந்து வரும் பெரும்பச்சேரி என்ற கிராமம் உள்ளது. இதில் மறவர் மற்றும் கோனார் சமூகத்தினரே பெரும்பான்மையானவர்கள் ஆவர்.*

*எங்கள் கிராமத்தில் இருந்து பரமக்குடிக்கு அன்றாடம் வயல் காட்டுப் பாதை வழியாகச் சென்று வருவோம். எங்கள் கிராமத்தின் சாலை என்பது பெரும்பச்சேரி கிராமத்தின் இரு குடியிருப்புகளுக்கு ஊடே சென்ற பரமக்குடி நயினார்கோவில் பிரதான சாலையில் இணைந்துள்ளது. மிதிவண்டி, மாட்டுவண்டியில் செல்லுகின்ற பொழுது அச்சாலை வழியேதான் செல்ல வேண்டும்.*

*பெரும்பச்சேரி கிராமத்தின் வழியே செல்லுகின்றபொழுது அட்டவணைப் பிரிவு சமூகத்தினர் காலில் செருப்பு அணிந்து செல்லவோ, மிதிவண்டியில் செல்லவோ, மாட்டுவண்டியில் மேலிருந்து ஓட்டிச் செல்லவோ அனுமதி இல்லை. தேநீர்க் கடைகளில் தனிக்குவளைதான். எனவே சாதி அடிப்படையிலான அனைத்து வகையான தீண்டாமை பாகுபாடுகளும் நடைமுறையில் இருந்து வந்தன.*

*நான் 8ஆம் வகுப்பு முழு ஆண்டுத் தேர்வு முடிந்து விடுதியில் இருந்த எனது உடைமைகளை மிதிவண்டியில் ஏற்றிக்கொண்டு பெரும்பச்சேரி கிராமம் வழியாகச் செல்லும்போது என்னை இறங்கிப் போகச் சொன்னார்கள். நான் வண்டியையும், உடைமையையும், அக்கிராமத்தி லேயே போட்டுவிட்டு நடந்தே எங்கள் கிராமத்திற்குச் சென்றேன். அதன்பின்பு என் தந்தையும், மூத்த அண்ணனும் நான் போட்டுவிட்டு வந்த என் உடைமைகளையும், மிதிவண்டியையும் எடுத்து வந்தார்கள்.*

*இச் சம்பவத்தின் விளைவாகக் கிராமத்தில் உள்ள இளைஞர்களை ஒருங்கிணைத்து சங்கம் ஏற்படுத்தித் தொடர்ந்து சங்கமாகக் கூடிச் சந்தா வசூல் செய்து சங்கத்திற்கு நிதி சேர்த்தோம். இளைஞர்களை நகரத்தில் மிதிவண்டிப் பழக வைத்து, மிதிவண்டியில் பெரும்பச்சேரி வழியாக ஏறி வருவதாக முடிவு செய்து செயல்படுத்தினோம்.*

*அதில் ஏற்பட்ட சாதிப் பாகுபாடு சம்பந்தமாக இரு கிராமப் பெரியவர்கள் பேசியதில் வழக்கத்துக்கு மாறாக இளைஞர்கள் செய்வது தவறு என்றும், எனவே அதைச் செய்யக்கூடாது என்றும் முடிவானது. இம்முடிவை ஏற்காத இளைஞர்கள் என் தலைமையில் இளையான்குடி காவல்நிலையத்தில் கொடுத்த புகாரிலிருந்து காவல்துறையினர் பெரும்பச்சேரி கிராமத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தி இறுதியாக இருகுடியிருப்புகளுக்கிடையே செல்லும் சாலைகளில் செல்வதற்கு மாறாக வேறொரு வண்டிப்பாதையில் மிதிவண்டியில் ஏறிச்செல்ல முடிவு எடுக்கப்பட்டது. இம் முடிவின்படி நாங்கள் பலமுறை திருவிழாக் காலங்களில் பரமக்குடியிலிருந்து மிதிவண்டி எடுத்துவந்து ஓட்டுவது போன்ற நடவடிக்கை தொடர்ந்தது.*

*1970ஆம் ஆண்டு பெரும்பச்சேரி கிராமத்தின் தெற்கில் ஒன்றரை கி.மீ. தூரத்தில் உள்ள வைகை ஆற்றில் மின் மோட்டார்மூலம் தண்ணீர் எடுத்துக் குழாய்கள் பதித்து பெரும்பச்சேரியின் இரு குடியிருப்புகளுக் கும் தலைக்கு ஒரு தரைமட்டநீர்த்தொட்டியும், எங்கள் கிராமத்திற்கு ஒரு நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டியும் கட்ட குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் அரசு அனுமதி வழங்கியது. எங்கள் கிராமத்திற்கான குடிநீர் வாய்ப்பைச் சாதி அடிப்படையில் பெரும்பச்சேரி கிராமத்தினர் தடுத்துவிட்டனர்.*

*1970ஆம் ஆண்டுகளில் தடுக்கப்பட்ட அத் திட்டத்தை 1975ஆம் ஆண்டு நெருக்கடி நிலை சட்டம் நடைமுறையில் உள்ளபோது பரமக்குடியில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வார விழாவில் எங்கள் இளைஞர் மன்றத்தின் சார்பில் மனு கொடுக்கப்பட்டுத் தண்ணீர் கொண்டுவர ஏற்பாடு*

செய்யப்பட்டது. பெரும்பச்சேரி கிராமத்தினரால் தடுக்கப்பட்ட வைகை ஆற்றுக் குடிநீர் வழங்கும் திட்டத்தை மிகக் கடுமையான தொடர் போராட்டம் மூலம் எங்கள் கிராமத்திற்குத் தண்ணீர் தொட்டி கட்டித் தேக்கிப் பயன்படுத்துவதை நிறைவேற்றினோம்.

ஆனாலும், பெரும்பச்சேரி கிராமத்தின் வழியாக வரும் குடிநீர் குழாயை அவர்கள் அடிக்கடி உடைத்துவிடுவதும், நாங்கள் அதிகாரி களைச் சந்தித்து முறையிட்டு அவர்கள் சரிசெய்து கொடுப்பதுமான நிலை நீடித்தது. ஒரு கட்டத்தில் அதற்கு நிரந்தர தீர்வு ஏற்படும் வகையில் நான் கொடுத்த கடுமையானப் போராட்ட நெருக்கடியால் சிவகங்கை வருவாய்க் கோட்டாட்சியர் காவல்துறை உதவியோடு வைகை ஆற்றில் மின்மோட்டார்மூலம் நீர் ஏற்றம் நிலையத்தையே பூட்டுப்போட்டுச் சீல் வைத்தனர். அதனை ஒட்டி பெரும்பச்சேரி கிராமத்தினர் குடிநீர்த் தேவையைப் போக்க அன்றாடம் அல்லல்பட்டனர்.

ஆனால், எங்கள் கிராம மக்கள் ஊரை ஒட்டியுள்ள கண்மாயில் தோண்டப்பட்ட கிணற்றுத் தண்ணீர் மூலம் குடிநீர்த் தேவையை நிறைவேற்றிக் கொண்டனர்.

பெரும்பச்சேரி கிராமத்தினர் குடிநீர்த் தேவைக்காக மாவட்ட ஆட்சியரை அணுகி பூட்டுப்போட்டு மூடப்பட்ட நீரேற்றும் நிலையத் தைத் திறந்து தண்ணீர் வழங்க கேட்டதோடு எங்கள் கிராமத்திற்குத் தண்ணீர்கிடைப்பதற்கு எவ்விதத் தடையோ, இடையூறோ செய்ய மாட்டோம் எனவும், மீறினால் அரசு எடுக்கும் சட்ட நடவடிக்கைக்கு கட்டுப்படுவோம் எனவும் இரு கிராம மக்கள் பிரதிநிதிகள் கொண்ட அமைதிப் பேச்சுவார்த்தையின் எழுத்துமூலம் அதிகாரிகள் முன்னிலையில் ஒப்பந்தம் ஏற்பட்டதன் விளைவாகத் தடைசெய்யப் பட்ட தண்ணீர் இரு கிராம மக்களுக்கும் எவ்விதத் தடையும் இன்றி வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான எனது தலைமையிலான மக்கள் போராட்டத்தைக் கேள்விப்பட்டுப் பரமக்குடியில் உள்ள சி.பொ.க.(மா.இலெ) இயக்கத் தோழர்களில் முக்கியமானவர்கள் என்னை எங்கள் கிராமத்தில் வந்து சந்தித்துப் பேசியதன் தொடர்பாகப் பல்வேறுவிளக்கங்களைப் பேசி புரிதலின் அடிப்படையில் அவர்களுடன் அரசியல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டேன். நான் அறிந்த குறைந்த அளவிலான அரசியல் புரிதலின் அடிப்படையிலேயே நான் மேலே சொன்ன மின்வாரிய அரசுப்பணி, வருவாய்த்துறை சார்ந்த கிராம நிர்வாக அலுவலர் அரசுப்பணிகளைச் செய்ய உடன்பாடற்ற நிலை ஏற்பட்டது.

இவ்வாய்ப்பு தொடர்ச்சியான நான் சமூக அரசியல் இயக்கங்களோடு முற்போக்கு அடிப்படையில் அரசியலில் செயல்பட வாய்ப்பை உருவாக்கிக் கொண்டோம்.

1980-களில் சிபொ.க.(மா.இலெ.) தமிழக மக்கள் முன்னணி, தாழ்த்தப்பட்டோர் உரிமைச் சங்கம் (தாவச) என 1985ஆம் ஆண்டுவரை இயக்கப் பணியாற்றினேன். 1985இல் தா.உ.ச.கலைக்கப்பட்டதுடன், எனக்கும் உரிய காரணங்கள் ஏதும் தெரிவிக்கப்படாத நிலையில் இயக்கத் தொடர்பு நின்றுவிட்டது.

1985ஆம் ஆண்டு முதல் 1989ஆம் ஆண்டு வரை எமனேசுவரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இராமநாதபுரம், சிவகங்கை என இரு மாவட்டங்களைச் சேர்ந்த எட்டு கிராமங்களை ஒருங்கிணைத்து ஒரு சங்கமாகச் செயல்பட்டு வந்தேன். இச் சங்கத்தில் பள்ளர் சமூகத்தினர் மட்டுமே இணைந்து கொண்டனர். இக் கிராமங்களில் உள்ள அருந்ததியர்கள் மற்றும் பறையர்கள் இச் சங்கத்தில் சேர பிற்படுத்தப் பட்ட சாதிகளில் மீதான அச்சமும் தங்களின் பொருளாதாரச் சூழல், குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கை போன்ற காரணங்களால் மறுத்துவிட்டார்கள். வெளியூரில் உள்ள அவர்களைச் சமூகத்தின் முக்கிய நபர்கள் இவர்களை இச் சங்கத்தில் சேர வேண்டாம் என்று அறிவுரையும் வழங்கினர்.

நான்கு ஆண்டுக் காலம் சாதிய அடக்குமுறைக்கு எதிராகவும், காவல்துறை நீதியை நிலைநாட்ட மறுக்கும் செயலுக்கும், மற்றும் அரசுத் துறையினர் சாதி அடிப்படையில் பட்டியல் இன மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளை வழங்குவதில் மெத்தனம் மற்றும் பாகுபாடு காட்டுவதை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராட்டங்கள் நடத்தினேன். அதன் விளைவாக ஆதிக்கச் சாதிகளிடம் இருந்தும், காவல்துறையினரிடமிருந்தும், பள்ளர் சமூகத்தில் அரசியல் செல்வாக்குள்ள சுயநலவாதிகளிடமிருந்தும் தொடர்ச்சியாக எனக்கு நெருக்கடிகள் தொடங்கின. அதன் காரணமாக இயக்கம் உருவாக்குவது, அதன் அடிப்படையில் முற்போக்கு மற்றும் சனநாயகச் சக்திகளோடு அரசியல் உறவுகளை வளர்த்துக்கொள்வது எனும் முடிவுக்கு வந்தேன்.

இக் காலக்கட்டத்தில் பறையர் சமூகத்தைச் சேர்ந்த வளர்ப்பு மகள் பள்ளர் இனத்தைச் சேர்ந்த இளைஞனைக் காதலித்து திருமணம் செய்து கொண்டதால், வளர்ப்புப் பெற்றோர்கள் தம் வளர்ப்பு மகளை கணவனிடம் இருந்து பிரிக்க முயன்று சில கூலியாட்களை வைத்து வளர்ப்பு மகளைத் திருமணம் செய்துகொண்ட பள்ளர் இனத்தைச் சார்ந்த இளைஞரைக் காணாமல் ஆக்கிவிட்டனர். சுமார் ஒரு

ஆண்டுக்குப் பின்பு அந்த இளைஞன் தன் துணைவியின் வளர்ப்புப் பெற்றோர்களால் ஆள் வைத்துக்கொலை செய்யப்பட்ட செய்தி தெரிய வந்தது. அது சம்பந்தமாக என் தலைமையில் சில இளைஞர்கள் துணை யுடனும் காவல்துறைமூலம் கண்டுபிடிக்கப்பட்டுச் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. இச் சூழலைப் பயன்படுத்திக்கொண்ட பள்ளர்களில் சிலர் தங்கள் சுயநலத்திற்காகத் தங்களுக்கு வேண்டாத சுமார் 10 பறையர் குடும்பத்தினரின் வீடுகளை அடித்து நொறுக்கி அவர்களை வீட்டைவிட்டு விரட்டி ஊரைவிட்டே ஓட வைத்தனர். பாதிக்கப்பட்டவர்களுடன் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுக் குற்றச் செயலைச் செய்தவர்களைக் கண்டுபிடித்துச் சட்டப்படி தண்டனை வழங்கப்பட்டது. இவ்வாறான பள்ளர், பறையர் முரண்பாடுகள் சில சுயநல சக்திகளால் பெரியதாக ஆக்கவிடாமல் தடுக்கப்படக் கூடுதலாக இயக்கமாகச் செயல்பட வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டதன் விளைவாகத் **தியாகி இமானுவேல் பேரவை** தொடங்கப்பட்டது.

நான் பரமக்குடி வட்டார பள்ளர் சமூக இளைஞர்களைத் திரட்டிக் கூட்டம் போட்டுப் பரமக்குடியில் இரு சமூக மக்களுக்குள் எந்தவித பகையுமில்லை என்பதைப் புரிய வைத்துப் பதட்டத்தைத் தணித்ததுடன் இளைஞர்களைத் திரட்டி இயக்கமாகச் செயல்பட முடிவு செய்த பொழுது அதில் சிலர் இயக்கத்திற்கான பெயர்களைத் **“தேவேந்திர குல வேளாளர் இளைஞர் பேரவை”** என்ற பெயரையே வைக்க வேண்டும் எனக் கோரினர். அப் பெயரில் உடன்பாடில்லாத நான் சாதி ஒழிப்புப் போராளி இமானுவேல் சேகரனைப் பற்றியும் அவரின் சமூக, அரசியல் பணிகளோடு இறுதியாக ஆதிக்கச் சாதிவெறிக் கொடுமையில் முப்பத்து மூன்றே வயதில் படுகொலை செய்யப்பட்டதையும், அதன் தொடர்ச்சியாக நூற்றுக்கணக்கான கிராமங்களில் சாதியக் கலவரங்கள் நடந்ததைப்பற்றியும் எடுத்துக்கூறி, இறுதியாகச் சமத்துவப் போராளி யாகவும், தீண்டாமை சாதி ஒழிப்புப் போராளியாகவும், களப்பணி யாற்றி வீரமரணம் அடைந்த தியாகி இமானுவேல் சேகரனாரின் பெயரையே இயக்கப் பெயராக வைத்துக்கொள்ளலாம் எனக் கூறினேன். அதை ஏற்று முடிவிற்கு வந்ததால் 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தியாகி இமானுவேல் பேரவையை ஆரம்பித்தேன். பேரவையின் முதல் நிகழ்வாகத் தியாகியின் 33ஆம் ஆண்டு நினைவுநாள் வீரவணக்கப் பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. அதில் சுமார் 2000 பேர் கலந்துகொண்டனர்.

## • தியாகி இமானுவேல் சேகரன் வாழ்வு...

*இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டம், செல்லூர் கிராமத்தில் சேது வாத்தியார் என்ற வேதநாயகத்திற்கும் ஞானசௌந்தரி என்ற இணையர்களுக்கும் 1924ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒன்பதாம் நாளில் பிறந்தவர். பெற்றோர் இட்ட பெயர் இமானுவேல்.*

*பரமக்குடி (TELC) என்ற கிருத்துவ தொடக்கப்பள்ளியில் ஆரம்பப் பள்ளிப் படிப்பையும், இராமநாதபுரம் சுவார்ட்ஸ் உயர்நிலைப்பள்ளி யில் உயர்நிலைக் கல்வியையும் முடித்தவர். உயர்நிலைக்கல்வி படிக்கும்போதே தனது தந்தையுடன் "வெள்ளையனே வெளியேறு" என்ற நாட்டு விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைப்படுத்தப்பட்டவர்.*

*இவர் நேதாசியின் இந்தியத் தேசிய இராணுவப்படையில் சேர முயன்று அது முடியாமல்போன நிலையில் அண்ணல் அம்பேத்கரின் வானொலி உரை அறைகூவலின் விளைவாக இராணுவப் படையில் சேர்ந்து பணியாற்றி அவில்தார் என்ற பதவியில் பணியாற்றியவர்.*

*இவர் இராணுவத்தில் பணிபுரிகின்ற காலத்தில் அவர் பிறந்த கிராமத்திலும், சுற்றுவட்டார கிராமங்களிலும், சாதிவெறி, தீண்டாமைக் கொடுமைகள் தலைவிரித்தாடியதை அறிந்து அக் கொடுமைகளைக் களைந்தெறியும் இலட்சியத்தோடு, இராணுவப் பணியைத் துறந்து சமூகப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டவர்.*

*இவரது தீண்டாமை ஒழிப்பு, ஆதிக்கச் சாதி எதிர்ப்புப் போராட்டம், பள்ளர் சமூக மக்களுக்காக மட்டும் அல்லாது சாதியின் பெயரால் ஒடுக்கப்படுகின்ற அனைத்து வகுப்பினரின் உரிமைகளுக்காகவும் செயல்பட்டார். அதன் அடிப்படையில் அவர்* ***ஒடுக்கப்பட்டோர் உரிமைக் கழகம்*** *என்ற பெயரில் மக்கள் அமைப்பாகத் திரட்டிச் செயல்பட்டு வந்தவர். அப்பொழுது அப் பகுதியில் பள்ளர்கள், பூவைசிய இந்திரகுல வேளாளர் என்றும், தேவேந்திரகுல வேளாளர் என்றும் சாதிச் சங்கப் பெயர்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.*

*மக்கள் மத்தியில் மண்டிக்கிடக்கும் அறியாமையைப் போக்குவதும், அச்சத்துடன் வாழ்ந்து வருபவர்கள் சாதியக் கொடுமைகளுக்குத் தங்களின் தலைவிதியே காரணம் என எண்ணி வந்ததையும் தகர்த்து, புரிதலோடும் துணிச்சலோடும், சுயமரியாதையோடும், வாழ உணர்வூட்டியவர். ஒவ்வொரு கிராமத்திலும், திடகாத்திரமான உடல் அமைப்புள்ள இளைஞர்களுக்கு முறையான தற்காப்புப் பயிற்சிக் கலைகளைக் கற்றுக்கொடுத்து உள்ளத்தில் துணிச்சலை ஏற்படுத்தி*

ஆதிக்கத்திற்கு எதிராகவும், மக்களுக்குப் பாதுகாப்பு அரணாகவும் செயல்பட வைத்தவர். தீண்டாமை ஒழிப்பு மாநாடு, இரட்டைக் குவளை ஒழிப்பு மாநாடும், கோவில் வழிபாட்டில் சமஉரிமை கோரும் போராட்டங்களையும் நடத்தியவர்.

தேக்கம்பட்டி பாலசுந்தரராசு (தேனி மாவட்டம்) என்ற தலைவருடன் உறவுகொண்டு அவர் வழியாக அன்றைய காலத்தில் மதுரை வந்த அண்ணல் அம்பேத்கரை நேரில் சந்தித்து இங்கு நடைபெறும் தீண்டாமைக் கொடுமைகளைப் பற்றி விளக்கியவர்.

திடகாத்திரமான உடல்வாகும், இராணுவ அதிகாரி என்ற பதவி இருந்ததும், தமிழ் மொழியுடன் இந்தி ஆங்கிலப் புலமை உள்ளவராக வும் இருந்ததால், அரசு அதிகாரிகளிடம் மக்கள்படும் கொடுமைகளைக் களையவும், சாதி வெறியர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும், போராடியவர். தீண்டாமை ஒழிப்பு - சாதி ஒழிப்பு, சமூக சமத்துவம் என்ற சமூக நீதிக்கான நிலையைப் புரிந்து போராடி வீர மரணம் அடைந்தவர்.

ஒடுக்கப்பட்டவர்களின் எழுச்சிக்கான அடையாளம், 1956 டிசம்பர் 6-இல் அண்ணல் அம்பேத்கர் மறைவையொட்டிப் பரமக்குடியில் இரங்கல் பேரணி, பொதுக்கூட்டம் நடத்தியவர்.

பார்ப்பனிய இந்துத்துவ சமூகக் கட்டமைப்பு, மனுதர்மத்தின் அடிப் படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இத் தத்துவம் சாதிகளுக்குள் தமிழ்த் தேசிய எல்லைக்குள் இனரீதியாகவும், பல்வேறு வேலைப் பிரிவு களைக் கொண்ட குழுக்களாகவும், வாழ்ந்து வந்தனர். முற்காலங்களில் சாதி, இறை நம்பிக்கை, மதங்கள், வழிபாடு, பூஜை, புனஸ்காரங்கள் எவையும் இல்லாமல் இன அடிப்படையிலே வாழ்ந்துவந்தனர்.

ஆரிய வருகை, பார்ப்பனிய இந்துத்துவம், மனுதர்மம் என்ற பெயரில் தமிழகச் சமூக மக்களைப் பல்வேறு சாதிகளாக வகைப்படுத்தினர். அச் சாதி மக்களில் ஒருவருக்கு கீழ் ஒருவராகவும், ஒவ்வொரு பிரிவினருக்கும் சாதியத் தொழில்களைக் கட்டமைத்து நடைமுறைப்படுத்தினர். மேலும், புனிதம், தீட்டு, உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பிரித்ததோடு தீண்டாமை, அண்டாமை எனக் கொடுமையான முறையில் சமூக மக்களைப் பிரித்த தோடு ஒன்றின்கீழ் ஒன்றாக வகைப்படுத்தி ஏற்கவைத்து நடைமுறைப் படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு பிரிவிலும் பிறப்பதென்பது அவரவர் தலைவிதி. இதை மீறுவது ஆண்டவனுக்குச் செய்யக்கூடிய துரோகம் எனக் கடவுளின் பெயராலும் சாத்திரங்களின் பெயராலும் பிரித்து, ஏற்கவைத்து நீண்ட நெடிய காலங்களாக நடைமுறைப்படுத்தியும், பாது காத்தும் வருகின்றன. இவ்வாறான பார்ப்பனிய நலனுக்கான இந்துத்துவ

மனுதர்ம கட்டமைப்பின்மூலம் சாதியக் குழுகங்களிடையே கலப்பு ஏற்பட்டுவிடாமல் தடுப்பதற்காகவே திட்டமிட்டு அகமணமுறை என்ற சுயசாதி திருமணத்தை ஏற்படுத்தியும், அதை நியாயப்படுத்தியும், அதை மீறுவது குமுகக் குற்றம், தண்டிக்கப்படவேண்டியது என்ற வகையில் சாதியத்தைப் பாதுகாத்து வருகின்றன.

இச் சாதியக் கட்டமைப்பை நான்கு வர்ணங்களாக்கி மக்களைப் பிரித்தனர். இவ் வர்ணமுறையை ஏற்க மறுத்த கூட்டத்தினரை வர்ணமற்றவர்களாக்கி, அவர்களைச் சண்டாளர்கள் எனவும், தீண்டத் தகாதவர்கள் எனவும், தொடவோ, பார்க்கவோ தகுதி அற்றவர்கள் எனவும் ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமாக ஒதுக்கி வைத்தனர்.

இவர்களுக்கு உடைமை மறுக்கப்பட்டு ஆயுதங்கள் மற்றும் கல்வியை மறுத்ததுடன் ஏனைய நால்வர்ணக் கூட்டத்தினர்களுக்கான இழிவான வேலைகளைச் செய்ய வைத்தனர்.

இக் கொடுமையால் பல ஆயிரம் ஆண்டுகாலமாக அடக்கி ஒடுக்கி ஓரங்கட்டப்பட்டவர்கள், பல்வேறு சமூகச் சீர்திருத்தவாதிகளாலும், சமூக மாற்றத் தலைவர்களாலும், வெள்ளையர்களின் ஆட்சி அதிகாரத் தாலும், மாற்றங்கள் தோன்றின. அதன் விளைவு ஒடுக்கப்பட்டவர்கள் தங்களின் மனித மாண்பிற்காகவும், சம உரிமைக்காகவும், பொருளியல் உரிமைக்காகவும், விழிப்புணர்வு பெற்று, கிளர்ச்சிப் போராட்டம் மற்றம் தற்காப்பிற்காக எதிர்தாக்குதல் என முன்னேறினர்.

இவ்வாறான போராட்டங்கள் மனுதர்ம வர்ணக் கோட்பாட்டின்படி தீண்டத்தகாதவர்களைவிட மேலானவர்களாக என்னும் சூத்திர சாதிப்பிரிவினர்களை ஏற்க மறுப்பதுடன் அவர்களைக் கொடூரமாக ஒடுக்குவதும் உடைமைகளை நாசப்படுத்துவதுடன் கொள்ளையடித் துச் செல்வதும், ஊனமாக்குவதும், தேவைப்பட்டால் உயிரைப் பறிப்பது, குடிநீரில் கழிவுகளையும், நஞ்சையும் கலப்பது என்ற சாதிவெறிச் செயல்கள் நீண்ட நெடுங்காலமாக நடந்துவருகின்றன என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

இவ்வாறான அடக்குமுறைகளை எதிர்த்து இமானுவேல்சேகரன் மக்களை இயக்கமாகத் திரட்டிப் போராடி வந்தார்.

குறிப்பாக முதுகுளத்தூரின் தென்மேற்குப் பகுதியில் 20க்கும் மேற் பட்ட கிராமங்களில் வசித்து வரும் ஆப்பநாடு என்னும் மறவர் கூட்டத் தைச் சேர்ந்தவர்தான் முத்துராமலிங்கத் தேவர். இவர் தன் தந்தை, தாத்தா, பாட்டனார்களைப் போன்று அல்லாமல் கல்வி கற்றவராகவும், ஆங்கில அறிவுள்ளவராகவும், நாட்டுப்பற்றுள்ளவராகவும், சுதந்திரப் போராட்ட வீரராகவும், சிறந்த மேடைப் பேச்சாளராகவும் விளங்கினார்.

இவர் தன்னைக் காங்கிரசு பேரியக்கத்தில் இணைத்துக்கொண்டு செயல்பட்டார். இவரைவிடச் சாதியாலும், கல்வியாலும் பின்தங்கிய காமராசர் காங்கிரசு கட்சித் தலைவர், தமிழக முதல்வர் எனப் பதவி பெற்று வந்ததைப் பொறுத்துக்கொள்ள முடியாத முத்துராமலிங்கம் மேற்கு வங்கத்தில் நேதாசி சுபாசு சந்திரபோசால் ஆரம்பிக்கப்பட்ட "பார்வர்ட் பிளாக்" என்ற இடதுசாரி சித்தாந்த கட்சியை, வலதுசாரி சித்தாந்தத்துடன் தமிழகத்தில் காங்கிரசு கட்சிக்கு எதிராக ஆரம்பித்து அதன்மூலம் தேர்தல் அரசியலில் ஈடுபட்டுத் தனது கட்சிச் சார்பில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றிபெற்றதுடன் பட்டியல் வகுப்பினரில் தனது கட்சியையும், கொள்கைகளையும் ஏற்றுக் கொண்ட விசுவாசமான பள்ளர்களில் சிலரைத் தேர்தலில் நிற்க வைத்தார். அக் கட்சியின் சார்பில் மொட்டையன் குடும்பன் போன்றோரைச் சட்டமன்ற உறுப்பினராக்கினார்.

இவர் பெரும் தலைவராகவும், மூர்க்கமானவராகவும், விளங்கிய காலங்களில், தங்கள் சமூகத்தினர் செய்துவரும் சாதிய அடக்குமுறை களையோ ஒடுக்கப்பட்ட மக்களின் குடிநீரில் விசம், மலம் கலந்து பாழ்படுத்துவதைத் தடுக்கவோ, கண்டிக்கவோ இல்லை.

மேலும் தன் தலைமையிலான பார்வர்டு பிளாக் கட்சிக்கு ஓட்டுப் போடாதவர்களை, அவரின் விசுவாசிகள் தாக்குவதை தடுத்ததாகத் தெரியவில்லை. பள்ளர்களில் ஒரு சிலரைத் தவிரபெரும்பாலானோர், காங்கிரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு ஓட்டுப் போடுபவர்களாக இருந்தனர்.

தங்கள் மீதான அடக்குமுறைகளை எதிர்த்துக் கேட்ட இளைஞர் களை அமைப்பதாகத் திரட்டி, தீண்டாமைக் கொடுமைகளுக்கெதிராய் களப் போராட்டங்களையும், மாநாடுகளையும் நடத்திவந்த இமானுவேல் சேகரனைத் தலைவராக ஏற்றுக்கொண்டு ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் குறிப்பாகப் பள்ளர் சமூகத்தினர் திரண்டனர். இமானுவேல் தன்னைக் காங்கிரசுப் பேராயக் கட்சியில் இணைத் துக்கொண்டு செயல்பட்டதால் அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்ட பள்ளர்கள் காங்கிரசு கட்சியின் வேட்பாளர்களுக்கே தங்கள் வாக்கு களைப் போட்டு வந்தனர்.

இச் செயல் பார்வர்ட் பிளாக் கட்சியினருக்குப் பெரும் ஆத்திரத்தை யும், கோபத்தையும், பள்ளர் சமூகத்தினர்மீதும், இமானுவேல் சேகரனார்மீதும் ஏற்படுத்தியது.

அதன் விளைவாகக் கிராமங்களில் பள்ளர், மறவர் மோதல் பெரும் அளவிலும் விரிந்த தளத்திலும் நடைபெற்றன.

முதுகுளத்தூர் சட்டமன்ற இடைத்தேர்தல் முடிவிற்குப்பின், மக்களிடையே ஏற்பட்ட மோதலைப் பதட்டத்தைத் தணிக்கும் திட்டத்திலேயே 1957 செப்டம்பர் 10ஆம் நாள் முதுகுளத்தூரில் அன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.பணிக்கர் (IAS) அவர்கள் தலைமையில் நடந்த சமாதானக் கூட்டம் நடைபெற்றது. அதில் காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் பார்வர்ட் பிளாக் கட்சித் தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் கலந்துகொண்டனர். அக் கூட்டத்தில் முத்துராமலிங்கம் பேசும்போது காங்கிரசுக் கட்சியும், நாடார்களும், பள்ளர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து மறவர்கள்மீது தாக்குதலை நடத்த வைத்தனர் என்றார். அதை மறுத்த இமானுவேல் மறவர்கள்தாம் எங்கள் கிராமங்களில் தாக்குதலை நடத்தி உடைமைகளைத் தீயிட்டும் கொள்ளையடித்தும் சென்றனர் எனத் தனது தரப்பு நியாயங்களைத் துணிச்சலாகக் கூட்டத்தில் வெளிப்படுத்தினார்.

இதையொட்டி 1957 செப்.11ஆம் நான் இமானுவேல் சேகரனைப் பரமக்குடியில் இரவு நேரத்தில் ஒரு கும்பல் கொடிய ஆயுதங்கள் கொண்டு தாக்கியதில் வீரமரணம் அடைந்தார். இக் கொலை என்பது சாதிவெறி வன்மத்துடனேதான் நடத்தப்பட்டது.

- **அமைதிப்பேச்சு வார்த்தை...**

1957 இடைத்தேர்தலில் போட்டியிட்ட காங்கிரசுக் கட்சி மற்றும் பார்வர்ட் பிளாக் கட்சி வேட்பாளருக்கு ஒட்டு சேகரிப்பதையொட்டியே பெரும் கலவரங்கள் ஏற்பட அதைத் தடுத்து நிறுத்திச் சமூகத் தீர்வு காணவே நடத்தப்பட்டதால் - இமானுவேல் சேகரன் கொலை அரசியல் அடிப்படையில் நடந்தாகப் புணைப்படுகின்றது.

- **இம்மானுவேல் சேகரனாரின் வீரவணக்க நினைவுப் பேரணி, ஜெயந்தியாக சடங்குகளோடு நடத்தப்படுவது...**

இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு உயிர்நீத்த கொடுஞ்சிறைத் தண்டனைகள் அனுபவித்த தேசபக்த தலைவர்களை அவர் பிறந்த சாதியை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு தங்கள் சாதித்தலைவராகச் சித்தரிப்பதும், அவர்களுக்குப் பிறந்தநாள், இறந்த நாள்களுக்கு விழா எழுப்பதும் நடைபெற்று வருகின்றன. அந்த அடிப்படையில் முத்துராமலிங்கத் தேவரைக் கடவுளாகச் சித்தரித்து பூசை நடத்துவது, முளைப்பாரி எடுப்பது, மொட்டை போடுவது, பால்குடம் எடுப்பது என்ற சடங்குகளோடு, அம் மக்கள் அவரின் பிறந்த, நினைவுநாள் விழாக்களைக் கொண்டாடி வருகிறார்கள்.

*நீண்ட நெடிய நாட்களாகப் பல்வேறு சாதிய அடக்குமுறைகளால் பாதிக்கப்பட்ட பெருவாரியாக மறவர்களால் பாதிக்கப்பட்ட பள்ளர்கள், அவ் அடக்குமுறைகளை எதிர்த்து அந்தந்தப் பகுதி மக்கள் போராடி வந்தனர்.*

*அப்படிப்பட்டச் சூழலில் ஒருபகுதி முழுக்க மக்களை ஓர் அமைப்பாகத் திரட்டி ஒரு தலைமையின்கீழ்ப் போராடியது என்று மாவீரன் இம்மானுவேல் சேகரனின் களப்போராட்டமே முதலில் அமைந்தது. அப் போராட்டத்தில் காலத்தில் மக்களைத் திரட்டி, அவர்களிடம் மண்டிக்கிடந்த அறியாமையைப் போக்கி, விழிப்புணர்வை ஏற்படுத்தித் தீண்டாமைக்கு எதிராக, தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தியதும் மற்றும் பெரிய அளவிலான மக்களைத் திரட்டி மாநாடு நடத்தியதும், இம்மானுவேல் சேகரனே முதன்மையானவர். இம்மானுவேல் சேகரனின் வீரம் செறிந்த மக்கள் இயக்கப் போராட்டம் சுமார் மூன்று ஆண்டுகள் ஆன நிலையில் அத் தலைவர் 33 வயதே ஆன இளம் தலைவரே. சாதி ஆதிக்கவெறி அவரின் உயிரைப் பறித்தது என்பது, பள்ளர் சமூகத்தை மட்டுமல்லாது சமத்துவத்தை விரும்பும் சனநாயகச் சக்திகளையும், நியாயவுணர்வுள்ளவர்களையும் அதிர்ச்சியடைய வைத்தது. அன்றைய அரசியல் கட்சித் தலைவர்கள் மட்டுமல்லாது தமிழகத்தின் முதலமைச்சர் தலைமையிலான சட்டமன்றமும், அவரது படுகொலையைக் கண்டித்தது. கூடுதலாக அன்றைய இந்திய நாட்டின் பிரதமரான சவகர்லால் நேரு அவர்களும் இக் கொலையைக் காட்டுமிராண்டிச் செயல் என்று அகில இந்திய வானொலி மூலம் கண்டித்தார். இவ்வாறான சூழலில் மாவீரன் இம்மானுவேல் சேகரனை ஒடுக்கப்பட்ட மக்கள், குறிப்பாகப் பள்ளர்கள் தலைவராக மட்டுமல்ல கடவுளாகவும் சமூக விடுதலைக்கு வித்திட்டவராகவும், பார்ப்பதோடு ஏற்றியும், போற்றியும் வருகின்றனர். அதன் அடிப்படையில் அவரைக் கடவுளாகப் பாவித்து செயந்தியாக்கி முளைப்பாரி, பால்குடம் எடுத்தல், மொட்டை போடுதல் போன்ற வழிபாடுகளை நினைவு நாள்களில் நிகழ்த்தி வருகின்றனர்.*

*தியாகி இம்மானுவேல் பேரவையைப் பொறுத்தளவில் செயந்தி, சடங்கு, சம்பிரதாயம், வழிபாடுகளை முற்றிலுமாக மறுதலிப்பதோடு, மாவீரன் நினைவுநாள் சாதிய அடக்குமுறைகளைத் தகர்த்தெரிந்து சாதிய ஒழிப்பு, சமூகநீதி என்ற இலட்சியத்திற்கான எழுச்சி நாளாகவே ஏற்று மக்கள் மத்தியிலே சமூக அரசியல், பொருளியல் விடுதலை உணர்வை ஏற்படுத்தி வருகின்றோம்.*

- **ஆண்ட பரம்பரைச் சாதிகள் என பறைசாற்றுவது குறித்து...**

*இக் கருத்தில் தியாகி இம்மானுவேல் பேரவையினருக்கு துளியேனும் உடன்பாடு இல்லை. ஆண்ட பரம்பரை என்று வருகிறபோது அரசன் என்பவன் தன் மக்களை அடக்கி வைப்பதும், அவர்களின் உழைப்பைச் சுரண்டுவதும் மன்னர் தருமமாகும். கூடுதலாகச் சனநாயகம் (மக்கள் நாயகம்) என்பதற்கு எள் முனையிலும் இடமில்லை. அரசனின் எவ்வகை யான உத்தரவுகளாக இருந்தாலும் அவ் உத்தரவுகளை அப்படியே ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும்; நடக்க வேண்டும். மீறினால் சிறைவாசம் மற்றும் கொடும் தண்டனை உண்டு. மேலும் அரசனாக இருப்பவரின் மூத்த மகன் மட்டுமே அடுத்த அரசர் பதவியை ஏற்கத் தகுதியானவன். அரசன் பெற்ற பிள்ளையானாலும் மற்ற பிள்ளைகளுக்கு அந்தத் தகுதி இல்லை. கூடுதலாக உலகநாடுகளில் பெரும்பாலும் முடி மன்னர் ஆட்சி இல்லை. அதிலும் இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும், மன்னர் ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டதுடன் படை, பரிவாரங்கள், கோட்டை, கொத்தளங்கள் என ஏதும் இல்லை. மாறாக மக்களே வாக்களித்துத் தங்களுக்கான தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, இந்நாட்டை ஆட்சி செய்வது என்பதற்கான அரசியல் சட்டத்தின் அடிப்படையில் ஆன சனநாயக நாடாக உள்ளது.*

*தற்பொழுது நமது சனநாயகம் என்பது சாதி, மதங்களைப் பிரதான மாக நடைமுறைப்படுத்துகிறதாகவும், மக்களின் வளங்களை, தேசிய இனங்களை ஒடுக்குவதுடன், தேசிய இயற்கை வளங்களைச் சூறையாடு வதும், வல்லாதிக்கத்திற்குத் துணை செய்வதும், ஆரிய பார்ப்பனிய இந்துத்துவம் மூலம் தொடர்ச்சியாகத் தங்களின் அரசியல் அதிகாரத் தைச் செயல்படுத்தி வருவதுமான மக்கள் விரோத சனநாயகம் மட்டுமே இன்று நடைமுறையில் உள்ளது.*

- **பள்ளர் (தேவேந்தி வேளாளர்) சமூகத்தினரைப் பட்டியல் இனப்பிரிவில் இருந்து நீக்குவது சம்மந்தமாக...**

*பார்ப்பனிய இந்துத்துவ சாதியக் கட்டமைப்பில் சமூக அரசியல், பொருளாதார, கலாச்சார ஒடுக்குமுறையிலிருந்து விடுவித்துக் கொள் வதற்கே இடஒதுக்கீடு என்ற சமூகநீதி கோட்பாடு, பிரிட்டீசார் ஆட்சிக் காலம் முதல் உள்ளது. குறிப்பாக 1950இல் இந்தியத் துணைக்கண்டத் திற்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களால் வடிவமைத்துக் கொடுக்கப் பட்ட இந்திய அரசியல் சாசனம், இட ஒதுக்கீடுகளை வழங்கிப் பாதுகாத்து வருகிறது.*

*பள்ளர் சமூகத்தில் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் குறிப்பாக*

அரசியலில் உள்ள இட ஒதுக்கீட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்தி ஒட்டு மொத்த மக்கள்தொகையில் சுமார் 20% விழுக்காட்டுக்குக் குறைவானர் களைப் பயன்படுத்திச் சற்று சமூகத்தில் முன்னேறி உள்ளனர்.

ஒன்றிரண்டு விழுக்காட்டுக்குக் குறைவான எண்ணிக்கையில் உள்ள பள்ளர்கள், உயர்கல்வி, அதன்வழியாக உயர்பதவி பெற்று பள்ளர் குமுகத்தில் பெரும் வசதி வாய்ப்பு உள்ளர்வர்களாக வளர்ந்துள்ளனர். இவர்கள் 'கார்' மற்றும் பங்களாக்களோடும் பெறும் வசதி வாய்ப்புகளோடும் வாழ்ந்து வருவதோடு தங்களுடைய பிள்ளைகள் பெற்ற இடஒதுக்கீட்டு உயர்கல்வி மூலம் வெளிநாடுகளில் உயர்பதவிகளில் அமர்ந்து இலட்சக் கணக்கில் வருவாய் ஈட்டி வருகிறார்கள். ஒருசிலர் தேர்தல் அரசியலில் பதவிகளைப் பெற்று அதன் மூலம் பணம் மற்றும் புகழ் அடைந்துள்ளார்கள். இவர்களைப்போன்ற ஒரு சிறிய கும்பல் இடஒதுக்கீடு தங்களுக்குத் தேவை இல்லை என்ற நிலையில் இடஒதுக்கீடு என்பது இழிவானது என்றும், பள்ளர் குமுக மக்களுக்கு இடஒதுக்கீட்டைவிட சாதியப் பெருமையே முதன்மை யானது என்ற கருத்தை உருவாக்கி அக் கருத்தைப் பார்ப்பன இந்துத்துவ சக்திகளின் துணையோடு வெகுமக்கள் மத்தியில் பரப்பி வருகிறார்கள்.

பட்டியலிலிருந்து, வெளியேற்றம் என்ற கருத்து என்பது பெருவாரி யான குமுக மக்களை மீண்டும் குமுக அரசியல், பொருளியல், கல்வி மற்றும் வேலை வாய்ப்பைப் பெறவிடாமல் அம் மக்களைப் பாதாளத் திற்குத் தள்ளும் சூழ்ச்சியாகும். சாதிய குமுகம் மற்றும் சுயசாதி திருமணங்கள் நீடிக்கும்வரை சாதிய முரண்பாடுகளும், ஏற்றத்தாழ்வு களும் ஏற்படுவதை எக்கொம்பனாலும் தடுக்க முடியாது. மாறாகச் சாதி அமைப்பை வலுவாகப் பாதுகாக்கும். பட்டியல் வெளியேற்றம் என்ற சொல் சாதியம் நீர்த்துப்போக வைக்காது என்ற புரிதலில் தியாகி இமானுவேல் பேரவையினர் உறுதியாக உள்ளனர்.

## ● சாதி ஒழிப்புப்போரில் இடைநிலைச்சாதிகள்...

இந்தியத் துணைக்கண்டம் உள்ளிட்ட தமிழகத்தில் உள்ள அனைத் துச் சாதிகளும் பார்ப்பனிய இந்துத்துவத்தை நீண்ட நெடிய காலங்களா கத் தங்களின் அன்றாட வாழ்வியல் முறையில் பிரிக்க முடியாத அளவில் இரண்டறக் கலந்துவிட்டனர். சாதிய உணர்வு ஒவ்வொரு மனிதர் களிடமும் ஓடுகின்ற குருதியிலேயே கலந்துவிட்டது.

ஒவ்வொரு சாதியினரும் தங்களின் சாதியின் பெருமைகளைப் பேசிப் பாதுகாத்து வருவதுடன் தங்களைவிட மேலான சாதிகளைப்பற்றி கவலைப்படாமல் தங்களுக்குக் கீழே ஒரு சாதி உண்டு என்றும், நாம்

அவர்கள் முதுகிலே சவாரி செய்யலாம் எனக் கருதுவதோடு, பழக்க வழக்கங்களைச் சாதியடிப்படையில் கடைப்பிடித்து அதன்வழி வாழ்ந்து வருவதுமான நிலையை நீடிக்கச் செய்ய வேண்டும். இதை மீறும் அல்லது மறுதலிக்கும் சாதிகளை நாம் அடக்கி ஒடுக்கி வைக்க லாம் என்பதும் இதற்கான மேலாதிக்க உரிமைகளைத் தங்களுக்குச் சாதிய சமூக அமைப்பு வழங்கியுள்ளது என எண்ணி ஏற்று செயல் படுத்தியும் வருகின்றனர்.

தமிழகம் முழுவதும் தங்களின் சாதிய அதிகாரப் பலத்தால், குமுக, அரசியல் பொருளாதார ஆதிக்கத்தையும் அதன் வழிப்பட்ட சாதிய பழக்க வழக்கங்களையும் பாதுகாத்து செயல்படுத்தி வருவதுடன், இந்துத்துவப் பார்ப்பனியச் சாதிய குமுக அமைப்பின் அரண்களாகவும் அடியாட்களாகவும், செயற்பட்டு வருகின்றனர். இச் சாதியினர் மண்டலம், மண்டலமாகப் பெரும்பான்மை எண்ணிக்கையுடன் வாழ்ந்து அதிகாரம் செலுத்தி வருகின்றனர்.

தமிழகத்தின் தென்பகுதியில் கள்ளர், மறவர், அகமுடையார் என்ற முக்குலத்தோரும் மேற்குப் பகுதியில் கவுண்டர்கள் என்ற பொதுச் சொல்லால் அழைக்கப்படுகின்ற பல்வேறு பிரிவு கவுண்டர்களும், வடபகுதியில் வன்னியர் என்ற பொதுப்பெயரில் அழைக்கப்படுகின்ற இருபதிற்கும் மேற்பட்ட பிரிவினரைக் கொண்டவர்களாகவும் வாழ்ந்து வரும் ஆதிக்கச் சாதிகள் தமிழக அரசியல், அதிகாரங்களையும் அரசு சார்ந்த அனைத்து வகையான நலத்திட்டங்களைச் செயல்படுத்தப் பயன் படும் ஒப்பந்தங்களையும் கைப்பற்றி முழுமையாக ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

மேலும் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் எந்தச் சாதியினர் பெரும்பான்மை எண்ணிக்கையுடனும், பொருளாதார முன்னேற்றத்துட னும் வாழ்ந்து வருகிறார்களோ, அவர்களே சாதி ஆதிக்கம் செய்பவர்களாகவும் உள்ளனர்.

மேலும், எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், சாதிய குமுக அமைப்பில் உயர் சாதியினராகவும், மேல்சாதியினராகவும், வாழ்ந்து வருபவர்கள் "பாரம்பரியம்" என்ற பெயரில் சாதியப் பழக்க வழக்கங்களைப் பாதுகாத்தும் செயல்படுத்தியும் வருகின்றனர்.

ஆதிக்கச் சாதிகள், சாதிய ஆதிக்கவாதிகளின் உயர்சாதியினர், மேல்நிலைச் சாதியினர் என அனைவரும் சாதிய அமைப்பை மிகக் கடுமையாகப் பாதுகாத்து வருகின்றனர்.

சாதியடிப்படையில் உரிமைகள் மறுக்கப்படுவதுடன் மனித சமத்துவத்திற்காகவும் போராடுகிற ஒடுக்கப்பட்ட சாதியினரை ஆதிக்கச்

சாதியினர்கள் பரந்த அளவிலும், ஆங்காங்கே சாதிய ஆதிக்க வாதிகள் ஒடுக்கப்பட்டவர்களை மிகக் கொடூரமாகத் தாக்கியும், அடக்கியும், ஒடுக்கியும் வருகின்றனர்.

இவ்வாறான சாதிகளில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் சாதி ஒழிப்பிற்குத் துணை நிற்கின்றனர். குறிப்பாக இடதுசாரிகளிலும் பெரியாரியவாதிகளிலும், தமிழ்த்தேசியவாதிகளிலும், சாதி ஒழிப்பிற்கான செயல்பாட்டாளர்கள் உள்ளனர்.

- **தென்தமிழ்நாட்டில் சாதிய வன்முறை பெருகி வருவதன் காரணம்...**

தமிழகத்தில் 70க்கும் மேற்பட்ட பிரிவுகளில் ஒடுக்கப்பட்ட குமுகத்தினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் தேவேந்திரகுலம் என்ற பள்ளர்களும், ஆதிதிராவிடர் என்ற பறையர்களும், அருந்ததியர் பிரிவினரும், ஒடுக்கப்பட்டவர்களுள் மிகவும் பெரும்பான்மையினர்.

குறிப்பாகத் தேவேந்திரர் என்ற பள்ளர்கள் தென்மாவட்டங்களில் மிகுந்த எண்ணிக்கையிலும், கொங்கு மண்டலத்திலும், சோழ மண்டலத்திலும், பகுதிபகுதியாகவும், வாழ்ந்து வருகின்றனர்.

சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் கல்வி, வேலை வாய்ப்பு, தொழில் என்ற அடிப்படையில் அப்பகுதியிலும் வாழ்ந்து வருகின்றனர். ஆதி திராவிடர்களும், அருந்ததியரும், தென் மாவட்டங் களில் எண்ணிக்கையில் குறைவாக வாழ்ந்து வருகின்றனர். ஆதி திராவிடர்களில் பெரும்பாலானவர்கள் கூலி விவசாயிகளாக உள்ளனர். அருந்ததியர்களில் கூலி விவசாயிகள் குறைவாகவும், மிகுதியாக உடல் உழைப்பின்மூலம் வருமானம் ஈட்டுபவர்களாகவும் உள்ளனர். ஒடுக்கப் பட்டவர்களில் பெரும்பான்மையான அருந்ததியர்கள் துப்புரவுப் பணி யில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தேவேந்திர குலத்தினர் பெரும்பாலானவர்கள் சிறிய எண்ணிக்கை யில், நில உடைமையுடன் வேளாண்மை செய்து வருகிறார்கள். மிகக் குறைவானவர்களே கூலி விவசாயிகளாக உள்ளனர். கூடுதலாக நாயக்கர் ஆட்சிக் காலத்திற்கு முன்புவரை பெரும் நிலவுடைமையாளராக வாழ்ந்து வந்தனர். இவர்கள் மற்ற குமுகத்தினரைச் சார்ந்துவாழ வேண் டிய சூழல் இல்லை. மேலும், அரைநூற்றாண்டுக்கால கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல், பொருளாதார முன்னேற்றத்தால் தங்கள் பொருளா தாரத்திலும் வாழ்வியல் முறையிலும் மாற்றம் ஏற்பட்டதாலும், உடல் பலத்தாலும், சாதிய அடக்குமுறைகளை மூர்க்கமாக எதிர்ப்பதுடன் கிராமப்புற அதிகாரங்கள், அரசு ஒப்பந்தங்கள் போன்றவற்றில் தங்களுக் குரிய அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதில் முனைப்பாகவுமுள்ளனர்.

இப்பகுதியிலுள்ள ஆதிக்கச் சாதிகள் என்ற இடைநிலை சாதிகளும், சாதி ஆதிக்கவாதிகளும் இவர்களை உடல் பலத்தால் எதிர்க்க முடியா மல் ஆயுதபலம் கொண்டு ஒடுக்கமுனைகிறபொழுது, பள்ளர்களும் அவர்களை ஆயுத பலத்துடன் எதிர்தாக்குதல் நடத்தி அழிக்கின்றனர். அடக்குமுறைக்கு அடக்குமுறை, பழிக்குப்பழி என எதிர்ப்பதில் உறுதியாக உள்ளனர். பாதிப்பு ஏற்படுகிறபொழுது அன்றாட வாழ்க்கை யில் பொருளியல் நெருக்கடிகள் ஏற்படுவதில்லை. மேலும் தென்தமிழ கத்தில் தொழில் வளங்கள், நீர்வளங்கள், இல்லை. பெருவாரியான கிராமங்களில் விவசாயம் பொழிகின்ற மழையை நம்பியே செய்யப்படு கிறது. பெரும்பான்மையான பகுதிகளில் விவசாயம் என்பது ஒருபோக சாகுபடி மட்டுமே. வேலைவாய்ப்புகள் குறைவு. எனவே இக் காரணங்க ளால் சாதிய வன்முறைகள் பெருகி வருகின்றன. வட மாவட்டம், மேற்கு மாவட்டங்களில் வாழ்ந்து வரும் ஆதிதிராவிடர், அருந்ததியர்கள் சாதி அடக்குமுறைகளை எதிர்த்து, எதிர்த்தாக்குதல் நடத்துவது என்பது மிக, மிகக்குறைவு. இவ்விரு பகுதிகளிலும் உள்ள ஆதிக்கச் சாதிகள், தென் மாவட்ட ஆதிக்கச் சாதிகளைப் போன்று மூர்க்கமானவர்கள் இல்லை. இவ்விரு பகுதிகளில் நகர்மையம், தொழில்வளம், வேலைவாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

- **பெரியாரின் போராட்டமும், ஒடுக்கப்பட்ட மக்களும்...**

நால்வர்ண சாதி அமைப்பில் சூத்திரர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் என இன்றைய பிற்படுத்தப்பட்ட சாதிகளும், கடுமையான பாகுபாட்டிற்கு ஆளாக்கப்பட்டனர். உயர்சாதிக்காரர்கள் நடத்தும் உணவகங்கள், தேநீர்க்கடைகள், கல்வி நிறுவனங்கள், சமய ஆலயங்கள் போன்ற பொது இடங்களில் அன்றைய சூத்திரர்களான இன்றைய பிற்படுத்தப் பட்டவர்கள் (70-க்கும் மேற்பட்ட சாதியினர்) நுழைய சாதிய அமைப்பு மறுதலித்தது. இவ்வாறான அனைத்து வகையான உரிமைகளும், கடவுளின் பெயராலும் மறுக்கப்பட்டன. மக்களும் ஏற்றுக்கொண்டனர்.

இதுபோன்ற புறக்கணிப்புகளை மீறுவது என்பது ஆண்டவனுக்குச் செய்யக்கூடிய பெரும் துரோகமாகும். மீறினால் இவர்கள் இறந்தபின்பு நரகத்தில் கொதிக்கும் எண்ணெய்ச் சட்டியில் தள்ளிவிடப்படுவார்கள் என்றெல்லாம் உயர் சாதியர்களால் குறிப்பாகப் பார்ப்பனர்களால் கூறப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. இவ்வாறான அறிவியலுக்கு ஒவ்வாத மூடநம்பிக்கைகள் மக்களின் மனத்தில் ஆழப் பதிந்து கிடந்தன. இக் கொடுமைகளால் சிறிய பாதிப்புக்கூட, அடையாத உயர்சாதி வகுப்பில் பிறந்த தந்தை பெரியார் கொதிதெழுந்தார். மக்களிடம்

மண்டிக்கிடந்த அறியாமையையும், மூடநம்பிக்கைகளையும், அதனைப் பாதுகாத்து வந்த இதிகாசப் புராணங்களையும், மிகக் கடுமையாகச் சாடி, எதிர்த்துப் போராடியும், மக்களை அவ்வறியாமை மூடநம்பிக்கை களிலிருந்து வெளியே கொண்டுவந்தார்.

மக்களிடம் இருக்கக்கூடிய பாகுபாடுகளுக்குத் தீண்டாமையும், அதற்கு அடித்தளமாக இருக்கும் சாதியையும், சாதியத்தை நியாயப் படுத்துகிற புராண, இதிகாசக் கட்டுக்கதைகளையும், அதன்வழியில் கடவுள்களையும் மிகக் கடுமையாக எதிர்த்துவந்தார். இவை திட்ட மிட்டு ஆரியப் பார்ப்பனர்களால் உருவாக்கித் திணிக்கப்பட்ட கட்டுக் கதைகள் எனப் போட்டுடைத்தார். மக்களை இவ்வறியாமையிலிருந்து புரியவைத்து சிந்திக்க வைத்தார். கடவுளைவிட அறிவும், சுயமரியாதை யுமே மனிதர்களுக்கு அவசியம் என்பதை உணர்த்தினார். இதனிடையே போராட்டங்களில் கடவுள் கொள்கைகள், இந்துத்துவம், புராணங்கள், இதிகாசங்கள், அதன்வழியான சாத்திர சடங்குகள், சாதியம், பெண்ணடிமை, குலத்தொழில் ஆகியவற்றை மிகக் கடுமையாக எதிர்த்துப் போராடினார்.

சாதிய அடக்குமுறையில் பஞ்சமர்களுக்கு மேலானவர்களாக இருந்த சூத்திரர்கள் எண்ணிக்கையில் பெருமளவிலும், உடைமைவாதிகளாக வும், செல்வந்தர்களாகவும், ஓரளவுக்குக் கல்வியறிவு பெற்றவர்களாகவும் இருந்தனர்.

பஞ்சமர்களுக்கு உடைமை, கல்வி, ஆயுதங்கள், மறுக்கப்பட்டுக் கிராமங்களில் ஊர் ஓரங்களில், ஒதுக்கி வைக்கப்பட்டதுடன் அவர்கள் ஏனைய குமுகாயத்தினருக்கான இழிவான வேலைகளைச் செய்ய வைத்ததுடன் இவர்கள் தங்கள் பகுதியைவிட்டுப் பொது இடங் களிலோ, பொதுத் தெருக்களிலோ நடமாடுவதற்கான உரிமையற்று அடிமைகளாக நடத்தப்பட்டு வந்தனர்.

இவ்வாறான சூழலில், தந்தை பெரியாரின் போராட்டங்களில் சூத்திரர்கள் பெருவாரியாகத் திரண்டனர். பெரியாருடன் இணைந்து போராடினர். பயன்பெற்றனர். அதே நேரத்தில் சூத்திரர்கள், ஒடுக்கப் பட்ட மக்களின் மீதான சாதி ரீதியான பாகுபாடுகளைக் கடைபிடித்தே வந்தனர்.

தந்தை பெரியாரும், முன்னணித் தலைவர்களும், சாதி ஒழிப்பை ஓங்கி ஒலித்தனர். அதற்காகப் போராடினார்கள். ஆனால், பெருவாரி யான பிற்படுத்தப்பட்டவர்கள் சாதியத்தை மறுதலிக்கவில்லை என்ப தோடு ஒடுக்கப்பட்ட மக்களைத் தீண்டத்தகாதவர்களாகவே நடத்தினர். இன்றளவிலும் நடத்தி வருகின்றனர்.

## ● தந்தை பெரியாரின் சாதி ஒழிப்பு...

*ஆணாதிக்க ஒழிப்பு, தீண்டாமை எதிர்ப்பு போன்ற கருத்துகளாலும், போராட்டங்களாலும், ஒடுக்கப்பட்டவர்கள், சாதிய அடக்குமுறை களை மறுத்தும், தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்தும் கிளர்ச்சி செய்தனர். இவர்களின் கிளர்ச்சிக்குத் தீண்டாமை ஒழிப்புச் சட்டங்களும், துணை நிற்கின்றன.*

*சாதிஒழிப்பு என்பது இந்துத்துவம் முற்றிலும் அழிக்கப்படுவதே ஆகும். இந்துத்துவ அழிப்பு என்பது இந்தியத் தேசிய ஆட்சி அதிகாரம் தகர்க்கப்படுவதோடு தொடர்புடையது. சாதியம் முழுமையாகத் தகர்க்கப்படும்பொழுதுதான் ஒடுக்கப்பட்டவர்கள் அனைத்து நிலைகளிலும் முழுவிடுதலை அடைய முடியும்.*

## ● ஒடுக்கப்பட்ட இயக்கமும், பெரியாருக்கு எதிரான போக்கும்...

*ஒடுக்கப்பட்ட இயக்கத்திற்குப் பெரியாருடைய சித்தாந்தம் ஒருபோதும், பகையாக இருக்காது. அதேநேரத்தில் “பெரியாரியம்” பேசுகிற இயக்கங்களில் ஒருசிலரைத் தவிர பெரும்பாலானோர், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கும், சாதி ஒழிப்பிற்கான செயல்தளத்திலும், செயலாற்றுபவர்களாக இல்லை.*

## ● ஒடுக்கப்பட்ட இயக்கங்களும், இன்றைய தேர்தல் முறையும்...

*இன்றைய தேர்தல் சனநாயகம் என்பது, சாதிய பலம், பொருளாதார பலம், வன்முறை, மக்கள்கூட்டத்திறன் என்பனவே, தேச நலனில், மக்களின் நலனில், கொள்கைகளில் நேர்மையற்றவர்களாக உள்ளவர் களே அரசியல் கட்சிகள் ஆரம்பித்துத் தலைமை தாங்கி நடத்தி வருகின்னர். இவர்களே தேர்தலில் பங்கும் கொள்கின்றனர்.*

*இன்றைய தேர்தல் சனநாயகம் என்பது சாதியத்தையும், இந்துத்துவத்தையும், இந்திய அரசியல் கட்டமைப்பையும், முழுமையாகப் பாதுகாத்து வருகின்றது. இவ்வாறான தேர்தல், அரசியலில் சாதிய பலம், பொருளாதார பலம் இல்லாததுடன், மக்கள் திரட்சியும் இல்லாத ஒடுக்கப்பட்ட இயக்கங்கள், மேலே சொன்ன அரசியல் கட்சிகளோடுதான் பேரம்பேசி, ஒருசில இடங்களைப் பெற்று சட்டமன்றம், நாடாளுமன்றத்திற்குச் செல்லலாம். இவ்வாறாகச் செல்பவர்கள், ஒடுக்கப்பட்டவர்களுக்குச் சட்டத்தால் அங்கீகரிக்கப் பட்டு நடைமுறையில் அவ்வுரிமைகள் மறுக்கப்பட்டு வருவதற்கு எதிராகக் குரல் மட்டுமே எழுப்ப முடியும். தேர்தலில் பங்கெடுக்கும்*

ஒடுக்கப்பட்ட இயக்கங்களின் தலைவர்கள், அதன் முண்ணனிகள் எனச் சிலர் மட்டுமே சட்டவிரோதமாக நியாயவிரோதமாக ஒருவகையில் ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களைக் காவுகொடுத்துத் தாங்கள் மட்டுமே சுகபோகமாக வாழலாம். மாறாக ஒடுக்கப்பட்ட இயக்கங்கள் தேர்தலில் பங்கு கொள்வதால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சமூக அரசியல், பொருளாதாரங்களிலும், சாதிய ஆதிக்க வெறிகளாலும் அரச பயங்கரவாதத்தாலும் பாதிக்கப்படுகின்றன பெருவாரியான மக்களுக்கு எவ்விதப் பயனும் இல்லை.

- **ஈழப் போராட்டத்தில் தியாகி இம்மானுவேல் பேரவை...**

தியாகி இம்மானுவேல் பேரவை தங்களின் இயக்க சக்திக்கேற்ப 1989ஆம் ஆண்டுமுதல் பல்வேறு போராட்டங்களை நடத்தி வந்திருக் கின்றது. ஈழப்போராட்டத்திற்கு ஆதரவாகப் பல்வேறு ஆர்ப்பாட்டங் களையும், கண்டனக் கூட்டங்களையும் நடத்தியுள்ளோம். அவ்வாறான நிகழ்ச்சிகளில் புதுக்கோட்டைப் பாவாணன், கொளத்தூர் மணி, தோழர் தியாகு போன்றவர்களைக் கலந்துகொள்ள வைத்துப் போராடி இருக்கிறோம். மேலும், தியாகி இமானுவேல் பேரவையோடு, ஒத்த கருத்துள்ள தோழமை இயக்கங்களோடும், கூட்டமைப்பாகப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளோம். தோழமை இயக்கங்கள் முன்னெடுத்த ஈழ ஆதரவுப் போராட்டங்களிலும் பங்களிப்புச் செலுத்தியுள்ளோம்.

- **இந்துத்துவச் சூழலில் தந்தை பெரியாரின் தமிழ்த் தேசியக் கருத்து...**

இந்துத்துவம் இந்திய ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி அதன் வழியாக அனைத்துவகையான ஒடுக்குமுறைகளைக் கட்டமைத்து, மூடநம்பிக்கைகளை வளர்த்து வருவதுடன், மனுதர்மக் கோட்பாட்டை முன்னெப்போதையும்விட வீரியமாகச் செயல்படுத்தி வருகிற சூழலில் பெரியாருடைய பார்ப்பன இந்துத்துவ எதிர்ப்பு உள்ளிட்ட சித்தாந்தம் என்பது கூடுதலாக வலுப்பெற்று மக்களைச் சென்றடைய வேண்டும். அதேநேரத்தில் இந்திய அரசக் கட்டமைப்பில் இருந்து தேசிய இனங் களின் விடுதலை என்பது மிக முக்கியமானது. தேசிய இனங்களின் விடுதலை இயக்கம் பார்ப்பனியச் சித்தாந்தத்தை மறுதலித்து இன உணர்வோடும், பெரியாரிய அம்பேத்கரிய, மார்க்சிய, கோட்பாடுகளை உள்ளடக்கியதாகவுமான நிலையில் அவ்வியக்கங்கள், சித்தாந்த அடிப்படையில் வலுப்பெற வேண்டும்.

- **இந்துத்துவ அதிகார வெறியும், இயக்கங்களின் தேவையும்...**

*இன்றைய இந்துத்துவ அதிகாரம், வெறியோடு ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு வருகிற சூழலில் இந்துத்துவத்தை, முழுமையாக எதிர்க்கின்ற தேர்தல் அரசியலில் பங்கெடுக்கும் கட்சிகளையும், இடதுசாரி இயக்கங்கள், தேசிய இன இயக்கங்கள், மதச் சிறுபான்மை இயக்கங்கள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இயக்கங்கள், அம்பேத்கரிய, பெரியாரிய இயக்கங்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் என வெவ்வேறு கொள்ளை வேறுபாடு உள்ள இயக்கங்களோடும், கூட்டமைப்பு, கட்டமைத்துச் செயல்படுவது என்பது வெகுமக்களின் நலனுக்கானதாக அமையும்.*

- **தேவேந்திரர் என்ற சொல் குறித்து...**

*தேவேந்திரர் என்ற சொல்லைத் தியாகி இமானுவேல் பேரவை மறுதலிக்கிறது. (காரணம் அது இந்துத்துவத்தை உள்வாங்கிய சொல்லாக இருப்பதால்) தேவேந்திரர் என்று சொல்லக்கூடியவர்கள் பள்ளர்களாகவும், பன்னாடிகளாகவும், காலாடியாகவும், குடும்பன் மற்றும் மூப்பன் எனவும், பல்வேறு பெயர்களில் பரந்து விரிந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் எல்லாரையும் ஒருங்கிணைக்கச் சுமார் 70 ஆண்டுகளுக்கும் மேலாகவே தேவேந்திரர் என்று தங்களை அழைத் துக்கொண்ட செயல்பாடு இருந்து வந்துள்ளது. கடந்த கால் நூற்றாண்டுக் காலமாக அச் சொல்லானது வேகமாகப் பேசப்பட்டு வருகிறது.*

*பல பிரிவுகளாக உள்ள பறையர்களை “ஆதிதிராவிடர்” என்றும், பல்வேறு பிரிவுகளாக உள்ள சக்கிலியர்களை “அருந்ததியர்” என்றும், படையாச்சி என்று பல பெயர்களில் உள்ளவர்களை “வன்னியர்கள்” என்றும், கள்ளர், மறவர், அகமுடையர் ஆகியோர் பல்வேறு பிரிவினர் களாக இருந்தாலும் தங்களை முக்குலத்தோர் என்றும், தேவர் இனத் தோர் என்றும் பொதுப் பெயரைச் சூட்டிக்கொண்டார்கள். அதைப் போன்றே, செட்டியார், கவுண்டர், வெள்ளாளர் போன்ற சாதிக் கூட்டத்தினர் பல்வேறு பிரிவினர்களாக இருந்தாலும்கூட தங்களை ஒரு பொதுப்பெயரில் அழைத்துக்கொண்டார்கள். அதைப்போன்றுதான் தேவேந்திரர் என்று சொல்லாடலைப் பள்ளர் சமூகத்தின் மக்களும், தலைவர்களும் அப்பெயரை சட்டரீதியாக அரசு அறிவிக்கக் கூறுகிறார்கள்.*

- **ஒடுக்கப்பட்ட இயக்கங்களின் கூட்டமைப்பின் தேவை...**

*கடந்த 80, 90ஆம் ஆண்டுகளில் ஒடுக்கப்பட்ட சாதிகளில் பெரும் பான்மையான மூன்று சாதிகளுக்குள்ளும் அனைத்துச் சமூகங்களில் உள்ள சாதியப் பாகுபாடுகளைப் போன்று இவர்களுக்குள்ளும் பாகுபாடுகள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. ஆனால் அப் பாகுபாடுகள் பகை முரண்பாடாக இல்லை. அன்றைய நிலையில் ஒடுக்கப்பட்ட இயக்கங்களில் உள்ள தலைவர்கள் குறைந்தபட்சம் மக்கள் நலன், கொள்கைப் பற்று, விடுதலைச் சித்தாந்த ஏற்பு உணர்வு, நிலையில் செயல்பட்டு வந்தனர். அரசு இயந்திரம், அரசியல் கட்சிகள், சாதிய வாதிகள், வெளிநாடுகளில் நிதிபெறும் தொண்டு நிறுவனங்கள், தங்க ளின் சுய நலனுக்காக ஒடுக்கப்பட்ட இயக்கத் தலைவர்களைப் பயன் படுத்திக்கொண்டு அதன்வழியாக ஒடுக்கப்பட்ட மக்களிடையே பகைமை உணர்வை வளர்த்து வந்தனர். இதில் ஒடுக்கப்பட்ட இயக்கங் களின் தலைவர்களும் தங்களின் சுயநலத்திற்காக இச் சூழ்ச்சிக்குத் துணைநின்று ஒருசில பலன்களையும் அடைந்து வருகின்றனர்.*

***இன்னும் கொடூரமாக ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. போன்ற இந்துத்துவ இயக்கங்கள் பள்ளர்களில் சிலரைத் தங்களுக்கான சித்தாந்தத்தைப் பள்ளர்களிடையே பரப்புவதற்காக முழு நேரப் பணியாளர்களாக நியமித்துக்கொண்டு அவர்கள் மூலமாகத் தேவேந்திரர்கள், ஆண்ட பரம்பரையைச் சேர்ந்தவர்கள்; இவர்கள் இந்திரன் வழிவந்தவர்கள்; இவர்களுக்கும் தீண்டாமைக்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. அம்பேத்கர், பெரியாரின் சித்தாந்தங்கள் இம் மக்களுக்கு எதிரானது என்பதோடு அதன் அடிப்படையிலேயே எஸ்.சி. என்ற பெயரிலோ அல்லது ஒடுக்கப்பட்டவர்கள் (தலித்) என்ற பெயரிலோ தங்களை அழைப்பது அருவருப்பானது என்பதுடன், எஸ்.சி. என்ற வகையில் இடஒதுக்கீடு பெறுவதே இழிவானது. அது எங்கள் சாதிப் பெருமையைச் சீர்குலைக்கக்கூடியது என்ற நச்சுக் கருத்தை அதிவேகமாகப் பரப்பி வருகின்றனர்.***

*இக் கருத்தில் தேவேந்திரகுல சமுதாய இயக்கத் தலைவர்கள், சிலர் தங்களின் சுயநலத்திற்காக இச் சதிகாரர்களோடு இணைந்து செயல் படுகிறார்கள்.*

*இவ்வாறான சூழலில் ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான நலனுக்கான, விடுதலைக்கான இயக்கங்கள், தமிழக அளவில் கூட்டமைப்பாக வலுப்பெற்று, சாதி ஒழிப்பிற்காக மிகக் கடுமையாக முன் எப்போதைக் காட்டிலும் கூடுதலாகச் செயல்பட வேண்டிய தேவை உள்ளது.*



# வேதங்கள் - மிகை மதிப்பீட்டு மயக்கம்!

• பொழிலன்

குமுகத்தை மதிப்பிடுவது, இலக்கியங்களை மதிப்பிடுவது என எல்லா வற்றிலும் ஓர் அரசியல் பார்வை உண்டு, மதிப்பிடுகிறவர்கள் எத்தகைய குமுக அரசியல் நோக்கங் கொண்டிருக்கிறார்களோ, அதிலிருந்தே மதிப்பீடுகள் அமையும்.

ஆண்டை அரசுக்குச் சார்பானவர்கள் - அத்தகைய சார்பிலேயே அனைத்தையும் மதிப்பிடுவார்கள். அடிநிலை வாழ் மக்களின் உரிமை களுக்குச் சார்பான கண்ணோட்டமுடையவர்கள் அந்த நோக்கத்தில்தான் அனைத்தையும் மதிப்பிட முடியும்.

அந்த அளவில் வேதங்களை எப்படி மதிப்பீடு செய்வது? பலரும் எவ்வாறு மதிப்பீடு செய்திருக்கிறார்கள்? அத்தகைய மதிப்பீடுகள் சரியானவைதாமா என்பன குறித்த பார்வை தேவை.

இந்தியாவில் சமய நெறிகள் யாவும் வேதங்களை அடியொட்டி யவையே எனச் சிலர் பரப்பி வருகின்றனர்.

இந்து மதத்தின் வேரே வேதங்கள்தாம் என்பதும், இந்தியப் பண்பாடே வேத வாழ்வியல் கருத்தாக்கங்களிலிருந்து வளர்ந்தவைதாம் என்பதும் அவர்களின் கருத்துகள்.

இந்தியாவின் சமயநெறிகள் மட்டுமல்ல, இந்திய வரலாற்றின் அடிப் படையே வேதத்திலிருந்தும், வேத காலங்களிலிருந்துமே உயிர்த்தது எனும் வரலாற்றறிஞர்களும் உண்டு.

இந்நிலையில், வேதங்கள் மீதான மிகை மதிப்பீடுகளை மூன்று வகையில் பிரித்துணரலாம்.

முதலாவது கால மிகை மதிப்பீடு, இரண்டாவது திறன் மிகை மதிப்பீடு, மூன்றாவது பயன் மிகை மதிப்பீடு. கால மதிப்பீடு என்பதில் வேதங்களைக் கால மதிப்பீடற்றது என்ப தாகவே வைதீக இந்து மதத்தார் கூறிக் கொள்வதுண்டு. அதாவது வேதம், தான்தோன்றியாக(சுயம்புவாக) உருவெடுத்தது என்பதே அவர்களின் கருத்து.

> “வேதங்கள் யாராலும் எழுதப்படவில்லை. அதாவது அவை மாந்தர்களால் எழுதப்படவில்லை... முதன்முதலில் யாராவது வேதத்தை வெளியிட்டதாக யாரைப் பற்றியும் கேள்விப்பட்டதே இல்லை.... எது உண்மையானதோ, அது

எல்லையற்றதாகவும் என்றும் உள்ளதாகவும் இருக்க வேண்டும். அதுதான் உண்மையின் ஒரே உரைகல். அ'து எப்போதும் அழியாமல் என்றும் ஒரே போலவே இருக்கும்.'' (ஞானதீபம் - 7 பக். 81-82)

*- என்று விவேகானந்தர் சொல்வது போன்றே வைதீக(இந்து) மதப் பரப்புநர்கள் பலரும் கூறி வந்திருக்கின்றனர். பெரும்பாலான வைதீக மதத்தலைவர்கள் கருத்தும் இது போன்றதே.*

"................................................ வேதம்
ஆதி அந்தமில் லையது நெறியெனும்
வேதியனுரை .......................''

*- என மணிமேகலை - **27(103-105)** காட்டும் பிரம்மவாதி என்னும் வைதீகக் கருத்தாளரின் உரையில்,*

"யாதொன்றும் சார்ந்து தோன்றுதல் இல்லாது, தான்தோன்றியாகிய (சுயம்பாகிய) ஆரணமாகிய வேத புருடனுக்குத் தோற்றமும், கேடும் இல்லை''

*- எனக் கூறும் வரிகள் இருப்பது கவனிக்கத்தக்கது.*

*ஆக, வேதம் தான்தோன்றி(சுயம்பு) எனும் கருத்து நெடுங் காலமாகவே ஆரிய வைதீகக் கருத்தாளர்களால் பரப்பப்பட்டு வந்திருப்பதை அறியலாம்.*

*அதேபோது அக் கருத்து பரப்பப்பட்ட காலம் முதலே அதன் பொய்ம்மைகள் மறுக்கப்பட்டும் வந்திருக்கின்றன.*

*மணிமேகலை, திருமந்திரம், நீலகேசி எனப் பழந்தமிழ் இலக்கியங்கள் தொடங்கி பெரும்பாலான தமிழிலக்கியங்கள் வேதங்களைப் பற்றி மட்டுமல்லாது, அது ஒரு தான்தோன்றி(சுயம்பு) என்பதான கருத்தையும் கடுமையாகவே மறுத்திருக்கின்றன.*

*இருப்பினும் வேதங்கள் தான் தான்தோன்றியானவை (சுயம்பானவை) என்பதான மிகைமதிப்பீடு கால வரலாற்றில் தொடர்ந்து வைதீகர்களால் பரப்பப்பட்டு மக்களை மயக்கப்படுத்தி வந்திருப்பதைக் கவனித்தாக வேண்டும்.*

*அடுத்து, வேதத்தின் திறன் மதிப்பீட்டுக் கருத்துகளும் அப்படியே.*

''வேதங்களில் இல்லாத எந்தப் புதிய மதக் கருத்தும் உலகில் எங்கும் இல்லை''

*- என்பதும்,*

''வேதங்களில் காணப்படாத உண்மையோ, முறைமையோ (நியதியோ) இல்லை, அவற்றில் ஆராயப்படாதது ஒன்றுமில்லை''

*- என்றவாறெல்லாம் விவேகானந்தர் **(ஞானதீபம் - 6 (374, 403)** குறிப்பிடுவதும்,*

''வேதத்திற்கு மாறுபட்ட நூல்கள் நரகத்திற்கே வழிகாட்டிகள், அவையே பொய்யானவை, அழியும்''

*- என்றவாறாகவெல்லாம் மனுதர்ம சாத்திரம் உரைப்பதும் வேதங்கள்*

பற்றிய மிகைப்படுத்தப்பட்ட கருத்துகளாகவே அறிய வேண்டும். அதேபோல் வேதங்களின் பயன் மதிப்பீட்டுக் கருத்தாக,

> ''வேதங்களே ஐம்(பஞ்ச)பூதங்களைக் காக்கின்றன. வேத மந்திரங்களே ஓமங்(ஹோமங்)களுடன் கதிரவனை அடைந்து மழையைப் பொழிவிக்கின்றன. அதனால் பருவமும், அதனால் உணவும், அதனால் மக்களும் உண்டாகிறார்கள்''

- என்று மனுதர்மமும்,

> ''வேத ஒலிப்புகள்(சப்தங்கள்) அண்டவெளிச் சூழலில் பரவிக் கொண்டிருப்ப தாலேயே உலகத்தில் (லோகத்தில்) அனைத்து வகையிலும் மங்கலம் உண்டாகும். அப்படிப்பட்ட ஆற்றல்(சக்தி) அந்த மந்திரங்களுக்கு இருக்கின்றன''

- என்று காஞ்சி பரம குரு சங்கரனும் கூறிப் பெருமைப்படுத்துவதும், வேதங் கள் தூய்மை(புனித)த் தன்மை வாய்ந்ததாகவும், ஆரியப் பார்ப்பனர்கள் மட்டுமே அவற்றைப் படிக்கவும், ஓதவும் வேண்டும் என்றும், பிறர் அவற்றைத் தீண்டவும் கூடாது என்றும் தொடர்ந்து ஆரியப் பார்ப்பனர்கள் பரப்பல் செய்து வருவதும்,

> ''பிராமணன் வேதம் ஓதுகையில் சூத்திரன் அருகே இருக்கக்கூடாது. அருகிலிருந்து வேதங்களைக் கேட்ட சூத்திரனின் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும்''

- என்றும்,

> ''வேதத்தை அறிந்தவனே (பிராமணனே) பாவத்தைப் போக்கவல்லான் (மனு : 12 : 101), எல்லாரினும் உயர்ந்தவன் (மனு : 12 : 103)''

- என்றுமாகவெல்லாம் வேதம் குறித்து மனுதர்ம சாத்திரம் சொல்லுவதும் வேதங்களின் பயன் குறித்தான மிகை மதிப்பிடல்களே என அறியலாம்.

ஆக, அவ்வாறு அவர்களால் பரப்பப்பட்டு வந்ததற்கும், வடக்கே மனு தர்மத்தின்படி அத்தகைய உயர்மதிப்பீடுகளின்படி வேத ஆட்சி நடத்தப் பட்ட குப்தர்கள் காலம் 'பொற்காலம்' என்று அவர்கள் சொல்லிக் கொண்டதற்கும் அத்தகைய மிகை மதிப்பீட்டின் துணையோடு ஆளுமைப் போக்கு வெறித்தாண்டவம் ஆடியதே காரணங்களாக இருக்கலாம்.

வேதங்களைப் படிப்பதும் பாராமல் ஓதுவதும் ஆரியப் பார்ப் பனர்க்குரிய கடமைகளில் முதன்மையானதாக அவர்கள் சொல்லிக் கொண்டனர். பழந்தமிழகத்தில்கூட பல்லவர் காலங்களில் வேதங்கள் ஓதிவந்த ஆரியப் பார்ப்பனர்களுக்கே ஏராளமாக நிலங்களைக் கொடைகளாக அளித்தனர். அவ்வாறு தரப்பட்ட கொடைகளுக்குப் 'பாடகம்' என்று பெயரிட்டு அழைத்தனர்.

தொடர்ந்து பிற்காலச் சோழர்களான முதலாம் இராசராசன், இராசேந்திரன் காலங்களிலும் ஆரியப் பார்ப்பனர்களுக்கு ஏராளமாய் நிலங்கள் கொடைகளாக அளிக்கப்பட்டன. அவ்வாறு கொடைகளாக அளிக்கப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஆரியப் பார்ப்பனர்கள் வேதங்களையும், மந்திரங்களையும் நன்கு கற்றவர்களாக இருந்திடல்

வேண்டும் எனும் நெறியே மிகக் கண்டிப்புடன் கடைபிடிக்கப் பட்டிருக்கிறது.

இவ்வாறெல்லாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மேலாண்மை செய்துவருவதோடு வேதங்கள் தூய்மையான (புனிதமான)வை என்று எண்ணங்கொள்ளும் வகையில் ஆரியப் பார்ப்பனிய நிறுவனங்கள் தொடர்ந்து கருத்துப் பரப்பிச் செயலாற்றி வந்திருக்கின்றன.

அவ்வகையில், மனுதர்மம் மட்டுமன்று, ஆரியத்திற்கு அடிபணிந்த அரசர்கள் தொடங்கி, இக்காலக் காஞ்சி சங்கராச்சாரிகளும் இப்போதைய இந்திய ஆட்சியாளர்களும், அன்றைய இராசாசி தொடங்கி பிந்தைய 'சோ', குருமூர்த்தி போன்ற இளைய குடுமிகள் வரையிலும் வேதங்களைத் தெய்வத்தன்மை கொண்டவையாகப் போற்றுவதும், புகழ்வதும், பேணுவதும், பரப்புவதும் தொடர்கின்றன.

வேதங்கள் பற்றிய உயர் மதிப்பீட்டை ஆரியப் பார்ப்பனியக் கருத்தாளர்கள் மட்டுமே கொண்டிருக்கவில்லை. அப் பார்ப்பனியக் கருத்துகளுக்கு அடிமைப்பட்டவர்களும் வேதங்களை உயர்வாகவே மதிப்பிட்டிருந்தனர் - என்பதைஞ் பார்த்தோம்.

மார்க்சியக் கண்ணோட்டமுடையவராகக் கருதப்படுபவரும், மார்க்சிய இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளராகவும், கேரளத்தின் முதல் அமைச்சராக நீண்ட காலம் இருந்தவருமான இ.எம்.எசு. நம்பூதிரிபாடுவின் கருத்துகள் இவ்வகையில் கவனிக்கத்தக்கன.

அவர் போன்ற கருத்துடையவர்களாகவே இந்திய மார்க்சியர் பலரும், இந்திய வரலாற்றைச் சிறப்புக்குரியதாகக் கருதி மயக்கங் கொண்டோராக பலரும் இருப்பதினால் அவரின் கருத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது சரியானதாக இருக்கும்.

அவர் மலையாளத்தில் எழுதிய 'இந்திய வரலாறு' - எனும் நூல் 1975-இல் வெளிவந்தது. தோழர் பி.ஆர். பரமேசுவரனால் அந் நூல் தமிழில் மொழிபெயர்த்து 98-இல் வெளியிடப்பட்டது.

அவ் வெளியீட்டில், பி.ஆர். பரமேசுவரன் தன் குறிப்புரையில்,

"இந்திய வரலாறுபற்றி, மார்க்சியக் கண்ணோட்டத்துடன் தமிழில் வெளிவரும் முதல்நூல் இது என்று கருதுகின்றேன்"

- என்பதாகக் குறிப்பிடுகிறார்.

அதாவது இதற்கு முன்னர் வெளிவந்த இந்தியாவைப் பற்றிய வரலாற்று நூல்களெல்லாம் மார்க்சியக் கண்ணோட்டத்தோடு வந்தவையல்ல என்பதும், இதுவே மார்க்சியக் கண்ணோட்டத்தோடு வந்த முதல் நூலாகும் என்பதும் பி.ஆர். பரமேசுவரனின் கருத்து. பி.ஆர். பரமேசுவரனின் இந்தக் கருத்து 98-ஆம் ஆண்டின் கருத்து. அதாவது அதுவரை இந்திய வரலாறு பற்றிய நூல் எதுவும் மார்க்சியக் கண்ணோட்டத்தோடு வரவில்லை என்பதே அவரின் கருத்து என்பது கவனிக்கத்தக்கது.

*அடுத்து அந்த நூலில் இ.எம்.எசு. நம்பூதிரிபாடு குறிப்பிடும் கருத்துகள் மேலும் அதிகப்படியான கவனத்திற்குரியன.*

> "சிந்து, மகத நாகரிகங்களைப் போல பௌதிகத் தடயங்களோ, வேத உபநிடதங்களோடு ஒப்பிடக்கூடிய இலக்கியங்களோ தென்னிந்தியாவில் கண்டெடுக்க முடியாதது.." (பக். 49)

> "வட இந்தியாவைவிட உயர்வு அடைந்திருந்த நாகரிகம் வளர்ந்திருந்த சமுதாய அரசியல் அமைப்பை தென்னிந்தியர்கள் உருவாக்கியிருந்தனர் என்றும், அது வட இந்தியாவினுடையதைவிட புராதனமானது என்றுமுள்ள வாதத்தை அங்கீகரிக்கக்கூடிய எந்த ஓர் ஆதாரத்தையும் விஞ்ஞான வரலாறு அளிக்கவில்லை..." (பக். 51)

> "வேதங்கள், உபநிடதங்கள், புராண இதிகாசங்களில் பெரும்பாலும் ஜைன, புத்த போதகர்களின் நூல்கள், அர்த்த சாஸ்திரம் முதலியவை எல்லாம் எழுதப்பட்ட காலத்தில் அவற்றுக்குச் சரிநிகராகக் கருதக்கூடிய ஒரு நூலும் தென்னிந்தியாவில் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. அவற்றுக்கெல்லாம் பிறகு நீண்ட காலம் கடந்த பின்தான் சங்க நூல்கள் இயற்றப்பட்டன." (பக்.51)

*- என்றவாறான இ.எம்.எசு. நம்பூதிரிபாடுவின் மேற்படி கருத்துகள் எந்தளவுக்குக் குறைபாடுடையன என்பதைச் சற்று ஆழ்ந்து வரலாற்றாய்வு செய்வோர் அனைவரும் உணரமுடியும்.*

*ஆரியப் பார்ப்பனியச் சார்பு நிலையில் மட்டுமல்லாது, இல்லாத இந்திய வரலாற்றை இருந்ததாகவும், இருப்பதாகவும் புனைவுபடுத்துவோர் மட்டுமே இ.எம்.எசு. நம்பூதிரிபாடுவின் கருத்தை ஒப்புவர். ஆனால் அறிவியல் முறைப்படி, குமுக இயங்கியல் நெறிப்படி தமிழக வரலாற்றையும், ஆரியப் பார்ப்பனிய வாழ்முறை வரலாற்றையும் ஆய்வு செய்வோர் எவராலும் அக் கருத்துகளை ஏற்க இயலாது.*

*எந்த வகையிலும் வரலாற்றுப் பதிவு இல்லாத ஆரியப் புனைவுக் கருத்துகளை வரலாறு என ஏற்றுக்கொள்வதும், அவர் தன்னளவில் மதிப்பீடு செய்கிற கால அளவீடுகளை அப்படியே ஒப்புக்கொள்வதும் எந்த வகையில் மார்க்சிய வழிகாட்டலாக இருக்க முடியும்.*

*வேதங்களின் புனைவுகளையும், இட்டுக் கட்டல்களையும் அறிவியல் நெறிப்படி விளங்கிக்கொள்ளுகிற ஒருவர் அவற்றின் காலங்களை கி.மு.விற்கு நெடுங்காலத்திற்கு முன்னதாக எப்படிக் கருதவும் ஏற்றுக் கொள்ளவும் முடியும்? ஆனால், தான் மார்க்சிய வழியானவர்கள் என்பதைக் காட்டிலும், வைதீக வழியினராகவும், இந்திய வழியினராகவும் மூழ்கிச் சிந்தித்துப் பழகியதால்தான் இ.எம்.எசு. நம்பூதிரிபாடு அவர்களாலும், அவர் போன்றவர்களாலும் வரலாற்றை இயங்கியல்படி உணரவோ, ஆய்வு செய்யவோ முடியவில்லை.*

*இந்திய வரலாற்றை இந்தபடியாக எழுதிக்காட்டிய அவர்தான் - இந்தியாவை 'வேதங்களின் நாடு' - என்பதாக மதிப்பிட்டுப் பெருமைப் பட்டுக் கொண்டார்.*

*‘வேதங்களின் நாடு’ - என்ற தலைப்பில் மலையாள மொழியில் இ.எம்.எசு. நம்பூதிரிபாடு எழுதிய நூலை, அதே பெயரில் பி.ஆர். பரமேசுவரன் தமிழில் மொழிபெயர்த்து 1987-இல் குறிப்பு எழுதி 2007-இல் பாரதி புத்தகாலயத்தின்வழி முதல் பதிப்பாகக் கொண்டுவரப்பட்டது.*

*அந்த மொழிபெயர்ப்புக் குறிப்பிலும் பி.ஆர். பரமசுவரனின் கருத்து அதே தன்மையுடையதே.*

> “வேதங்களின் நாடு - என்ற தலைப்பில் தோழர் இ.எம்.எசு அவர்கள் மலையாள மொழியில் எழுதியுள்ள இச் சிறு நூல் மார்க்சியப் பார்வையில் இந்தியாவின் சமூகக் கலாச்சார வளர்ச்சியினை விவரிக்கிறது. இந்திய சமூகத்தை மார்க்சிய அடிப்படையில் புரிந்துகொள்ளவும் ஆய்வு செய்யவும் விரும்புவோருக்கு இந் நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.”

*- என்பது பி.ஆர். பரமேசுவரனின் கருத்து.*

*வேதங்களின் நாடு - என அடையாளப்படுத்துவதே எந்த அடிப்படையில் மார்க்சிய பார்வையுடையதாக இருக்க முடியும்?*

*வேதங்களின் பண்பாட்டை ஆரியப் பண்பாடு எனப் பெருமைப்பட்டு அடையாளப்படுத்த விரும்புகிற நம்பூதிரிபாடு அவர்கள், அதை சிந்து சமவெளிப் பண்பாட்டிற்கோ, திராவிடப் பண்பாட்டிற்கோ காலத்தால் பிந்தையது என்று கருதுதல் கூடாது என்கிறார்.*

> “சிந்து கலாச்சாரத்திற்கும் தென்னிந்தியாவின் திராவிடக் கலாச்சாரத்திற்கும் உள்ள மேன்மையை மிகைப்படுத்துவதோ, ஆரியர்களால் தோற்றுவிக்கப்பட்ட வைதீகக் கலாச்சாரத்தின் மேன்மையைக் குறைத்துப் பார்ப்பதோ தவறானதாகும்” (பக். 9)

*- என்று நம்பூதிரிபாடு கருத்துக் கொண்டிருந்தார்.*

> “ஆரிய - திராவிட உறவுகள் மிக முக்கியமான மாறுதல்களை ஏற்படுத்தியது. தென்னிந்தியாவின் செல்வாக்கு வடக்கிலும், வடக்கின் செல்வாக்கு தெற்கிலும் பரவத் தொடங்கியது. இதில் முதலாவதுடன் ஒப்பிட்டால் இரண்டாவது அதிக வலுவானதாக இருந்தது” (பக். 10)

*இவ்வகையில் நம்பூதிரிபாடு - அவர்களுக்கு வடக்கத்திய இருப்புகளின் மீது பெருத்த மதிப்பீடும், மயக்கமும் இருந்ததை உணரமுடியும்.*

*அதேபோல ஆரியப் பண்பாடுதான் இந்தியப் பண்பாட்டின் அடிப்படையாக இருக்கிறது என்பதாகச் சொல்வதோடு அதை அப்படியே ஏற்றுக் கொள்பவராகவும் நம்பூதிரிபாடு இருந்துள்ளார்.*

> ‘‘சமுதாயத்தில் மெல்ல மெல்ல ஏற்பட்டு வந்த வளர்ச்சி மற்றவர்களைக் காட்டிலும் உயர்வான கலாச்சார நிலைக்கு இட்டுச் சென்றது. அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் உயர்வான ஒரு மொழியை உருவாக்கினர். இவ்வாறு ஓர் உன்னத நிலையை அடைந்த ‘ஆரிய மொழி’ என்று அறியத் தொடங்கியது. பின்னர்ச் சமஸ்கிருத மொழியாக வளர்ச்சி யடைந்தது.’’ (பக். 14)

*ஆக. நம்பூதிரிபாட்டிற்குச் சமசுக்கிருதம் உயர்ந்த மொழி என்ற மதிப்பீடு இருந்ததையும் அறிய முடிகிறது. அம்மொழி உன்னத மொழியாக உயர்த் திக் காட்டப்பட்டது என்று அல்லாமல் அதுவே உன்னதமொழி என்பதான வல்லதிகாரக் கருத்தை அவர் கொண்டிருந்ததை அறிய முடிகிறது.*

*சமசுக்கிருத மொழியைப் பற்றிய கணிப்பில் மட்டுமல்லாது, வேதங்கள் பற்றிய கணிப்பிலும் நம்பூதிரிபாடின் கருத்து பிழைபாடானது மட்டுமன்று, ஆரியப் பார்ப்பனியச் சார்பானதாகவே இருப்பதை ஆய்ந்தோர் அறிய முடியும்.*

"வேதங்கள் சமசுக்கிருத மொழியில்தான் எழுதப் பட்டன'' *(பக். 16)*

*என்று அழுத்தம் கொடுக்கும் நம்பூதிரிபாடு,*

> ''வேதங்கள், உபநிஷத்துகள், பல்வேறு விஞ்ஞானத் துறைகள் குறித்து எழுதப்பட்ட நூல்கள், புராண இதிகாசங்கள், காவிய நாடக இலக்கிய நூல்கள் ஆகியவற்றின் மூலமாக மனித சமூகத்தின் கலாச்சார வளர்ச்சிக்கும் விலை மதிக்க முடியாத பங்கு செலுத்த ஆரியச் சமூகத்தினால் முடிந்தது''

*- என்று ஆரியக் குமுகத்தினை இட்டுக்கட்டிப் பெருமைப்படுத்திக் காட்டுகிறார்.*

*வேதங்களிலோ, பிற ஆரியச்சார்பு இலக்கியங்களிலோ உள்ள உள்ளடக் கங்கள் என்ன வகையின என முந்தைய பகுதிகளில் விரிவாக விளக்கியிருப்பதால் இங்கு அவை குறித்து விளக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் அவற்றால்தாம் மாந்தக் குமுகத்தின் பண்பியல் வளர்ச்சிக்கான பங்கு நிறைய கிடைத்ததாக நம்பூதிரிபாடு கூறுவதின் இட்டுக்கட்டலை ஆழ்ந்து பயின்றோர் உணர்ந்தாக வேண்டும்.*

*வேதங்களையும், ஆரியத் தொன்மங்களையும் அவர் உயர்வாக மதிப்பிட்டுக் கொள்வது மட்டுமன்று, அவற்றுக் கெதிரானவற்றை யெல்லாம் எதிர்த்து நிற்க வேண்டும் என இலைமறை காயாகச் சொல்லியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.*

> ''வேதங்களின் நாடு, என்ற பெயர் சுட்டிக்காட்டுவது போல புனிதத் தன்மையின் போர்வையணிந்து இந்தியாவின் சரித்திரத்தையும் சமூகத்தையும் பார்க்கக்கூடிய எந்த முயற்சியும் நாட்டை எதிர்நோக்குகின்ற நெருக்கடிகளுக்குப் பரிகாரமாகாது.
>
> நமது கடந்த காலப் பாரம்பரியத்தில் நாம் பெருமைப்படக்கூடியவை என்பது போலவே அதற்கு மாறான அம்சங்களும் உண்டு. இரண்டாவது அம்சம்தான் இந்தியா பிரிட்டீசு ஆட்சிக்கு அடிமைப்படவும் ஒன்றரை நூற்றாண்டுக் காலம் அந்த ஆதிக்கம் நீடிப்பதற்கும் காரணமாக இருந்தது.
>
> எதிர்காலத்திலும் அன்னிய ஆதிக்கம் உட்பட வெட்கக்கேடான பல நிலைமைகளையும் தாங்க நாம் நிர்பந்திக்கப்படாமல் இருக்க வேண்டுமானால் நம்முடைய கடந்த காலப் பாரம்பரியத்தில் பெருமைப்படக்கூடியவையாக உள்ளவற்றைப் போற்றக்கூடிய நேரத்திலேயே அவற்றுக்கு மாறானவற்றுக்கு

எதிராக உறுதியாக நின்று போராடவும் வேண்டும். அப்போது தான் பண்டைய கால பாரதத்திற்கு அன்றைய உலகில் இருந்தது போல இன்றைய இந்தியா நவீன உலகத்தில் தலைநிமிர்ந்து நிற்க முடியும்.''

- என்று தன் கருத்தை மிகத் தெளிவுபட முன்வைத்திருக்கிறார் நம்பூதிரிபாடு.

இதில் அவரின் தெளிவான கருத்து எது என்பதை ஒருமுறைக்கு இருமுறை மேற்கண்ட பத்திகளைப் படித்தாலே தெரிந்துகொள்ளலாம்.

இந்தியாவுக்குரிய பழமை தொன்மப் பெருமைகளுக்கு, வேதங்கள் உள்ளிட்ட சிறப்புகளுக்கு எதிரான கருத்துகள்தாம் பிரிட்டீசார் இந்தியாவை அடிமைப்படுத்தக் காரணமாய் இருந்ததாக நம்பூதிரிபாடு கருதுகிறார்.

எனவேதான் கடந்த கால இந்தியச் சிறப்புகளைக் கண்டு பெருமைப் படுகிற அதே நேரத்தில் அவற்றுக்கெதிரானவற்றுக்கு உறுதியாக நின்று போராடவும் வேண்டும் என்கிறார் நம்பூதிரிபாடு.

அப்போதுதான் பண்டைய பாரதத்திற்கு உலகில் இருந்தது போன்று இப்போதும் தலைநிமிர்வு இருக்குமாம்.

ஆக, முழுக்க முழுக்க ஆரியப் பார்ப்பனிய முடைநாற்றம் வீசுகிறபடி யான அவரின் கருத்தைக்கொண்டு, அவரும், அவரைப் போன்ற மார்க்சியர் களாகத் தங்களைக் காட்டிக் கொண்ட, காட்டிக் கொண்டிருக்கும் ஆரியச் சார்பு வெறியர்களையும் இனங் கண்டாக வேண்டும்.

பழங்காலப் பாரதப் பெருமை என்று எந்த அளவில் பார்ப்பனிய முடைநாற்றத்தைப் பெருமைக்குரியதாக நம்பூதிரிபாடு கூறிக் கொள்கிறார் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்தியாவிற்குள் அடக்கி அமிழ்த்தப்பட்டிருக்கும் பல்வேறு மொழித் தேசிய இனங்களின் வாழ்க்கையை, பண்பாட்டை, இலக்கியங்களை, அறிவாக்கங்களையெல்லாம் நசுக்கி மேலேழுந்து கொக்கரிக்கிற வெறி பிடித்த ஆதிக்கத்தைத்தான் பாரதப் பெருமை என்று நம்பூதிரிபாடு(கள் போன்றோர்) எக்காளமிட்டுக் கொள்வார்கள் எனில், அந்த ஆளுமை வெறிப் பெருமைகளை அழித்து ஒழிப்பதும், அவற்றை வீழ்த்தி ஒவ்வொரு தேச உரிமை வாழ்வையும் மிளிரச் செய்வதிலும்தான் ஒடுக்கப்பட்ட தேசங் களின், மக்களின் பெருமை உள்ளது என்று நாம் போர்ப்பறை எழுப்பியாக வேண்டும்.

ஆரியச்சார்பினர்களுக்கு வேதங்களும், இந்தியாவும் பெருமைப்பட்டுக் கொள்வதற்கானவையாக இருக்கலாம். ஆனால் நமக்கு வேதங்களும், இந்தியாவும் அதிகார வெறி படைத்ததாகவே உள்ளன.

எனவே, 'வேதங்களின் நாடு' - இந்தியா என்று அவர்கள் பெருமைப்படு வார்களெனில், வேத வெறி நாடே இந்தியா என்று முரசறைந்து நாம் அடையாளப்படுத்திட வேண்டும்.

●